www.tamilarangam.net

# சுவடுகள்

# இலங்கை அகதிகள்..

## 300 ரூபாய்க்காக குடும்பக் கட்டுப்பாடு!

...படும் பாடு

அரக்கோணத்தை அடுத்துள்ள ஆட்டுப்பாக்கம் கிராமத்தில் வசிக்கிறாள் கல்பனா. ஜூன் 7-ம் தேதி வரை துள்ளி விளையாடிக் கொண்டிருந்த இந்த மூன்று வயதுக் குழந்தை, இன்று யாரைப் பார்த்தாலும் மிரள்கிறாள். இரவுகளில் திடீர் திடீரென்று தூக்கத்திலிருந்து எழுந்து அலறுகிறாள். உணவுகூட உண்ண முடியாமல் தவிக்கிறாள். சிறுநீர் போகக்கூட முடியாமல் கதறியழுகிறாள்.

கல்பனாவுக்கு நேர்ந்தது என்ன...?

கல்பனாவின் தந்தை கணபதி சொல்கிறார்: "கடந்த ஜூன் மாசம் ஏழாம் தேதி நான் வெளியே ஒரு வேலையா போயிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கிட்டிருந்தேன். என் மகள் கல்பனாவின் அழுகுரல், முள்வேலிப் பக்கமிருந்து கேட்டது. ஓடிப்போய்ப் பார்த்தேன். வேலி மறைவிலிருந்து என் மகளை வெளியே வீசிட்டு ஒருவன் ஓடறதைப் பார்த்தேன். அவன் எங்க ஊரில் வசிக்கும் தாண்டவராயனுடைய மகன் அச்சுதன். வயசு இருபது இருக்கும்... ஓடிப்போய் என் மகளை வாரி அணைச்சுக்கிட்டேன். தேம்பித் தேம்பி அழுதுக்கிட்டிருந்த கல்பனாவி உடல்லயும் உடைகள்லயும் ரத்தம் வடிஞ்சுக்கிட்டிருந்துச்சு. குழந்தையா நிக்கக்கூட முடியாம கால்கள் துவண்

(7ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்புள்ள நெஞ்சங்களே....

வெளிநாட்டில் வசிக்கும் தமிழ்மக்களுக்கு நோர்வேயில் தமிழ்- நோர்வே மக்கள் இணைவுகூடம் விடுக்கும் வேண்டுகோள்:-

இன்று இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழும் எமது சகோதரர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையால் பலர் உண்ண உணவின்றி, போதிய சுகாதார வசதிகளின்றி சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர். பல பிள்ளைகள் பெற்றோரை இழந்தும், பல பெற்றோர் தமது பிள்ளைகளை இழந்தும் பரிதாபகரமான நிலையிலே வாழ்கின்றார்கள். ஐரோப்பிய நாடுகளிலும் ஏனைய வெளிநாடுகளிலும் பாதுகாப்பாகவும் வசதியுடனும் வாழும் நாம், தாய்நாட்டில் துன்பங்களைச் சுமந்துவாழும் எம்மவர்களுக்காக உதவிக்கரம் நீட்டவேண்டிய அவசிய தேவை இன்று எழுந்துள்ளது. அது எமது கடமையுமாகும். இதன் அடிப்படையில் நோர்வேயில் இயங்கும் தமிழ்- நோர்வே மக்கள் இணைவுகூடமானது, நோர்வேயில் இருக்கும், பல அபிவிருத்தி அடைநதுவரும் நாடுகளுக்கு நேரடியாக உதவிக்கரம் நீட்டிவரும் தொய்யன் தேவாலயத்துடனும் (Kirkens Bymisjon), உலகின் பல பாகங்களில் சமூகசேவை ஆற்றிவரும் றெட்பாணா (Red Barna) ஸ்தாபனத்துடனும் இணைந்து இலங்கையில் துயருறும் எமது மக்களுக்கு உதவ முன்வந்துள்ளது. எனவே உங்களால் முடிந்த பணவுதவியை இவ்வமைப்பின் தபாற்கட்டளைக்கு அனுப்புவதன்மூலம் உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். நீங்கள் நேரடியாக உதவுவதன் மூலமோ, உங்கள் நண்பர்களுக்கு இவ்விடயத்தைத் தெரிவிப்பதன் மூலமோ உங்கள் பங்களிப்பை செலுத்தலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-
தொய்யன் தேவாலயப் பொறுப்பாளர்
Kirken Bymisjon- Stig Utnam
Red Barna- Toril Jorgensen
தமிழ் நோர்வே இணைவுகூடம்

தமிழ் நோர்வே இணைவுகூடம்
Herslebs Gate 43,
0578, Oslo 5



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'USAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

# நீண்ட பயணத்தின் சில காலடிகள்
## இரு வருடங்கள்

சுவடுகளின் வயது இரண்டாகிவிட்டது. எத்தனையோ பத்திரிகைகள் மிகநீண்ட காலமாக வெளிவருகின்றன. இரண்டு வருடங்கள் என்பது மிகப்பெரிய காலமல்ல. ஆயினும் சுவடுகள் உருவாகி வளர்ந்தசூழல் என்று பார்க்கும்போது இரு வருடங்கள் பெருமைப்படக்கூடிய காலமாகத்தான் தோற்றந் தருகிறது.

ஐரோப்பாவின் பலநாடுகளில் இருந்தும் தமிழ்ச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. ஆனால் நோர்வேயைப் பொறுத்தவரை சுவடுகள் மட்டுமே பரந்தளவில வாசகர்களைச் சென்றடைகிறது.

இருவருடங்களுக்கு முன்னர் இந்தச் சஞ்சிகை ஆரம்பித்த காலத்தில் சுவடுகளில் பலர் பங்களித்தனர். சுவடுகள் வளரவேண்டும் என்ற ஆர்வத்தைவிட சுவடுகள் மூலம் தம்மை வளமாக்க வேண்டும் என்ற ஆர்வம் சிலருக்குப் பெரிதாக இருந்தது. சுவடுகளை 'வாங்கி' விடவும் சிலர் முயன்றனர். சுவடுகள் தமக்கு சார்பான சஞ்சிகை என்பதாகக் காட்டுவதிலும் சிலர் குறியாக இருந்தனர். இருந்தும் சுவடுகள் தமது சார்பாக வளரவில்லை என்பதற்காக சுவடுகளை வாங்காமல் விட்டதோடு, மற்றவர்களைப் பகிஷ்கரிக்கத் தூண்டவும் சில 'நல்ல' உள்ளங்கள் முயன்றிருக்கின்றன.

மறுபுறத்தில் சுவடுகள் ஆரம்பித்த நாளிலிருந்து அதற்குத் தமது ஒத்துழைப்பை வழங்கி சுவடுகள் நோர்வேயின் தமிழ்ச் சஞ்சிகை யென்ற நிலையை எய்த உதவியவர்களை மறந்துவிட முடியாது. இவ்வாறு சிலராவது இருப்பதால்தான் சுவடுகள் இருவருடகாலமாக தொடர்ந்தும் வெளிவர முடிகிறது.

சுவடுகள்பற்றி பல்வேறுவகை விமர்சனங்களும் கருத்துகளும் வாய்வழியே உலாவருகின்றன. சுவடுகளை சந்தாசெலுத்தி வாங்காதோரும் பகிஷ்கரிப்போருமே இவ்வாறான அபிப்பிராயங்களை பரப்புவதில் கருத்தாயுள்ளனர். சுவடுகளை வாங்கி வாசிப்போரைவிட இவர்கள் மிக அக்கறையோடு ஒருவரி தவறவிடாது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவடுக்களை வாசிப்பதில் இருந்து இங்கு சுவடுகள் தவிர்க்க முடியாத ஒரு தாக்கத்தை பல்வேறு மட்டங்களிலும் ஏற்படுத்தியுள்ளமை தெளிவாகிறது.

பலதடவைகள் நாம் வாசகர்களிடம் கூறியதுபோல் நேரம் மிக அரிதாக கிடைக்கும் இயந்திர மயமான சூழலில் பலருடைய நேரத்தையும் உழைப்பையும் செலவிட்டு சுவடுகள் வெளியாகிறது. முதல் இதழ் வெளிவந்ததது போது 'இது ஒண்டோடை நிண்டுபோம்', 'அடுத்து வந்தாப் பாப்பம்', 'உப்பிடி எத்தனையோ பேர் வெளிக்கிட்டவை, இவைதான் மிச்சம்' என்ற பல வாழ்த்துகள் கிடைத்தன. எனினும் சுவடுகள் தடைகளைத் தாண்டி இப்போதும் வெளிவருகிறது. தொலைபேசி வழியாகவும் மறைமுகமாகவும் சுவடுகள் மிரட்டப்பட்டாலும் வாசகர்களது பலத்தோடு சுவடுகளை வெளிக்கொணர முடிகிறது.

சுவடுகளை எப்போதும் எதிர்கொள்ளும் பெரிய பிரச்சனை நிதிப் பிரச்சனையே. பலர் இலவசப் பிரதி என்ற நினைப்பிலேயே சுவடுகளைப் பெறுகிறார்களோ எனச் சிலவேளை சந்தேகம் எழுகிறது. சந்தாவைச் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையிலேயே இவர்களுக்கு சுவடுகள் தொடர்ந்தும் அனுப்பப்படுகிறது. இவர்கள் இனியாவது தமது சந்தாப் பணத்தை ஒழுங்காகச் செலுத்துவார்கள் என நம்புகிறோம்.

சுவடுகள் மிகச் சிறந்த சஞ்சிகையல்ல என்பதை நாம் மறுக்கமுடியாது. ஆயினும் இதை சிறப்பான சஞ்சிகை ஆக்க உங்களால்தான் முடியும். உங்களது மனந்திறந்த விர்சனங்களை எழுதுங்கள். மூன்றாவது ஆண்டில் எமது காலடிகள் சரியாகப் பதியவும், எமது தேசத்தையும் மக்களையும் சகல ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுவிப்பதற்கான போராட்டத்தில் எம் அனைவரதும் பங்களிப்பு உறுதிசெய்யப் படவும் உங்களது விமர்சனங்கள் உதவும் என்று உறுதியாக நம்புகிறோம்.

உங்கள் அனைவரது கைகளையும் இறுக்கமாகப் பற்றியபடி புதிய நம்பிக்கைகளுடன் மூன்றாவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கிறோம்.

– சுவடுகள் –

---

## தாயகம் மீதொரு தாக்குதல்

* கனடாவில் இருந்து வெளிவரும் தாயகம் பத்திரிகை விநியோகஸ்தர்கள் இருவர்மீது பத்திரிகை விநியோகிக்கச் சென்றபோது மூன்று கார்களில் வந்த தமிழர்களால் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

ரொறன்ரோ கென்னடி புகையிரத நிலையமருகே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஒருவருடத்துக்கு மேலாக வெளிவரும் தாயகம் சிலருக்கு மகிழ்ச்சி தரமுடியாத செய்திகளை பிரசுரித்து வந்தது. இதுதொடர்பாக தாயகம் பத்திரிகையும் அதன் விற்பனையாளர்களும் மிரட்டப்பட்டு வந்தனர். இவர்களின் பின்னணியிலேயே இத்தாக்குதல் நிகழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இத்தாக்குதலை நடத்தியோர் அடையாளம் காணப்படவில்லை. தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவும் இல்லை. தாக்கப்பட்டவர் தற்காப்புக்காகத் திருப்பித் தாக்கியதால் தாக்குதலை நடத்தியோர் அடைந்த சேத விபரங்கள் தெரியவில்லை. தாயகம் இச்செய்தி எழுதும் போதும் தொடர்ந்து வெளிவருகிறது.

கனடா நிருபர்

www.tamilarangam.net

# சுவடுகள்

ஐக்கியமும் தேடலும் என்ற கருத்தில் நாங்கள் எமது சில கருத்துகளை முன்வைக்கிறோம். இவை விவாதத்துக்கும் விமர்சனத்துக்கும் உரியவை. தீர்மானங்களல்ல.

உலகம் வர்க்கங்களின் முரண்பாடுகளால் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒடுக்கப்படும் வரக்கந் தொடர்ந்து தனது விடுதலையை நோக்கிப் போராடிக் கொண்டிருக்கும். போராட்டமும் வரலாறும் எந்த தனிநபர் சார்ந்தும் இல்லாமல் வர்க்கம் சார்ந்தே இருக்கும். சமூகத்தை வர்க்கப் போராட்ட வழியில் விளங்கிக் கொள்வதும், அதை விளக்குவதும், சமூகத்தை மாற்றியமைப்பதும் புரட்சிவாதிகளது கடமையாகும்.

இன்றைய சமூகவளர்ச்சிப் போக்கைத் துல்லியமாகப் புரிந்து கொண்டு, முரண்பாடுகளை நீக்குவதன் மூலம் வர்க்கங்கள் அற்ற சமூகத்தை நோக்கிச் செல்லல் அவசியமானது.

சமூகத்தின் வரலாற்றுப் படிமுறைகளில் நிலவுடைமைப் படியில் இருந்து முதலாளித்துவப் படிநோக்கிய மாற்றம், ஒரே காலத்தில் உலகம் முழுவதும் நிகழ்ந்து விடவில்லை. கைத்தொழிற் புரட்சிமூலம், இந்த மாற்றத்தை விரைவில் நிகழ்த்திய மேலைத்தேய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளது மாற்றத்தைக் கட்டுப்படுத்தின.

முதலாளித்துவ வளர்ச்சிக் காலகட்டத்தில் குறிப்பாக சோவியத்தில், சோஷலிச சமூக அமைப்பை நோக்கிய "ஜனநாயகப் புரட்சி" யானது பண்பு மாற்றம் அடையும் முன்னரே சமூக ஏகாதிபத்தியம் என்ற புதிய நிலையைத் தோற்றுவித்தது. அரைக் காலனித்துவ, அரை நிலப்பிரபுத்துவ மூன்றாம் உலக நாடுகள் பின்தங்கிய உற்பத்தி முறைகளைக் கொண்டிருப்பதால், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியைத் தாமாக நடாத்த முடியாதுள்ளன.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின்பின், உலக நாடுகளுக்கு இடையே தோன்றிய புதிய சூழல் காலனித்துவத்தின் நேரடிச் சாத்தியத்தைக் குறைத்ததால் மூன்றாம் உலக நாடுகளில் மேலைத்தேய நாடுகளின் சுரண்டல் வாய்ப்புகளுக்கு ஏதுவாக நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் செய்த புதிய வடிவமாக நவகாலனித்துவம் ஏற்படுத்தப்பட்டது.

சுயமான சந்தையின் தேவையை மூன்றாம் உலக நாடுகளில், ஏகாதிபத்திய நலன்கள் பேணும் சக்திகளும், நிலப் பிரபுத்துவ சக்திகளும் தடுக்க முயல்கின்றன. பல்தேசிய நாடுகளில் இச்சந்தையைக் கைப்பற்றுவதில் இனங்களுக்கிடையே முரண்பாடு தோன்றுகிறது. இதுவே தேசிய இனச் சிக்கலை கூர்மையடையச் செய்கிறது. இந்நிலையில் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கானது ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தத்தின் ஊடாக மட்டுமே முன்னேற முடியும்.

www.tamilarangam.net

இந்த நாடுகளில் ஏகாதிபத்திய நலன்பேணிகளும், சமரசஞ் செய்யப்பட்ட நிலப்பிரபுத்துவ வாதிகளும் தரகு முதலாளித்துவச் சந்தையைப் பேணுவதற்காக சுயசந்தையின் வளர்ச்சியைத் தடுப்பதனூடு தேசிய இனச் சிக்கலைக் கூர்மைப்படுத்துகின்றனர். சுயசந்தைக்கான போராட்டங்கூட, ஒருபோதும் ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பேணியபடி முன்னேற முடியாது. எனவே ஏகாதிபத்திய நலன்களைப் பேணும் போக்கானது மேலும் மேலும் இன முரண்பாட்டைக் கூர்மையாக்கியே செல்லும். தேசிய இனமுரண்பாட்டின் கூர்மை காரணமாக இருபுறமும், சுயமான சந்தையை வேண்டிநிற்கும் தேசிய முதலாளிகள் தமது நலன்களைப் பேணிக்கொள்வதற்காக தவிர்க்க முடியாதபடி தேசிய இனப்பிரச்சனையை முடக்கிவிடுவதுடன், இவர்களின் வர்க்கத் தன்மை காரணமாக, சாராம்சத்தில் தரகு முதலாளித்துவ சார்புநிலைச் சந்தர்ப்பவாதிகளாக மாறி இறுதிவெற்றிவரை இட்டுச்செல்ல முடியாதவர்களாக பலவீனமான நிலையிலேயே உள்ளனர். இதன் காரணமாக தேசிய இனவிடுதலையை தவிர்க்க முடியாதபடி உழைக்கும் மக்களது தலைமையே உறுதிசெய்வனவாக உள்ளன. ஆனால் உழைக்கும் மக்கள்கூட தலைமை கொடுக்க முடியாமல் மிகவும் பலவீனமாகவே உள்ளனர். ஏனெனில், புவிசார் உற்பத்தி வளர்ச்சியடையாத காரணத்தால் குறைந்த அளவிலான உழைக்கும் மக்களே உள்ளனர்.

ஆகவே தேசிய முதலாளிகளது தேவைகூட உழைக்கும் மக்களது தலைமையாக இருப்பதால், சுயஉற்பத்தியின் வளர்ச்சிப் போக்கைத் திறந்துவிடுவதும், உழைக்கும் மக்களை அரங்குக்குக் கொண்டுவருவதும் தேசியவாதிகளது ஐக்கியத்துக்கு இன்றியமையாததாக உள்ளன. ஆகவே தேசிய விடுதலைப் போராட்டமானது சமூகவிடுதலையில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாதபடி இணைந்தே உள்ளது.

எமது தாய்நாட்டின் இன்றைய யதார்த்த சூழ்நிலையைப் பொறுத்தவரையில் உழைக்கும் மக்களின் தலைமையை அங்கீகரிப்பவர்களும், அதற்கான நடைமுறை வேலைத்திட்டத்தை முன்வைத்து உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்பட்டு நடைமுறையில் செயற்படுபவர்களும் மட்டுமே இன்றைய சூழலில் தேசியவாதிகளாக அடையாளப்படுத்த முடியும்.

எமது தாய்நாட்டில் சுயபொருளாதாரத்தை எப்படிக் கட்டி எழுப்புவது, இதற்கான மூலவளங்கள் என்ன என்பது பற்றியும், தேசிய நிலப்பிரபுத்துவம் பற்றிய வர்க்க ஆய்வுகளும், எமது சூழலுக்கேற்ற இன்றைய சமூக நிலையிலிருந்து போராட்டத்தை முன்னோக்கி நகர்த்திச் செல்லும் நடைமுறை வேலைத் திட்டத்துடன் கூடிய சமூக விழுமியங்களை உள்ளடக்கிய முழுவர்க்க ஆய்வுகளும் முன்னிலைப்படுத்தப் படுகின்றன.

இதுதொடர்பான உங்கள் கருத்துகளை எதிர்பார்க்கிறோம். இந்த அடிப்படையில் இருந்து விவாதங்களுடாக எமது போராட்ட வடிவங்கள் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்பட முடியும். விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது எதுவுமில்லை.

சுவடுகள் 21
ஆவணி 1990

சுவடுகள்

www.tamilarangam.net

# சிறுமி கல்பனா



(முன்பக்கத் தொடர்ச்சி)

பதறிப்போய் கிராம அம்பேத்கர் மன்றச் செயலாளர் நடராஜன்கிட்டேயும் கிராமத் தலைவர் கமலநாதன்கிட்டேயும் இந்தக் கொடுமைப் பத்தி சொன்னவுடன், எனக்குத் தெரிஞ்சதை எழுதிக் கொடுக்கும்படி சொன்னாங்க. முதல்ல குழந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுட்டுப் போகணும்னு கதறினேன். அவங்க 'அதெல்லாம் தேவையில்லை, எல்லாத்தையும் நாங்க பாத்துக்கறோம்'னு சொன்னாங்க...

மறுநாள் கிராம முக்கியஸ்தர்களுடன் ஊர்க் கூட்டம் கூட்டி விசாரணை

செஞ்சாங்க... அச்சுதன் குற்றத்தை ஒப்புக்கிட்டான். ஊர்ப் பஞ்சாயத்தில் ஐயாயிரம் ரூபாய் அபராதம் விதிச்சாங்க. மறுநாள் என்ன நடந்ததுன்னு தெரியாது... 'அபராதம் இருநூத்தம்பது ரூபாய் மட்டும்'னு சொல்லி, அதையும் ஊர்ப் பொதுவிழாவுக்குன்னு சொல்லிட்டாங்க.

கிராமப் பஞ்சாயத்தில் சரியான நீதி கிடைக்கும்னு நம்பினேன். குழந்தையை ஆஸ்பத்திரிக்குக்கூடக் கொண்டு போகவிடலை. குழந்தையின் கஷ்டத்தைப் பார்த்துப் பொறுக்க முடியாம, நான் ஊர்க் கட்டுப்பாட்டை மீறி போலீஸில் புகார் கொடுத்தேன்.

எனக்கு உறவுன்னு சொல்லிக்க இந்த ஊர்ல யாருமில்லைங்க. நான் இலங்கையிலிருந்து ஓடி வந்த அகதிங்க. தினக்கூலியா வேலை செஞ்சு பிழைக்கறவன். என் குழந்தைக்கு ஏன் இந்தக் கொடுமை நடக்கணும்..?!'' என்று சொல்லி அழுதார்.

ஆட்டுப்பாக்கம் கிராமத்துக்கு நாம் போய் கல்பனாவைப் பற்றி விசாரிக்க முயன்றால், ஒருவரும் வாயைத் திறக்கவே இல்லை. இந்த விஷயம் பற்றி பேசவே மறுத்துவிட்டார்கள். வெளியூரிலிருந்து (இலங்கை) அகதியாக வந்த ஒரு ஆள், கிராமக் கட்டுப்பாட்டை மீறி போலீஸுக்குப் போனதைக் குற்றமாகப் பார்க்கிறார்கள்!

பஞ்சாயத்து நடந்து இந்த மாதிரி தீர்ப்பு தரப்பட்டது என்ற விஷயத்தையே மறைக்க முயன்றார்கள். துணிச்சலாகப் பேசிய சில இளைஞர்கள்கூட ''பஞ்சாயத்துத் தீர்ப்பு நியாயம் இல்லை என்றாலும், ஊர்க் கட்டுப்பாடுதான் முக்கியமானது'' என்கிறார்கள். குழந்தைக்கு வைத்தியம் பார்த்த மருத்துவர்கள் உட்பட, யாரும் வாயைத் திறக்கவே பயப்படுகிறார்கள்.
கல்பனாவின் தந்தை அரக்கோணத்தை அடுத்துள்ள 'கிராமப் பெண்கள் விடுதலை இயக்கம்' என்ற அமைப்பின் உதவியோடு நீதிக்காகப் போராடுகிறார்

கல்பனாவின் தந்தைக்குப் பெண்கள் இயக்கம் தோள் கொடுத்தவுடன் போலீஸ் சுறுசுறுப்பானது. அச்சுதன் மேல் வழக்குப் பதிவுசெய்து வேலூர் சிறையில் வைத்துள்ளது.

இதன் நடுவில் வேறொரு சம்பவம் நடந்திருக்கிறது. அச்சுதனை ஜாமீனில்

www.tamilarangam.net

விடக்கூடாது என்று சொல்லி, சுற்றுவட்டாரத்திலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமப்புறப் பெண்கள் ஒன்றுகூடி ஜூலை 14-ம் தேதி ஒரு பெரிய ஊர்வலத்தை நடத்தியிருக்கிறார்கள். ஊர்வலத்திலும் அதன் முடிவில் நடந்த

பொதுக்கூட்டத்திலும் பேசியபோது ஒரிருவர், அச்சுதனுக்காக வாதாட இருக்கும் வழக்கறிஞரை 'குற்றவாளிக்கு துணை போகவேண்டாம்' என்று சொல்லிக் கோஷம் போட்டிருக்கிறார்கள். இது தங்கள் கடமையில் குறுக்கிடுவதாகக் கருதிக் கோபப்பட்ட வக்கீல்கள், அரக்கோணத்தில் ஜூலை 16,17,18 ஆகிய மூன்று நாட்களும் கோர்ட்டைப் புறக்கணித்ததோடு, 18-ம் தேதி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டிருக்கிறார்கள். இது சார்க் நாடுகளின் பெண் குழந்தைகள் ஆண்டு! குழந்தை கல்பனாவுக்கு இது கறுப்பு ஆண்டாகப் போய்விடக்கூடாது.

– கண்ணம்மா

நன்றி: ஜூனியர் விகடன்

# 'மக்கள்' மயப்படுத்தல்

1977ஆம் ஆண்டுமுதல் பதவியேற்ற ஐ.தே.க. அரசானது மக்களைப் பிழிந்தெடுப்பதெனக் கங்கணங் கட்டிக்கொண்டு வந்ததோ என நினைக்கத் தோன்றுகிறது. பதவிக்கு வந்தவுடன் அந்நிய நிறுவனங்களுக்குக் கதவைத் திறந்துவிட்டு, சுதந்திர வர்த்தக வலயம் மூலம் தாராள சுரண்டலுக்கு வழிவகுத்தது. அதன்பின் படிப்படியாக அரச கூட்டுத்தாபனங்கள், மற்றும் நிறுவனங்களை, பல்கலைக்கழகங்களை, கல்விக்கூடங்களை படிப்படியாகத் தனியார் முதலாளிகளது கைகளுக்கு மாற்றி வந்ததால் மக்கள் நாளாந்தம் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இத்தகைய தனியார்க்கான தாரை வார்ப்புகளால் இன்று நாட்டில் விலைவாசி, வாழ்க்கைச் செலவு என்பன கட்டுக்கடங்காது உயர்ந்து வருகிறது.

இதன் உச்சக்கட்டமாகக் கடந்த யூலைமாதம் போக்குவரத்துச் சபையையும் தனியார்மயப் படுத்தியுள்ளது. இதற்கு அரசு 'மக்கள் மயப்படுத்தல்' என அழகான பெயருமிட்டுப் பம்மாத்துச் செய்து வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு பிற்போக்கு நடவடிக்கைகளுக்கும் ஒவ்வொரு அழகான வடிவம் இடப்படுவது இன்று உலகெங்கும் நடந்துவரும் நிகழ்வாகும். இ.போ.ச. 1958ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அன்றைய முன்னணி இனவாதியான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் உருவாக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இவ்வாறு அரசு 'மக்கள் மயப்படுத்தல்' மேற்கொண்டு சில நாட்களுக்குள் பஸ் கட்டணங்கள் 50%ஆல் அதிகரித்தன. இதனால் மக்கள் செய்வதறியாது திகைத்தனர். எதிர்க்கட்சிகள் கூட அரசின் இத்தகைய நடவடிக்கைகளை வலுவாக எதிர்க்கவில்லை. ஆனால் மக்களிடம் எழுந்த எதிர்ப்புணர்வை தமக்கு லாபகரமானதாக ஆக்குவதற்காக சாட்டுக்கு ஒரு எதிர்ப்பு ஊர்வலத்தை கொழும்பில் ஏற்பாடு செய்தன. அதைக்கூடப் பொறுத்துக் கொள்ளா அந்த மோசமான அரசு தடியடி பிரயோகம் மூலம் ஊர்வலத்தை கலைத்துள்ளது. மக்கள் துயர் நாளாந்த வளர்ந்தே வருகிறது.

– வ.கமலினி –

www.tamilarangam.net

# தொலைந்து போன நாட்கள் பற்றி சில குறிப்புகள்

ஜனனி

தொலைந்துபோன நாட்கள் பற்றி சில றிப்புகள் 31.08.90

இந்தியப் படைகள் விலகல் ஒரு னநாயக அரசியல் சூழ்நிலையை லங்கையில் ஏற்படுத்தும் என்ற தோற்றம் ாயமாகி விட்டது. விடுதலைப் புலிகளது ம்பிக்கைக்கு உரியவரும் ஈரோசால் மாறியிருக்கிறார்' என ர்ணிக்கப்பட்டவருமான பிரேமதாசாவின் அரசு வடக்கு, கிழக்கில் படைபலம் மூலம் புலிகளை அழிப்பதாகக் கூறியபடி மக்களை மிகமோசமான முறையில் தாக்கி அழிக்கிறது.

புலிகள் கூறியபடி மக்களைக் காப்பாற்றவும் தந்திரோபாய ரீதியிலும் காட்டுக்குள் பின்வாங்கிய பிறகு கிழக்கு பெரும்பாலும் அரசின் கட்டுப்பாட்டுக்கு கீழேயே உள்ளது. கிழக்கில் புலிகள் ஆட்சி செலுத்துமளவுக்கு மீண்டும் ஒருநிலை தற்போது தோற்றுவிக்கப் படுவது சிரமம் எனினும் பாதுகாப்புப் படையினரும் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையே உள்ளது. இந்நிலையில் விடுதலைப் புலிகளால் நிகழ்த்தப் பட்டதாகக் கூறப்படும் முஸ்லீம் மக்களது படுகொலைகளும், முஸ்லீம் ஆயுதக் குழுக்களால் அரசின் ஆசியுடன் நடாத்தப்பட்ட தமிழ்மக்கள் படுகொலைகளும் தமிழ்– முஸ்லீம் மக்களுக்கு இடையேயான ஒற்றுமையைக் குலைத்துவிட, பல பகுதிகளில் படையினர் தன்னிச்சையாகத் திரியும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் வடக்கு – கிழக்கு இணைப்பு ஒரு நிரந்தரக் கேள்விக்குறியாகத் தொங்கியபடி நிற்கிறது.

பல்லின மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் அரசபடைகளுக்கு, புலிகளைவிட சாதகமான நிலையே தற்போது நிலவுகிறது. வடக்கில் தொடர்ச்சியாக நிலவும் உக்கிரமான யுத்தங் காரணமாக புலிகள் கிழக்கு பற்றி அவ்வளவு அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. வடக்கில் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு மாதக்கணக்கில் முற்றுகையிட்டுள்ள விடுதலைப் புலிகள் கோட்டையுள் புகவெடுத்த முயற்றி பெருமளவு உயிரிழப்புகளுடன் தோல்வியிலேயே முடிந்துள்ளது. எனினும் முற்றுகையில் இருந்து கோட்டையை விடுவிக்க இலங்கையில் விமானப்படை எடுத்த முயற்சிகள் பெருமளவில் வெற்றியளிக்கவில்லை. நகரில் இருப்பதாலும் கோட்டை ஒன்றில் அமைந்துள்ளதாலும் இந்த முகாமைச் சரணடையச் செய்வதில் புலிகளும் சரணடையாது தடுப்பதில் அரசும் உறுதியாகவுள்ளன. கோட்டையைச் சுற்றி புலிகள் நிலைகொண்டுள்ள பகுதிகள் எனக் கருதப்படும் சகல பகுதிகளும் விமானப் படையின் தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றன. யாழ்நகரின் முக்கால்வாசிக்

* தமிழகத்துக்கு இதுவரை ஒருஇலட்சம் இலங்கை அகதிகள் தப்பிச் சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வறுமையாலும் உதவிகள் சரியாகக் கிடைக்காததாலும் பெரும் அவதியுறுகின்றனர்.

www.tamilarangam.net

கட்டடங்களும் அரசபடைகளது விமானக் குண்டுவீச்சுக்கும் கோட்டை முகாம் ஷெல்தாக்குதலுக்கும் உள்ளாகித் தரைமட்டமாகி விட்டன என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலாலி, காலைநகர் முகாம்களில் இருந்து படையினரின் தொடர்ந்த தாக்குதல்களால் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தீவுப்பகுதிகளில் தஞ்சம் அடைந்திருந்தார்கள். இப்பகுதிகளில் திடீரென இராணுவம் குவிக்கப்பட்டு மண்டைதீவுப் பக்கமாக கோட்டையை விடுவிக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டமை எதிர்பாராத விதமாக இப்பகுதிகளில் பெருமளவு மக்களை பாதித்துள்ளது. யாழ்ப்பாணம் நோக்கி திரும்பியோடிய பல பொதுமக்கள் ஹெலிகளால் சுடப்பட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். அகதிகளாக இடம்பெயரும் மக்கள் பல்வேறு இடங்களில் ஹெலிகளால் தாக்கப்படுவதுபற்றி செய்திகள் வெளியாகியுள்ளன. கோப்பாய் வெளியில் மினிபஸ்கள் ஹெலிகளால் தாக்கப்பட்டு 150பேரும் வவுனியாவில் ட்ரக்ரர்கள் தாக்கப்பட்டதில் 22பேரும் இவ்வாறு பலியாகியுள்ளனர். இவர்கள் அனைவரும் 'பயங்கரவாதிகள்' என அரசும், கொழும்புப் பத்திரிகைகளும் செய்திகள் வெளியிட்டுள்ளன. தீவுப்பகுதிகளில் பொதுமக்களை கவசமாகப் பயன்படுத்தி இராணுவம் முன்னேறியதால் 250இற்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டதாக புலிகளின் செய்தி தெரிவிக்கிறது.

* கொழும்பு பல்கலைக் கழகத்தை சேர்ந்த மாணவி ஒருத்தியை இரகசிய பொலீசார் கைதுசெய்துள்ளனர். அவரைப் பார்க்கச் சென்றோர் அவரது கை, கால், முகம் எங்கும் சிகரெட்டால் சுடப்பட்ட காயங்கள் காணப்பட்டதாகத் தெரிவித்தனர்.

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பத்தில் பல எதிர்க் கட்சிகளும் சில தமிழ்க் குழுக்களும் வரவேற்றிருந்தன. ஆயினும், யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட விமானத் தாக்குதல்களை இருபது முக்கிய எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன. தமிழ்க் குழுக்களும் முஸலீம் காங்கிரசும் இதற்குள் அடங்கும். தமிழ்ப் பகுதிகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடாத்தப்படும் தாக்குதல்களையும், மனிதவுரிமை மீறல்களையும் கண்டிப்பது தொடர்பாக சுதந்திரக் கட்சியில் பெரும்




கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இவற்றைக் கண்டிப்பதில் ஸ்ரீமா காட்டும் ஆர்வத்தை அநுரா, மஹிந்தா விஜயசோமா, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே போன்ற தீவிரவாதிகள் அவ்வளவாக விரும்பவில்லை என்பது வெளிப்படை. முதற்றடவையாக ஸ்ரீமா வடக்கு- கிழக்கில் நிகழும் தாக்குதல்களைக் கண்டித்ததுடன் தன்னைச் சந்தித்த பிரஜைகள் குழுக்களிடம் அதிகாரப் பரவலாக்கம் போதுமான அளவு வழங்கப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார். இதேவேளை

---

* அவசர உதவிகோரி சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கையரசு விண்ணப்பித்துள்ளது. பெற்றோல் விலை லீற்றருக்கு 5ரூபா கூடியுள்ளது. பஸ், இரயில் கட்டணங்கள் 50%ஆல் அதிகரிக்கப் பட்டுள்ளன.

---

வடக்கில் இருந்து ஈரோசால் அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் கடிதமொன்றும் வடக்கு - கிழக்கில் அரசபடைகளின் தாக்குதல்கள்பற்றி கண்டனந் தெரிவித்துள்ளது. ஆயினும் முஸ்லீம் மக்களின் படுகொலைகள் பற்றி இக்கடிதம் எதுவுமே பேசவில்லை.

தற்போதைய மோதல்கள் தொடங்கிய நாளில் இருந்து தமிழ்ப் பகுதிகளில் உணவுத்தட்டுப்பாடு முன்னெப்போதும் இல்லாதவாறு ஏற்பட்டுள்ளது. மன்னார்ப் பகுதியிலும் கிழக்கின் சில அகதிமுகாம்களிலும் பட்டினியால் சிலர் இறந்துள்ளனர். எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் அகதிகள் பெருமளவு கால்நடையாகவே இடம்பெயர வேண்டியுள்ளது. எரிபொருள், கோதுமைமா, மெழுகுதிரி, தீப்பெட்டி போன்றன வவுனியா முகாமைத் தாண்டி வடக்கே கொண்டுசெல்ல அனுமதிக்காத படையினர் உத்தியோகப் பற்றற்ற பொருளாதாரத் தடையொன்றை அமுல்செய்துள்ளனர்.

---

* வாழைச்சேனையில் இருந்து கொழும்பு நோக்கிவந்த பஸ்சில் இருந்து இறக்கிச் செல்லப்பட்ட 35தமிழர்களின் நிலை என்னவென்று தெரியவில்லை. இதுபற்றி விசாரித்த போதும் அவர்களை விடுவிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தெரியவில்லை.

---

யுத்தகாலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை மக்களுக்கு விநியோகம் செய்த செஞ்சிலுவைச் சங்கத்துடன் புலிகள் முரண்பட்டுள்ளனர். யாழ்ப் பல்கலைக்கழகத்தில் நடந்த கூட்டமொன்றில் "யாரையும் நாங்கள் தடைசெய்வோம்" எனப் புலிகள் கூறியுள்ளனர். வெளிநாட்டுக் கடவுச் சீட்டுடன் வடக்கில் யுத்தமுனையில் அகப்பட்ட ார் வெளியே செல்லக்கூடாத ன்ற தொனியில் புலிகளின் பத்திரிகையா 'ஈழநாதம்' ஆசிரியர் தலையங்க எழுதியிருந்தது. நோர்வேஜி உதவிநிறுவனம் ஒன்றின் வாகனமொன்று உணவுப பொருட்களுடனும் முஸ்லீம் சாரத ஒருவருடனும் கடத்தப்பட்டதை அடுத்த பொது உதவி நிறுவனங்கள் தம செயற்பாட்டை இடைநிறுத்தின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்போதைய தாக்குதல்கள் அண்மையில் முடியும் சாத்தியங்கள் தெரியவில்லை.

எனினும் "யாழ் வைத்திய சாலையை இயங்கச் செய்ய கோட்டையை விடுவிப்பது எமக்கு அவசியம்" என அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார். (யாழ் வைத்தியசாலையும், இயங்கிக் கொண்டிருந்த மானிப்பாய் வைத்தியசாலையும் ஆகாயத் தாக்குதலுக்கு உள்ளாகின) உத்தியோக பூர்வமாக வெளியே வராத சில செய்திகளின் அடிப்படையில் யாழ்க் கோட்டை முற்றுகையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின், அரசு ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்து பேச்சுகளைத் தொடங்க முனையலாம் என நம்பப்படுகிறது.

கடந்த காலங்களில் நேரடியாகப் பேசிய அரசு, புலிகள் தற்போதைய சூழலில் பேசமுடியாது இருப்பதால் ஈரோசை அரசு இது தொடர்பாக அணுகியதாக நம்பப்படுகிறது. எனினும் புலிகளின் நெருக்குதல்களில் இருந்து கடைசிவரை தன்னை காப்பாற்றிய (?) ஈரோஸ் தற்போதும் இயங்குகிறதா எனச் சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஈரோஸ் கலைக்கப்பட்டு விட்டதாக புலிகளின் பேச்சாளர் கூறிய செய்தி பல



* கை, கால்கள் பின்புறமாக கட்டப்பட்டு துணுக்காயில் திறந்த வெளிகளில் இருந்தியப சிறைவைககப்பட்டுள்ளதாக கூறப்படு 3000 தமிழர்களது நிலை என்னவென்ப இதுவரை தெரியவில்லை. முல்லைத்தீ நகரம் அரச கட்டுப்பாட்டு வந்துள்ளமையாலும் இப்பகுதிகள் பெரு தாக்குதல்களுக்கு ஆளாவதாலு இவர்களின் நிலை ஆபத்தாகலாம் என அஞ்சப்படுகிறது.

பத்திரிகைகளில் வெளியாகியது. ஈழநாதப் பத்திரிகைக்கு பாலகுமார் பேட்டி வழங்கினார் எனவும், அப்பேட்டியில் ஈரோசைக் கலைப்பதாகவும், ஈரோசின் போராளிகள் விரும்பினால் புலிகளுடன் சேர்ந்து போராடலாம் எனக் குறிப்பிட்டதாகவும் புலிகளின் தொலைபேசிச் செய்தி கூறிய மறுதினம் அவ்வாறு ஈரோஸ் கலைக்கப்படவில்லை என பாலகுமார் மறுத்ததாக ஈரோசின் தொலைபேசிச் செய்தி கூறியது. பின் யுத்தம் தீவிரம் அடைந்ததில் இக்கதை காற்றோடு போய்விட்டது.

ஆயினும் கொழும்புவந்த விலகிய ஈரோஸ் உறுப்பினர்கள் (யாழ், மன்னார் மட்டக்களப்பு) தங்களை விரும்பியோர் விலகலாம் எனவும்,வெளிநாடு செல்வோர் செல்லலாம் எனவும், படிப்போர் படிக்கலாம்

* கிழக்கில் மட்டுநகரில் மட்டுபே 315பேர் 'காணாமல்' போய்விட்டதாகவும் பகல் இரண்டு மணிக்குப்பின் தெருவில் இறங்கும் எவரும் அடுத்தநாள்க் காலை சாம்பலாகக் கிடப்பதாகவும் சமாதானக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் இதேவேளை கிழக்கில் பாடசாலைகளை இயங்கச் செய்ய அரசு எடுத்த முயற்சி தோல்வியுற்றுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவும் கூறப்பட்டதாகவும், இயக்கம் கலைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர். அதை யாழ், மன்னார், மட்டக்களப்பு புலிகள் உறுதிப்படுத்துகின்றனர். ஈரோசின் புரட்சிகர உயர்மட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவரில் சங்கர், புலிகளின் வேண்டுகோள்படி விலக்கப்பட்டதும், நேசன் ஐரோப்பா வந்ததும் பாலகுமார் மட்டுமே எஞ்சியிருந்ததும் எல்லோரும் அறிந்திருக்கக்கூடிய செய்திகள்.

* வடக்கு- கிழக்கு மாகாணங்களின் எல்லைப் புறங்களில் பல சிங்களக் கிராமங்கள் தாக்கப்பட்டு பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளனர். இக்கொலைகள் நடைபெற்ற இடங்களில் 'கறுப்பு திராவிட இயக்கம் 1983' என்ற துண்டுப் பிரசுரங்கள் காணப்பட்டன.

புலிகள் தற்போது வேறெந்த அரசியல் அமைப்பையும் (முஸ்லீம் காங்கிரஸ் தவிர்ந்த) வடக்கு- கிழக்கில் இயங்கவிடாது தடைசெய்துள்ளனர். இது முன்பிருந்ததைவிட புதியநிலையாகும். இதேவேளை புலிகள் "இறுதிப் போர்" எனத் தற்போதைய யுத்தத்தை வர்ணித்துள்ளனர். மிகுந்த சிரமங்களுக்கும் இழப்புகளுக்கும் இடையே அரசபடைகள் கோட்டையை விடுவிக்கக்கூடும் என நம்பப்படுகிறது. புலிகளும் முதன்முறையாக தமது பாரிய இழப்புகளை ஒப்புப் கொண்டுள்ளனர். இந்தியா வழமைபோல இலங்கைநிலை பற்றி வருத்தந் தெரிவித்துள்ளது. இந்திய அரசின் உயரதிகாரிகள் இலங்கை அரசுடன் 'பேச்சு' நடத்தி வருகின்றனர். 'பழையவற்றை மறந்து' இந்தியா மீண்டும் எமக்கு உதவவேண்டும் என புலிகள் வேண்டியுள்ளனர். மீண்டும் இந்தியப் படைகள் வருமா என்கிற கேள்வி பொதுமக்களின் அளப்பரிய இழப்புகளால் பலம்பெற்று வருகிறது. ●

## எல்லாம் வல்ல இறைவா!

எல்லாம் வல்ல இறைவா!
என்னைப் பேசவிடு.
பேசாதே மக்களைக்
குளப்பிவிடுவாய்.

எல்லாம் வல்ல இறைவா!
என்னை எழுதவிடு.
எழுதாதே என்னை
எழுதிவிடுவாய்.

எல்லாம் வல்ல இறைவா!
என்னை...
போதும் நிறுத்து
நீ
அதிகம் பேசுகிறாய்
எனவே துரோகியாவாய்

குண்டு தயார்
குழியை நீயே
வெட்டிக்கொள்.

- உதயன் -

* யாழ்ப்பணம், வவுனியா, அனுராதபுரம் அகதிகளுக்கு 22இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களை நோர்வே அரசு உதவிநிறுவனமான நோராட் வழங்கவுள்ளதாக நோர்வேத் தூதரக முதன்மைச் செயலாளர் கூறியுள்ளார். கடந்த வருடம் இலங்கைக்கு 480மில்லியன் ரூபாவுக்கான உதவிகளை நோர்வே வழங்கியிருந்தது. இவ்வருடமும் இதேதொகை வழங்கப்படுகிறது. வடக்கு- கிழக்கில் நோர்வேஜிய உதவி நிறுவனங்களின் புனரமைப்பு மறுவாழ்வுப் பணிகள் யுத்தத்தால் பெரிதும் பாதிப்புற்றுள்ளன.

- விதுரன் -

www.tamilarangam.net

# சொன்னார்கள்.

* இந்தியப் படையினர் பிரபாகரனை நான்கு தடவைகள் பிடித்தனர். பின்னர் இந்திய உளவுப் படையின் தலையீட்டின் பின்னர் அவரை விடுவித்தனர். 4 தடவையும் இது நடந்தது. இது பொய் என்றால் இந்தியர்கள் எனக்கு சவால் விடட்டும்.

– ரஞ்சன் விஜேரத்ன (7.7.90)

* வடக்கு கிழக்கு இணைப்பிலிருந்து கிழக்கு மாகாணத்தை முற்றாக விடுவித்துக் கொள்ள இப்போது அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. முதலில் திருமலை தொடக்கம் அம்பாறை வரையுள்ள சட்டவிரோத ராணுவங்களை அழித்தொழித்து கிழக்கை துப்பரவு செய்துவிட்டு இலங்கைப் படைகள் வடக்குக்குச் செல்லவேண்டும்.

– ஸ்டான்லி திலகரத்ன (பா.உ சு.க. 7.7.90)

பாசிசத்தை அழிக்க வேண்டும் என்பதில் எமக்கு கருத்து வேறுபாடு கிடையாது. பாசிசத்துக்கு எதிராக விடாப்பிடியாகப் போராடியவர்கள் நாம். ஆனால் பாசிசத்தை வளர்த்து புலிகளுடன் குலாவியவர்கள் அரசாங்கத்தினரே. அதே பாசிசத்துக்கெதிராக இன்று அதே அரசாங்கம் யுத்தம் புரிகிறது. யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியாது.

– குகனேஸ்வரன் (பா.உ. த.வி.கூ, 7.7.90)

எந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறோமோ அந்த மக்கள் கொல்லப் படுவதை, கைது செய்யப்படுவதை தடுக்க முடியவில்லை. அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்படுவதை தடுக்க முடியவில்லை. அவர்கள் எதிர்நோக்கும் பட்டினிச் சாவைத் தடுக்க முடியவில்லை. இந்த நிலையில் கையாலாகாத இந்த எம்.பி பதவிகள் எமக்கு எதற்கு?

– ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ஈரோஸ் பா.உ.க்கள் 1.7.90

மக்கள் மீதான தாக்குதலை தூண்டிவிட்டு இலாபம் பெறும் புலிகளின் தந்திரத்தின் ஒரு பகுதிதான் மக்கள் நிறைந்த பகுதிகளில் அரண்களை அமைத்துக் கொள்வதாகும். எனவே அரசாங்கம் இத்தந்திரத்தை முறியடிக்கும் விதத்தில் செயற்படவேண்டும்.

– டக்ளஸ் தேவானந்தா (செயலாளர், ஈ.பி.டி.பி 2.7.90)

மாகாணசபையில் இடம் பெறாதவர்களின் கோரிக்கையின் பேரில் அரசாங்கம் மாகாணசபையைக் கலைத்துள்ளது. இனிமேல் அங்கு ஆளுநர் ஆட்சிதான் நடைபெறும். வடக்கு கிழக்கு நிர்வாகத்தை ராணுவம் மேற்பார்வை செய்யும் நிலைதான் ஏற்பட்டுள்ளது.

– ஈஎன்டிஎல்எஃப் அறிக்கை (9.7.90)

விடுதலைப் புலிகளுடன் அரசு என்ன பேச்சுவார்த்தை நடத்தியது என்பது இதுவரை எவருக்கும் தெரியாது. நாட்டுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் மறைத்து இரகசிய பேச்சுகள் நடத்தினர். அதன் விளைவுகளை நாடு இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பத்மநாபா, யோகசங்கரி, கிருபாகரன் உட்பட தமிழ்த் தலைவர்களின் படுகொலைகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்.

– ரிச்சர்ட் பத்திரான (ஸ்ரீலங்கா சு.க. பா.உ. 3.7.90)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஆயிரம் பூக்கள் மலரட்டும்

## கலையுணர்வும் சமுதாய உணர்வும்

- சிவசேகரம் -

"கலைஞன் சுதந்திரமானவன், சுதந்திரம் இல்லாமல் கலையில்லை, அவன் முதலில் தனியன்" என்ற பிரகடனத்தை ஆதவனின் மடலில் (சுவடுகள் யூன் 90) கண்டபோது இதே பிரகடனத்தை விஞ்ஞானிகட்கும் விஞ்ஞானத்துக்கும் நீடிக்க முடியாதா, சகல சிந்தனைத் துறைகட்குஞ் சிந்தனையாளர்கட்கும் நீடிக்க முடியாதா, சகல தொழிற்றுறைகட்கும அவற்றிற் செயற்படுவோருக்கும் நீடிக்க முடியாதா, ஏன் முழு மானுடச் செயல்கட்கும் நீடிக்க முடியாதா என்ற கேள்வி என்னுள் எழுந்தது. சுதந்திரம் என்பது சமுதாய வாழ்வில் சமுதாயச் சார்புடையது. அதைமீறிய விசேஷ சுதந்திரம் கலைஞர்களுக்கு இருக்க முடியுமாயின் எவருமே கலைஞர் என்று தமக்கு முத்திரை குற்றிக்கொண்டு அந்த சுதந்திரத்தை அனுபவிக்க முடியுமோ? அந்தச் சுதந்திரத்துக்கு சமுதாய வரையறைகளே கிடையாதா? அவ்வாறு வரையறையற்ற சுதந்திரத்துக்குரிய கலைஞன் சமுதாயத்துக்கு அப்பாற்பட்ட அதிமானுடனோ? இவ்வாறு எழும் கேள்விகளுக்கு எல்லாம் ஒற்றை வரியில் மிகையாக எளிமைப் படுத்தப்பட்ட ஸ்லோகங்களில் பதில் தேடமுடியாது. முதலாளித்துவ சமுதாயத்தில் கலை ஒரு வியாபாரப் பொருளாகிக், கலைஞர்களும் சில்லறை வியாபாரிகளாகவும், கூலி உழைப்பாளர்களாகவும் மாற்றமடைந்துள்ள ஒரு சூழலில், "கலை கலைக்காக" என்ற சுலோகம் கலையை மனித வாழ்வினின்றும் அந்நியப்படுத்தும் பணியைச் செய்கிறதேயன்றி அதனை விடுவித்து மேன்மைப்படுத்த முயலவில்லை. கலையின் சமுதாயத் தன்மையை அடையாளங் காண்பதன் மூலமே அதன் சீரழிவை எதிர்த்துப் போராட முடியும், அல்லாமல் அதன் சமுதாயத் தன்மையை நிராகரிப்பதன் மூலமல்ல. ஆதவன் தன் வாதங்களை வலியுறுத்துந் தேவை கருதிப் புகுத்தியுள்ள அரைகுறை உண்மைகளை முதலில் மறுத்துவிட்டுக் கலைஞர்களது சுதந்திரம் பற்றிச் சில வரிகள் எழுத முற்படுகிறேன்.

மு.தளையசிங்கம், கைலாசபதியை நெருக்கிய கதையை ஆதவன் சொல்கிற தொனியில் தளையசிங்கம் நசுக்கிக் கைலாசபதி நசுங்குண்டதாக நம்புமாறு வாசகரைத் தூண்டுகிறார். கைலாசபதி முன்வைத்த விமர்சனக் கோட்பாட்டை மட்டுமன்றிக் கலையின் சமுதாயச் சார்பையும் நிராகரிக்க விரும்பும் சிலர் அதை நம்பலாம். ஆயினும் சோஷலிச யதார்த்தமும், புரட்சிகர கலை இலக்கிய ஆக்கமும், மார்க்சிச விமர்சனப் பார்வையும் அவர்களது நம்பிக்கையின் வலிமையின் முன்பு மலைத்து நின்றுவிடவில்லை. மு.தளையசிங்கத்தின் வாரிசுகள் விமர்சனங்கட்கு முகங்கொடுக்க முடியாமற் பொழிகின்ற கேவலமான வசைமாரி யார் தரப்பில் நியாயம் உள்ளது என்பதை நிறுவப் போதுமானது.

கலையின் பயன்பாடு பற்றிய கேள்வியினின்றும் பிரிந்து கலை எதற்காக என்ற கேள்வி எவ்வாறு எழமுடியும்? கலை கலைக்காக என்ற கோஷம்

**இத்தகைய கேள்விகட்கு முற்பட்டதாக எவ்வாறு இருக்க முடியும்? கலையின் பயன்பாடு பற்றிய கேள்வியின் எதிர்வினையாக எழுந்த கோஷம் அது**

www.tamilarangam.net

எழுமுன்னே எவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட முடியும்? ("கலையின் பயன்பாடு பற்றிய கதை வந்த பின்னரே கலை கலைக்காக என்ற வார்த்தை... ஒதுக்கி வைக்கப்பட்டது" என்று ஆதவன் குற்றஞ் சாட்டுவது விநோதமாக உள்ளது)

"தூய கலைவாதியான பரதமுனிவரின் பரதக் கலை" என்று ஆதவன் சொல்லுமிடத்து எத்தனை ஊகங்களைத் திணிக்கிறார்! பரதமுனிவர் பரதக் கலையை உருவாக்கினார் என்ற ஊகம் மிகவும் ஆபத்தானது. பரதமுனிவர் நாட்டியக் கலையின் அழகியல், அமைப்பு விதிகளை வகைப்படுத்தினார் என்பது பொருந்தும். மற்றபடி, பரத முனிவரின் பரதக்கலை என்பது பாணினியின் ஸமஸ்கிருதம், தொல்காப்பியரின் தமிழ் என்பது போல ஆபத்தான ஒரு சொற்றொடர். இந்தியத் துணைக்கண்டம் நாட்டியக்கலை, இசை, மொழியியல், அரசியல், பாலுறவு போன்ற பல துறைகளில் நூல்களை உலகுக்கு முதன்முதலில் வழங்கியுள்ளது. இந்த நூல்கள் எல்லாமே சில சமுதாய நடைமுறைகளின் தொகுப்புகளின்றி வேறல்ல. நூலாசிரியர்கள் இத்துறைகளை சமுதாயத்துக்குத் தந்தவர்கள் அல்ல என்பதால் அவர்களது பணியின் மேன்மை எவ்வகையிலும் குறைந்துவிடாது. இருப்பினும், ஒரு நீண்டகால சமுதாய நடைமுறையின் விருத்தியை தனிமனிதச் சாதனையாகக் காண்பதும் காட்டுவதும் ஆதவனின் சமுதாயப் பார்வையின் ஒரு பிரதிபலிப்பு என்றே தோன்றுகிறது. அடுத்த ஊகம் கலை கலைக்காகவே என்று பரதமுனிவர் வாழ்ந்தார் என்பதாகும். இது பரதமுனிவர் (அவரது பூர்விகமும் இருப்பும் கேள்விக்கு உரியனவாகவே உள்ளன!) ஒரு சமுதாயப் பார்வையும் அற்றவர் என்று கூறுகிறதா? போதாக் குறைக்கு ஆதவன் வள்ளுவரையும் வம்புக்கு இழுக்கிறார். பரதமும், கர்நாடக இசையும், குறளும், சிலம்பும், மகாபாரதமும், இராமாயணமும் அவற்றுக்குரிய சமுதாயத்தின் சூழலையும் விருத்தியையும் தழுவியே தத்தம் வடிவங்களைப் பெற்றன. பரதம், பரதமுனிவர் வழங்கியவாறே (?) நவீன சமுதாயத்தின் விருத்திக்கு பயன்பட முடியாது. நவீன சமுதாயத்தின் தேவைகளை உள்ளடக்கி அக்கலை வடிவத்தை விருத்தி செய்யப் புதிய ஆற்றலும் புதிய பார்வையும் அவசியம். இங்குதான் புதிய கலைஞனின் சமுதாயப் பார்வையும் கலைத்திறனும் சங்கமிக்கின்றன.

பயன்பாட்டு வாதம் என்பது ஆதவன் காட்ட முனைகிற விதமான ஒரு கொச்சையான பொருள் முதல்வாதக் கொள்கையாயின் வெறுக்கத் தக்கதே. ஆயினும் சமுதாய நடைமுறையில் மனிதர் தமக்குப் பயனுள்ளன என்று கருதுவனவற்றையே பேண முற்படுகின்றனர். பழையன கழிதலும் புதியன புகுதலும் பயன்பாடு சார்ந்ததே. மனிதச் செயற்பாட்டில் உள்ளடங்கும் சகலவற்றுக்கும் பொருந்தும் ஒரு விதிக்கு கலை எவ்வாறு விலக்காகிறது? பயன்பாடு என்பதற்கு ஒரு அர்த்தத்தை தனக்கு வசதியாக எடுத்துக் கொண்ட ஆதவனால் பயன்பாட்டு வாதத்தைத் தாக்க முடிகிறது. (முன்னர் மு.தளையசிங்கமும் பொருள்முதல் வாதத்துக்கு ஒரு கொச்சையான அர்த்தத்தை கற்பித்துவிட்டு அதை அடிப்படையாக வைத்து பொருள்முதல்வாதம் தோற்றுவிட்டது என்று பிரகடனஞ் செய்தது நினைவுக்கு வருகிறது!)

'கலை மக்களுக்காக' என்ற கருத்து மூளைச் சலவை என்று வாதிடும் ஆதவன் 'கலை கலைக்காக' என்ற கருத்து மூளைச் சலவை இல்லை என்று கருதுகிறாரா? 'கலை கலைக்காக' என்று கோஷமிடும் முகாமிலிருந்து வரும் கொச்சைகளையும் அயோக்கியத் தனங்களையும் பச்சை வியாபாரப் பண்டங்களையும் ஆதவன் அறிய மாட்டாரா? கலையுணர்வு நடைமுறை மூலம் விருத்தியடைகிறது. சமுதாய உணர்வும் அவ்வாறே. ஆரம்ப நிலையிலுள்ள எந்தப் படைப்பாளியும் தன் முன்னோடிகளாகக் கருதும் கலைஞர்களை பார்த்துச் செயற்படுவது இயல்பானது. நடைமுறையில் பல தவறுகள் நேருகின்றன. அவற்றினூடு விருத்தி நடைபெறுகிறது. கலை மக்களுக்காக என்ற உணர்வு ஒரு படைப்பாளியைத் தடுக்கிறது என்ற வாதம், கலை மக்களுக்காக என்ற உணர்வு எத்தனை மகத்தான கலைஞர்களைச் சிருஷ்டித்துள்ளது என்பது பற்றிய அறியாமையின் பாற்பட்டது.

பாலேந்திராவும் தாஸீஸியசும் பிறமொழி நாடகச் சுவடிகளை நாடியதன் காரணம் வெறுமனே புதிய நாடக வடிவம் மட்டுமல்ல, இருவரும் மிகுந்த சமுதாய உணர்வுடைய நாடகக் கலைஞர்கள். அவர்களது அரசியற் பார்வைகள் எனதினின்றும் வேறுபடலாம். ஆயினும் கலை மக்களுக்காக என்ற பார்வை ஓவியத்தைவிட, சிற்பத்தைவிட, சிறுகதையையும் கவிதையையும் விட நாடகத்துக்கு மிக அவசியமானது. நாடகக் கலையின் ஆதாரமே உடனடியாக முன்னிற்கும் பார்வையாளர்கள். அவர்களுடனான உறவே நாடகத்தின் வெற்றியை நிர்ணயிக்கிறது. நாடகக் கலைஞன் யாருக்காகப் படைக்கிறான் என்ற கேள்வியே நாடகத்தின் தன்மையை நிர்ணயிக்கிறது. தமிழில் நல்ல நாடகச் சுவடிகள் கிடையாமைக்கு நமது நாடக மரபு தொடர்பான பல காரணங்கள் உள்ளன. இவைபற்றி விரிவாக எழுத வல்லவன் நானல்ல. எழுத வேண்டிய இடமும் இதுவல்ல.

'சொல்லிப் போட்டன் எண்டதுக்காக நடக்கிறது' பற்றிக் கண்டிக்கும் ஆதவன் 'கலை கலைக்காக' என்று 'சொல்லிப் போட்டதற்காக' அரை உண்மைகளை வீசி வாதங்களை நிறுவ முயல்வது கலைஞனை சுதந்திரமானவன் ஆக்கும் செயலல்ல.

இனி, ஆதவன் தொட விரும்பாத சுதந்திரங்களைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செயலாளர் நாயகம் 'குரு'



அடுத்த ஐ.நா.சபையின் செயலாளர் நாயகமாக முன்னாள் நோர்வே நாட்டுப் பிரதமர் குருஹார்லம் புருண்ட்லாந் தெரிவுசெய்யப்பட வாய்ப்புகள் நிறையவே உள்ளன. இவருக்கு ஒரு நாட்டின் பிரதமராக இருந்த அனுபவம் உள்ளதோடு சூழலியல் தொடர்பாக மிகுந்த ஆர்வமும் உள்ளது. இவரின் தலைமையிலான ஐ.நா.சபையின் சூழலியல் விசாரணைக் குழுவின் அறிக்கை முக்கியமானதாகக் கருதப்படுவதுடன், இவ்வறிக்கை 'புருண்ட்லாந் அறிக்கை' என்றே அழைக்கப்படுகிறது. அத்துடன் இவர் மூன்றாம் உலக நாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையவர் என்றும் ஆர்வம் உள்ளவர் என்றும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால் இப்பதவிக்கு அவர் அவ்வளவு நாட்டங் காட்டவில்லை என்றும், இவர் விரும்பினாலேயே அது சாத்தியமாகும் என்றும் எழுதியுள்ளன.

– ரவிராஜ் –

பற்றிப் பார்ப்போம். பலகாலமாக மகா கவிஞர்களும், காவிய கர்த்தாக்களும் ராஜாதி ராஜர்களது வீரசாகசங்களையும் வள்ளன்மையையும் அவர்களது ஆண்மையினையும் அவர்களது மனைவியரின் கற்பையும் கட்டழகையும் பாடி வந்தது எத்தகைய சுதந்திரம்? அரசர்கள் தவிர்ந்தால் மதமும் புராண இதிகாசங்களுமே தென்னிந்திய இசையினதும் நாட்டியத்தினதும் கருப்பொருட்களாக அமைந்தது எவ்வாறான சுதந்திரம்? இன்று வியாபார நிறுவனங்களின் ஆதிக்கத்தின் விளைவாக 'சுதந்திரமான' கலைஞர்கள் விளிம்பில் நின்று தடுமாறும் அவலநிலை எவ்வாறான சுதந்திரம்? அரசர்களது மேன்மையைப் பாடியதால் பழந்தமிழ்க் கவிஞர்கள் கலைஞர்களுக்கான சுதந்திரத்தை இழந்தவர்கள் ஆகிறார்கள் என்றால் அவர்களது படைப்புகளில் கலைத்தன்மை இல்லாது போய்விடுகிறதா? மதச் சார்புடைய இலக்கியங்களில் கலைத்தன்மை இல்லாது போகிறதா? பிழைப்புக்காகக் கலைத் திறமையை விற்கிற கலைஞனின் கலைத்தன்மை கொள்கைக்காக கலையைப் படைப்பவனது கலைத் தன்மையைவிட எவ்வாறு உயர்கிறது? கலையுணர்வும் ரசனையும் வியாபாரிகளது ஏடுகளாலும் பிற சாதனங்களாலும் விகாரப் படுத்தப்பட்டு வருகிற ஒரு சூழலில் நாம் வாழ்கிறோம். இதை அடையாளங் காணாமற் கலைஞனின் சுதந்திரம்பற்றி புலம்புவதில் அர்த்தமில்லை.

ஒரு கலைப் படைப்பை அதன் கால எல்லைக்கும் சமுதாய வரம்புகட்கும் புறத்தே நிறுத்தி ஆராய்வது நியாயமற்றது. முற்போக்கு, பிற்போக்கு என்ற மதிப்பீடுகளை காலம், சூழல் என்பவற்றைக் கணக்கில் எடுக்காமற் பிரயோகிக்கும் அதி மார்க்சிய வாதிகளை நாம் இன்றுங் காணலாம். உள்ளடக்கத்துக்கு முதன்மை என்ற பேரில் கலைவடிவம், அழகியல் மதிப்பீடுகள் தொடர்பான அம்சங்களுக்கு இடமளிக்க மறுக்கும் போக்குகளையும் சிலர் கடைப்பிடிக்கலாம். ஆதவன் கிளப்பியுள்ள பிரச்சனை நிச்சயமாக இவை பற்றியதல்ல. சமுதாய உணர்வும் கலை மக்களுக்காக என்ற நோக்கமும் ஒரு கலைஞனை மறிக்கும் மனத்தடைகளாகின், அதன் காரணம் அவ்வுணர்வும் நோக்கமும் பொருந்தாதன என்றுதான் கருதவேண்டுமா? கலைஞனது சமுதாயப் பார்வையில் கோளாறு இருக்கலாம் என்றோ அவனது படைப்பாற்றல் குறையுடையது என்றோ கருதமுடியாதா? ஆதவனின் முறைப்பாடு வலிந்து புகுத்தப்படும் சமுதாயப் பார்வை பற்றியதாயின், வலிந்து புகுத்தப்படும் வேறுபல விஷயங்களையும் அவர் கவனிப்பது தகும்.

இன்று பாலுறவுக் காட்சி இல்லாத ஐரோப்பிய திரை, தொலைக்காட்சிப் படங்கள் அரியன. நல்ல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுத்தாளர்களின் நாவல்களிற்கூட பாலுறவு, ஆபாசமான உரையாடல்கள் என்பன மலிந்து காணப்படுகின்றன. பொழுதுபோக்கையே இலக்காகக் கொண்ட படைப்புகளில் வன்முறை, நடைமுறை சாராத சம்பவங்கள், அபத்தமான கற்பனைப் பொருட்கள் போன்றன மலிந்துள்ளன. இவற்றில் உள்ள வியாபார நோக்கைக் கணிப்பில் எடாமல் நவீன தொழில்நுட்ப விருத்தியின் விளைவான மட்டரகமான சாதனைகளையும் கலை என்று வியக்கிற பாமரத்தனம் வளர்ந்து வருகிறது. நவீன ஓவியம், சிற்பம், இசை என்ற பேரில் நடக்கும் பம்மாத்துகளையும் மோசடிகளையும் நாம் அறிவோம். இதெல்லாம் கலை கலைக்காக என்போரை அதிகம் வருத்துவதில்லை. கலை வியாபாரத்துக்காக என்பதை விட கலை மக்களுக்காக என்ற கொள்கையே கலைஞனைத் திணறடிப்பதாக அவர்களது எண்ணம். மனிதச் செயற்பாடு ஒவ்வொன்றும் இன்று விற்பனைப் பொருளாக மலிந்துவிட்ட ஒரு முதலாளித்துவ உலகில் மானுடனுடைய விடுதலையின் மூலமே அவனது உழைப்பு, சிந்தனை, கலை உணர்வு எல்லாமே விருத்தியடைய முடியும். இந்த விடுதலைக்குக் கலையின் பங்களிப்பு என்ன? தனக்காகத் தானென்று, தனக்குள் முடங்குவது கலையின் நோக்கமாயிருக்க வேண்டுமா அல்லது மானுடனுக்காக, மானுடத்துக்காகக் கலை என்று மானுட விடுதலைப் போராட்ட எழுச்சிப் பிரகடனமாக, அதன் ஜீவநாதமாக அமைவது கலையின் நோக்கமாயிருக்க வேண்டுமா? இந்தத் தெளிவு மிக எளியது. இதை யாரும் யாருக்கும் வற்புறுத்தித் திணிக்கமுடியாது. இந்தத் தெரிலை ஒவ்வொரு மனிதனும் தன் சமுதாய உணர்வின் அடிப்படையில், தன் சமுதாயப் பார்வைக்கேற்பச் செய்கிறான். இந்தத தெரிவைச் செய்யும் சுதந்திரம் அவனைச் சமுதாய மாற்றத்திற்கான போராட்டத்தின் ஒரு தரப்பிற் கொண்டுபோய் விடுகிறது. உண்மைக் கலைஞன், இந்த வகையான சாதாரண மானுஷ்ய அவலங்கட்கு அப்பாற்பட்ட அந்நியனாகக், கலை கலைக்காக என்ற கற்பனாலோகத்திற் சஞ்சரிக்கிறான் என்பது வெறும் பாசாங்கு. யதார்த்தத்தினின்று தப்பி ஓடும் முயற்சியில் தூய கலைவாதமும் சாராயமும் கஞ்சாப் புகையும் கூட மிகவும் உதவலாம். ஆனாலும் மனித வாழ்க்கை வெகு வித்தியாசமான விஷயம். அதிற் தப்பி ஓட விரும்புகிறவர்கள், வழிக்குத் துணை தேடுவது போதாமல், நின்று போராடுபவர்களை இழிவு செய்வது மிகவும் ஆபாசமானது.

கலை மக்களுக்காக என்று கருதும் கலைஞன் தன் லை ஆற்றலைச் சகமனிதர்களது சமுதாயப் பார்வையைக் கூர்மைப்படுத்தவும் போராட்ட உணர்வை வலிமைப்படுத்தவும் பயன்படுத்துகிறான். கலை இதனால் மாசபட்டுப் போகிறது என்று அலறுகிறவர்கள் சமுதாயம் பற்றிய பார்வையை மழுங்கடித்துக் கலையைக் காசாக்குகிற அதிகார வர்க்கத்தைச் சகட்டு மேனிக்கு நாலு வார்த்தை ஏசினாலும் அரசியலுணர்வை மழுங்கடிக்கும் பணியில் தம் பங்கைச் செலுத்த மறப்பதில்லை. கலைஞனுக்கு உள்ள சுதந்திரம் கலை அரசியலில் பயன்படுவதை மறுக்குமானால், அது சுதந்திரமே அல்ல.

எந்தவொரு சமுதாயமும் தனிமனிதனுக்கு வழங்குஞ் சுதந்திரம் வரையறையற்றதல்ல. சமுதாய மனிதன் அனுபவிக்கும் சுதந்திரம் சமுதாயப் பொறுப்புடன் இணைந்த ஒன்று. சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபட்டிருக்கும்போது தனிமனித சுதந்திரமும் பொறுப்புகளும் முரண்பாட்டுக்கு ஆளாகின்றன. போராட்டங்களின் போது மனிதரின் உரிமைகளும் பொறுப்புகளும் அவரவர் எந்தத் தரப்பில் நிற்கின்றனர் என்பதையொட்டி அமைகின்றன. ஒடுக்கப்பட்ட மனிதரின் சுதந்திரம் போராடி வெல்லப்பட வேண்டி ஒன்று. அந்தப் போராட்டத்தினின்று ஒடுங்கி நின்று அனுபவிக்கப்படும் சுதந்திரம் ஒடுக்கும் வர்க்கத்தின் அனுசரணையுடன் கிடைக்கும் ஒன்று. வர்க்கப் போராட்டம் வரலாற்று நிர்ப்பந்தத்தின் பாற்பட்டது எனினும், தனிமனிதனது போராடும் முடிவு ஒரு அளவுக்கேனுஞ் சுதந்திரமானது. அந்தச் சுதந்திரத்தைத் தெரிந்தெடுத்த கலைஞனும் அவனது கலையும் சுதந்திரமானவை. அவனது படைப்பின் மேன்மை அது எவ்வளவு தூரம் அந்தரங்க சுத்தியுடனும் ஆற்றலுடனும் அழகியல் உணர்வுடனும் உருவாக்கப்பட்டது என்பதைப் பொறுத்தது.

கலைஞன் சுதந்திரமானவன் எனில் விமர்சகனும் சுதந்திரமானவனே. ஒரு கலைப் படைப்பைப் பல கோணங்களினின்றும் விமர்சிக்கும் உரிமை அனைவர்க்கும் உண்டு. ஒரு கலைப் படைப்பின் சமுதாயப் பார்வை தவறென்றால் அதைத் தட்டிக் கேட்கும் உரிமையை நிராகரிப்பது கலைஞனின் சுதந்திரமல்ல. ஒரு படைப்பு பிற்போக்கானது எனக் காணின் அதைச் சொல்வது எந்தவொரு நேர்மையான முற்போக்கு வாதியினதும் ஆன்மீக உரிமை மட்டுமல்ல கடமையுமாகும். இது கலைஞனின் சுதந்திரத்திற் குறுக்கீடு என்று யாரும் கருதினால் அது சுதந்திரம் பற்றிய மிகவும் கோணலான ஒரு பார்வையின் விளைவேயாகும்.

முற்போக்காக எழுது என்று யாரும் யாரையும் நிர்ப்பந்திக்க முடியாது. ஏனெனில் முற்போக்கான படைப்பு முற்போக்கான சமுதாயப் பார்வையினதும் முன்னேறிய சிந்தனையினதும் விளைபொருள். ஒரு படைப்பு முற்போக்கானதாகஇல்லை என்ற விமர்சனம் சில சமயம் படைப்பாளி பற்றிய மிகையான எதிர்பார்ப்பின் விளைவாக இருக்கலாம். சில சமயம் முற்போக்கான தோற்றமும் மாறான உள்ளடக்கமும் பற்றிய கண்டனமாக இருக்கலாம். இவை அல்லாமல்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லவே அவசியமற்ற ஒரு வசனமாகவும் இருக்கலாம்- அந்தளவுக்குச் சமுதாயப் பார்வை நலிந்த படைப்பை வழங்கும் தூய கலைவாதிகளின் உணர்வுகள் இந்தவிதமான அரசியல் விமர்சனங்களைப் பற்றிக் கலவைப்பட வேண்டுமா? 'கலை கலைக்காகவே' என்ற மரித்துப் போன ஸ்லோகத்தை உச்சரிப்பவர்களுக்கு ஒரு சொல்; கலை சுதந்திரமானதாவும் கலைஞன் சுதந்திரமானவனாகவும் இருக்கச் சமுதாயம் சுதந்திரமானதாக இருக்க வேண்டு, சுதந்திரமான கலைஞர்களாக உங்களைக் கருத விரும்பும் ஒரு நப்பாசைக்காக போராட்ட இலக்கிய வாதிகளைக் கொச்சைப் படுத்தாதீர்கள்.

# நானும் எனது சோற்றுப் பானையும்

அழகிய மணிகளுடனும்
மரங்களுடனும்
பூக்களுடனும்
சிரித்திருந்த எனது தேசம்
வெறும் கற்களும்
துப்பாக்கி ரவைகளுமாய்
பத்தையாய் அழுது கிடக்கும்

செங்குருதியில் சன்னங்கள் மட்டும்
விளைந்து கிடக்கும்
ஒரு வனாந்தர ஏகாந்தம் மூடிய
எனது இம்மண்ணில்
எத்தனை எத்தனை
அரசியல் பருவப் பூக்கள்
முன்னொரு வசந்தத்தில்
வாயைப் பிளந்த என் சந்தோசப் பூக்கள்
ஒரு கணம்
உதிர்ந்து விழுந்தன.

செங்குருதி மேகங்கள்
எனது வான முகட்டில்
அங்கும் இங்கும்
மரணங்களைப் பொழிந்திற்று.
பொழிந்த மரணங்களில்
இன்னுமொரு புதிய இளவேனில்
விழுந்து பூத்தது.
மீண்டும்,
நான் சந்தோசப் பூக்களுக்காய்
வாயைப் பிளந்தேன்.

வயிறு புடைக்கச்
சோறிடச் சென்றவர்களே,
எனது ஒரு சோற்றுப் பானையையும்
எங்கு தொலைத்தீர்கள்?

எந்த வசந்தமும்
எந்த இளவேனிலும் வந்து தொலையட்டும்
செங்குருதி மேகங்கள் அழிந்த
ஓர் அமைதியான
எனது வான முகட்டில்
ஒரு கோப்பைக் கவிதைகளுடன்
தொலைந்துபோன
எனது சோற்றுப் பானையை
இனி நான்,
தேடப் போகிறேன்.

'கல்லூரன்'
(இலங்கை)

www.tamilarangam.net

# இசைக் கோலம்

- கே.சுந்தர் -

சங்கீதத்துக்கு இசை என்று பெயர் வந்ததற்கும் அதன் தன்மைக்கும் வெகுவான ஒற்றுமையுண்டு. யாரையும், எவருடைய மனதையும் இசைய வைப்பதாலேயே அதனை 'இசை' என்கிறார்கள். இந்த வல்லமையான இசையை, அதன் பூரணத் தன்மையை முற்றாக அறிந்தாலன்றி அதனால் மற்றவர்களை இசையவைக்க முடியாது. இந்த இசையை அறிவதற்கு முன் நாம் அதற்கு இசைந்து கொடுக்க வேண்டும். முழுமனதையும் ஒருநிலைப்படுத்தி அதன்வழியே செல்ல வேண்டும். அவரவரின் மனோநிலைகளைப் பொறுத்து சிலர் எளிதாக இசையைக் கற்றுக்கொண்டு விடுவர்.

இந்த இசையால் இவ்வுலகில் சாதிக்கக்கூடிய பல விடயங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ரஷ்ஷியாவில், ஒருவிதமான இசையை எழுப்புவதன் மூலம் பசுக்களில் இருந்து பெறப்படும் பால் வழமையைவிட கூடுதலாகக் கிடைக்கிறதாம். அதைவிட அந்த இசையால் ஒருவரை மயக்கி அவருடைய அடியுள்ளத்தில் இருக்கும் விடயங்களை அறியலாம் என்பது மனோதத்துவ ஆய்வாளர்களது கருத்து. மனோதத்துவ நிபுணர்கள் ஒருவரை ஆழ்நிலைக்கு கொண்டு செல்வதில் பல கஷ்டமான முறைகளைக் கையாள்கிறார்கள். இதற்கான இசைவடிவம் கண்டுபிடிக்கப்படின் பலருடைய சிரமங்களை நீக்குவதுடன் விஞ்திகளையும் குணப்படுத்தலாம்.

ஆதிகாலத்தில் வந்த கதைகள், புராணங்கள் இசையின் தன்மையைக் கூறிவந்தன. கண்ணன் குழலூதும்போது அவ்விடத்திலுள் ஜீவராசிகள் மயங்கிநிற்பர் என அறிந்துள்ளோம். இதில் எவ்வளவு உண்மை உண்டென்பதை நாமேதான் ஆராய்ந்தறிய வேண்டும்.

இந்த இசையை முழுமையாகப் பயின்று அதனால் பல பூன்களை உலகுக்கு எடுத்துக் காட்ட முடியும் என்பது பல ஆய்வாளர்களது கருத்து.

இதில் மனவருத்தமான ஒன்று என்னவென்றால் இசையென்றால் என்ன என்று புரியாதோரும், அல்லது அவற்றைப்பற்றி சிறிது தெரிந்து வைத்திருப்போரும்தம்மை அறியாமலோ என்னவோ இசையைப் போட்டுக் கிழித்துக் கொள்கிறார்கள். இந்நிலை மாறினால் பலசாதனைகளை நாமே உருவாக்கலாம் என்பது திண்ணம்.

## கனடா ஓ... கனடா!

* கனடாவில் கடந்த வருடம் ஹெலி மூலம், சிறையுடைப்புச் செய்து போதைமருந்து கடத்திய தமிழர்களை விடுவிக்கத் திட்டமிட்டோருக்கு கனேடிய நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது. இதில் சம்பந்தப்பட்ட மூன்று தமிழர்களில் ஒருவருக்கு 12வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

* அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலிருந்து 12மில்லியன் கனேடிய டொலர் பெறுமதியான போதைமருந்துகளைக் கடத்திய இளம் தமிழ்த் தம்பதியினர் பொலீசாரால் கைதுசெய்யப் பட்டனர். நியூயோர்க் நகரிலிருந்து இவர்கள் பொலீசாரால் பின்தொடரப்பட்டு கனடாவில் வைத்து கைதுசெய்யப் பட்டனர்.

www.tamilarangam.net

# இந்த இடம் அமையவேண்டும்

ம.வே. சிவகுமாரன்.

கோலி கலர் இருக்காப்பா?"

பெட்டிக்கடைப் பையன் நிமிர்ந்தான். படித்துக் கொண்டிருந்த பேப்பரை வெட்கத்துடன் மடித்து வைத்தான்.

''என்னங்க சார் வேணும்?"

திரும்பவும் சொன்னேன். வாளியில் குளிர்ந்த நீரில் சோடாப்பாட்டில்கள் மூழ்கியிருந்தன. பெட்டிக்கடைப் பையன் ஒன்றை எடுத்து உடைத்தான். ''ஐஸ் வேணுங்களா ?"

''உம்"

உள்ளங்கையில் ஐஸை ஏந்தி ஸ்பூனைத் தலைதிருப்பி அடித்தான். சிலீரென்று என் முகத்தில் தெறித்தது. என் வாழ்க்கையில் நான் குடிக்கிற முதல் கோலிக்கலர். வெறும் வேலை நிமித்தம் டெல்லி போய் விட்டேன். அடிக்கடி வெளிநாடு போகிற உத்தியோகம். அங்கேயும் இங்கேயுமாய் வயது போனது தெரியவில்லை. பெண் கல்யாணத்துக்கு வளர்ந்து விட்டாள். ஒரு கல்யாணத்துக்கு வேண்டிய சகல பொருட்களையும் என் மனைவி தயாராய்ச் சேர்த்திருக்கிறாள். மாப்பிள்ளை மட்டும் தான் தேடவேண்டும். இரண்டு மாதம் லீவ் போட்டேன். சென்னையில் என் மைத்துனர் வீட்டில் தங்கி ஜாதக வேட்டையில் இறங்கியிருக்கிறேன்.

பெட்டிக்கடைப் பையன் என் சட்டையைப் பார்த்துக் கொண்டிருந்தான். முழுக்கைச் சட்டை. அமெரிக்காவில் கட்டம் போட்டது. இந்த வயதில் இது போன்ற கட்டங்களில் சட்டை அணிந்து அவன் நிறையப் பேரைப் பார்த்திருக்க முடியாது. அட்ரஸ் சீட்டைப் பையனிடம் கொடுத்தேன். ரொம்ப நேரமாக அலைகிறேன். வெறுமனே விலாசம் கேட்டுப்போக வேண்டாமென்றுதான் கோலிகலர் குடித்தேன்.

பெயர் ஹரிஹரன். யு. பி. எஸ். ஸியில் ரிடையர் ஆனவர். டெல்லி நண்பர்கள் வட்டாரத்தில் அவருடைய மகன் ஜாதகம் எப்படியோ எங்களிடம் வந்தது ஒரே பையன். தாயார், இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள். என் மகள் ஜானகி அமெரிக்காவில் படிக்கிறாள். அவளுடைய ஜாதகத்தோடு பொருந்தியிருப்பதாக ஜோதிடர்கள் சொல்லுகிறார்கள். இங்கே தான் மேற்கு அண்ணா நகரில் எங்கேயோ இருக்கிறார். அவருடைய மகனும் வெளிநாட்டில்தான் படிக்கிறான். பெட்டிக்கடைப் பையனுக்கு விலாசம் தெரியவில்லை. வெய்யிலில் இறங்க யோசனையாய் இருந்தது. மணி பார்த்தேன். மூன்றடிக்கப் போகிறது. கடையில் பையன் மீண்டும் பேப்பர் படிக்க ஆரம்பித்து விட்டான். நான் திரும்பவும் அட்ரஸ் தேடிப் புறப்பட்டேன்.

''எலுமிச்சம் பழம் இருக்காம்மா?" காய்கறி கடை. கடையில் பெண் ஒருத்தி அயர்ந்திருந்தாள். அலுமினியப் பாத்திரங்களை உருட்டி அவள் குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. என் குரலில் அது திடுக்கிட்டு விட்டது. என்னையே அது பார்த்துக் கொண்டிருந்தது. வாயின் மேலன்னத்தில் நாக்கை அழுத்திக் குழந்தையைப் பார்த்துச்

www.tamilarangam.net

"என்னங்க வேணும்?" ஹரிஹரன் விலாசத்தை நீட்டினேன். அவளுக்கு ஆங்கிலம் தெரியவில்லை. படித்துக் காட்டினேன். யோசித்தாள். "சிவப்பா இருப்பாரா?" என்று கேட்டாள்.

"எனக்குந் தெரியாது. நான் ஹரிஹரனைப் பார்த்ததில்லை. இதுவரை தொடர்பு கடிதம் மூலம்தான்.

அந்தப் பெண் கடைக்குள் சட்டெனக் குனிந்து யாரையோ எழுப்பினாள். அவள் காலடியில், கடைக்குள்ளாக இத்தனை நேரமும் அவள் கணவன் தூங்கியிருக்கிறான். சிவந்த கண்களுடன் அவன் எழுந்து கொண்டான். கோரைப்பாயின் தடம் கன்னங்களில் பதிந்திருக்கிறது. மெல்லிய காற்றில் முன் சிகையாட அவன் விலாசச் சீட்டைப் பார்த்தான். தோ, இங்க தான். பையன் வெளிநாட்டிலே இருக்காரில்லே? ஆமாவா? அப்ப அவருதான். நம்ம கடைக்கு வர்றவருதான்.

"கறிகாயெல்லாம் தாராளமா வாங்குவாரா?"

"அதெல்லாம் நல்லா வாங்குவாங்க. இப்பக் கூட சித்த முன்னிக்க ஒரு கிலோ உருளைக்கிழங்கு வாங்கிக்கினு போனாரு".

தோட்டத்துடன் கூடிய சிறிய வீடு. கோலமெல்லாம் தடபுடலாய் இருந்தது. வைதீகக் குடும்பமாய் இருக்குமோ? என் மகள் ஜானகிக்குச் சமையல் தெரியாது. அதாவது மோர்க்குழம்பு உள்ளிட்ட உள்ளூர்ச்சமையல், நூடுல்ஸ், ஹாட்கேக் என்று சப்பென்ற அந்த ஊர்ச் சமையல் எல்லாம் வரும். ஹரிஹரனுடைய பெண் ஒருத்தி அமெரிக்காவில் படித்திருக்கிறாள். எனவே ஜானகியைப் புரிந்து கொள்வார்கள். தவிரவும், ஹரிஹரன் இரண்டு பெண்களையுமே நன்கு படிக்க வைத்திருக்கிறார். தெரிந்த விவரங்களிலிருந்து மிகவும் முற்போக்கானவராய்த் தோற்றம் அளிக்கிறார். பெண்களை அடக்கி வைக்காதவர். திறமை இருப்பின் ஊக்குவிப்பவர். எனக்கு ஜானகியின் சந்தோஷம் முக்கியம். இது நல்ல இடம் என்று படுகிறது. அவள் எனக்கு ஒரே பெண். ரேஸ்குதிரை மாதிரி இருப்பாள். நம்மூர்ச் சராசரி அம்பிப் பயல்களுக்கு அவளைப் பார்த்தால் காம்ப்ளெக்ஸ் வந்து விடும். புத்திசாலி. அதே போலத் தைர்யம். அவள் நல்லபடியாய் இருக்க வேண்டும். ஹரிஹரன் வீட்டு வாசல் திறந்தே இருக்கிறது. வலது காலைத் தூக்கி வைத்து உள்ளே நுழைந்தேன்.

வரவேற்பறையில் யாரோ பையன் இருந்தான். பேரனாக இருக்க வேண்டும். ஒரு பார்வையில் அளந்து உட்காரச் சொன்னான். மின்விசிறியைச் சுழலவிட்டு உள்ளே போனான். ஹாலில் அழகாய் ஒரு வீணையை நிறுத்தியிருந்தார்கள். வாசிக்கத் தெரிந்தவர்கள் யாரேனும் இருக்கவேண்டும். எனக்கு அந்த ஆசை மீண்டும் வந்து விட்டது. இந்த இடம் ஜானகிக்கு அமைய வேண்டும். இந்தப் பொடியன், ஒன்பது வயது இருக்காது இவனுக்கு. மரியாதை படித்திருக்கிறான். இதெல்லாம் கற்பித்து வருவதில்லை. இரத்தத்தில் பெறுவது. ஹரிஹரன் குடும்பம் பண்பு தெரிந்த குடும்பம். ஜானகி இங்கே வாழ்க்கைப்பட வேண்டும். இந்த வீட்டுக்கு ஒரு வாசனை இருக்கிறது. ஒவ்வொரு வீட்டுக்குமே வாசம் உண்டு. இந்த வீட்டின் வாசனை விசேஷமாய் இருக்கிறது. கர்சீப்பை எடுத்து ஒரு தடவை முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டேன்.

கர்ட்டன் விலகியது. ஹரிஹரன் வந்தார். இந்த ஆள் எனக்கு எல்லா விதங்களிலும் ஈடு கொடுக்கிறார். சிவப்புத்தான். மங்கோலிய உருண்டை முகத்தில் கண்ணாடி போட்டு அழகாய் நரைத்த தலை. "ஹலோ" கைகுலுக்கிக் கொண்டோம். ஆசாமி சிரிக்கக் கொஞ்சம் காசு கேட்பார் போலிருக்கிறது. ஆனால் நன்றாகப் பேசினார். முதலில் பூர்வீகங்களைத் துளாவினோம். ஹரிஹரன் மனைவி காப்பி கொண்டு வந்து, கைகூப்பி புன்சிரித்துப் போனாள். அவரும் 'திருச்சிராப்பள்ளி' என்றார். 'அடடே' என்றேன். உதிர்த்த பெயர்களை வைத்து உறவு உண்டா எனத் தேடினோம். கிட்டி முட்டி வந்து அப்புறம் ஒன்றும் புரியவில்லை. அந்தப் பொடியன் வந்து என் கையில் மாப்பிள்ளைப் பையன் போட்டோவை வைத்தான்.

சபாஷ். சரியான ஜோடி. ஜானகிக்கு இணையான கம்பீரம். எனக்கு உள்ளங்கால் வியர்த்தது. கடவுளே, இந்த இடம் என் மகளுக்கு அமைய வேண்டும். சீர்வரிசையெல்லாம்

இருக்கிறது. ஜானகிக்கு ஆயில்யம் நட்சத்திரம். பிள்ளைக்கு அப்பாவோ அல்லது அம்மாவோ இருக்கக்கூடாது. ஹரி ஹரன் பக்கத்தில் இப்போது அவர் மனைவி வந்து உட்கார்ந்து கொண்டார்.

அந்தப் பொடியனின் தாயார், ஹரிஹரனின் மூத்த மகள். லீவிற்கு வந்திருக்கிறாள். இவள்தான் வெளிநாட்டில் படித்தவள். எளிமையாய் இருக்கிறாள். பொதுவாகவே அடக்கமான குடும்பம். ஹரிஹரன் மகன் அபாரமாய் படித்திருக்கிறான். பெயருக்குப் பின்னால் ஏகமாய் அவன் ஒட்டியிருந்த எழுத்துக்களைப் பார்த்து அசந்து போனேன். அவனைப் பற்றிய பேச்சில் அவன் குடும்பத்தாருக்கு இயல்பான ஒரு மரியாதை ஓடியது. அந்தப் பொடியன் யாரும் சொல்லாமலே வந்து காலி தம்ப்ளர்களை எடுத்துப் போனான். ஜானகி இந்த வீட்டில்தான் வாழ்க்கைப்பட வேண்டும். இது புரிந்து செயல்படுகிற குடும்பம். நான் செய்யக் கூடியது எதுவுமில்லை. ஆயில்யம் நட்சத்திரம் பற்றிய உரையொன்றை எப்போதும் நான் மனதில் வைத்திருக்கிறேன். பலமுறை சொல்லித் தோற்றுப்போன உரை. என் மகளின் நல்வாழ்வுக்கு நான் ஆசைதான் படலாம். எதுவும் செய்ய முடியாது. தொண்டையைக் கனைத்துக் கொண்டேன். ஹரிஹரன் குடும்பத்தாரைப் பார்த்து என்னுடைய கால்கேட் சிரிப்பை உதிர்த்தேன். ஆயில்யம் நட்சத்திரம் பற்றியதான எனது ஆராய்ச்சிகளைத் தாக்கல் செய்யத் தயாரானேன்.

''அதில் பாருங்கள் மிஸ்டர் ஹரிஹரன்...'' ஒரு கணம் நிறுத்தினேன். ஹரிஹரன் முகத்தைப் பார்த்தேன். மாநிலச் செய்திகள் கேட்கிறவர் மாதிரி உணர்ச்சியற்று இருந்தது. என்னுடைய தைரியம் உடைந்துபோனது. நம்பிக்கை விழுந்து கொண்டிருந்தது. நாக்கு குழற நான் ''ஜானகிக்கு நட்சத்திரம் ஆயில்யம்'' என்றேன். ''ஆனாலும் என்ன? நாம் எல்லாம் முற்போக்காய் சிந்திக்கிறவர்கள். பொதுவாக இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களை மணம் செய்து கொடுக்குமிடத்தில் தாயோ, தகப்பனோ இருக்கக் கூடாது என்று சொல்லுவார்கள். இது வெறும் நம்பிக்கைதான். மனிதனின் படிப்படி வளர்ச்சியில் ஏதோ ஒரு படியில் நிர்ப்பந்தம் காரணமாக விளைந்த மூடநம்பிக்கை. சிறிய கிராமங்களில் தனித்தனியாக நாம் அப்போது இருந்திருக்க வேண்டும். சிறிய ஊர் என்பதால் சம்பந்தம் பேச வருபவர்களைத் தவிர்ப்பது கஷ்டமாயிருந்திருக்கும். அப்புறமும் அதே கிராமத்தில் அதே முகத்தைப் பார்க்க நேரிடுமே; அவ்வாறு நேரிடுகிற சங்கடத்தை தவிர்க்க சிருஷ்டிக்கப்பட்ட நம் முன்னோரின் குயுக்தி.

''நாம் உலகம் முழுவதையும் பார்த்திருக்கிறோம். அவர்கள் கம்ப்யூட்டரைக் கண்டு பிடித்தார்கள். நாம் கம்ப்யூட்டரில் ஜாதகம் எழுதி வாங்கிக் கொள்கிறோம். ஆஃப்செட் மிஷினில் பஞ்சாங்கம் அடிக்கிறோம். மிஸ்டர் ஹரிஹரன், நான் உங்களை மிகவும் நம்பியிருக்கிறேன். எனக்கு இந்த சம்பந்தத்தில் கொள்ளை ஆசை வந்துவிட்டது. உங்கள் பையனின் போட்டோ பார்த்தேன். விவேகானந்தருடையது போல ஒரு தெளிவு அவன் முகத்தில் இருக்கிறது. நீங்கள் தயவுபண்ண வேண்டும். ஜானகியை ஒருதரம் நேரே பார்த்தால் நீங்களே நல்லவிதமாய்த்தான் முடிவு எடுப்பீர்கள். மாமிதான் சொல்லவேண்டும். உங்கள் வீட்டுப் பொடியன் வெகு சமர்த்து. வந்தவுடன் உட்காரச் சொல்லி மின்விசிறி போட்டான். உங்கள் குடும்பம் எனக்குப் பிடித்திருக்கிறது. என் மகளை உங்களுக்கு நிச்சயம் பிடிக்கும். தவனை முறையில் அநேக நம்பிக்கைகளை மூடத்தனம் என்று விட்டிருக்கிறோம். முற்றாகவும், முடிவாகவும் எல்லாவற்றையும் மொத்தமாய்க் களைவோம், ஆமென்.''

நான் எழுந்து கொண்டேன். ஹரிஹரன் ஒன்றும் அவ்வளவு முற்போக்கானவரில்லை போலிருக்கிறது. என் பிரசங்கத்தின் பின் பகுதியில், அவர் முகம் போன போக்கு, அவர் ஒரு அம்மாஞ்சியெனக் காட்டிக் கொடுத்து விட்டது. செருப்பை மாட்டிக் கொள்ளும்போது நான் தடுமாறினேன். ஹரிஹரன் குடும்பத்தினர் மரியாதை தெரிந்தவர்கள். எழுந்து நின்றிருக்கிறார்கள். மெதுவாகப் படியிறங்கி நடந்து கேட் வந்தது. கிடக்கிறது. அவர்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். பஸ் ஸ்டாண்டிற்கு வந்தேன். மெட்ராஸில் பஸ் சர்வீஸ் நன்றாக இருக்கிறது. மைத்துனர் வீட்டுக்குச் சீக்கிரமே போய்ச் சேர்ந்தேன். ஜானகி எவ்வளவு புத்திசாலிப் பெண்? கேபிள் ஒன்று கொடுத்திருந்தாள்.

''ஒரு நல்ல ஜெர்மன் இளைஞனை மணந்து கொண்டேன். To hell with your Ayillyam.''

www.tamilarangam.net

www.tamilarangam.net

## சமுத்திரன்

# தமிழ் முஸ்லிம் மக்களிடையே வளரும் குரோதம் தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு

# மாபெரும் அறைகூவல்

சமீப காலங்களில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் மக்களுக்கு எதிராகத் தொடர்ச்சியான பல வன்செயல்கள் இடம்பெற்று உள்ளன. நூற்றுக்கணக்கான நிராயுதபாணிகளான முஸ்லிம் மக்கள் பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதன் எதிரொலியாக சில முஸ்லீம் குழுக்கள் பல சாதாரண தமிழர்களைக் கொன்று பழிவாங்கி உள்ளனர். தாக்கலும் எதிர்த் தாக்கலும் தொடர்கின்றன. தமிழைப் பொதுமொழியாகக் கொண்டுள்ள இவ்விரு சிறுபான்மை இனங்களுக்கும் இடையேயான இக்குரோதம் இலங்கை அரசுக்கும் அதன் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கும் சாதகமாகவே அமைந்துள்ளன. இலங்கையரசு விடுதலைப் புலிகளே முஸ்லீம் மக்களைக் கொலை செய்தனர் எனக் குற்றஞ் சாட்டியுள்ளது. அப்படிப் பிரச்சாரஞ் செய்கிறது. விடுதலைப் புலிகள் அதை மறுத்து அரசாங்கத்தையும் வேறு தமிழ்க் குழுக்களையும் குற்றஞ் சாட்டியுள்ளனர். 'Red 90' எனும் ஒரு குழுதான் இக்கொலைகளைச் செய்து வருகிறது எனக் கூறுகின்றனர் புலிகள். உண்மையில் இக் கோழைத்தனம் நிறைந்த கொலைகளுக்கு யார் பொறுப்பாளிகள் என்பது என்றோ வெளிவரும். ஆனால் யார் இதைச் செய்திருந்தாலும் இந்தக் கொலைகளும் அந்த அப்பாவி முஸ்லீம்கள் சிந்திய இரத்தமும் அவர்கள் பட்ட துன்பங்களும் தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் மீது படிந்துள்ள அழிக்கமுடியாத கறையாகும். இதைத் தடுத்து நிறுத்த இதுவரை ஒரு இயக்கமும் முன்வரவில்லை.

தமிழ்- முஸ்லீம் மக்களிடையே இன்று தோன்றியுள்ள குரோத உணர்வுகளும்

www.tamilarangam.net

கிழக்கு மாகாணத்து நிலமைகளும் நிராயுதபாணிகள்மீது இயக்கங்களும் ஆயுதமேந்திய குழுக்களும் வன்செயல்களைக் கட்டவிழ்த்து விடும்போது ஈழத்தில் வாழும் தமிழ்ச் சமூகத்தைப் பீடிக்கும் பீதிமிகுந்த மயான அமைதியும் சில பொதுப்படையான கேள்விகளைக் கிளப்புகின்றன. மக்களின் அமைதியோ வெளியேயுள்ள தமிழரின் காதுகள் செவிடுபடுமளவுக்கு சில செய்திகளை வெளிப்படுத்துகின்றன.

அடக்குமுறைக்கு எதிராகப் போரிடுவோர், விடுதலையை வேண்டிநிற்கும் மக்கள் இடைக்கிடையே ஆயினும் சுயவிமர்சன ரீதியில் "நாம் இப்போ எங்கே நிற்கிறோம்" எனக் கேட்டு சிந்தனையில் ஈடுபட வேண்டும்.

அனுராதபுரத்தில் நிராயுதபாணிகளான சிங்களப் பொதுமக்கள் பலர் ஆயுதமேந்திய தமிழர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்ட ஒரு தமிழ்க் கவிஞன் "இந்தக் கைகளை எந்தக் கங்கையில் கழுவுவது" எனக் கேட்டான். ஆனல் அதற்குப் பின் பல சம்பவங்கள் நடந்துவிட்டன. அந்தக் கவித்துவமான கேள்வியின் அரசியலுக்குத் திரும்புவது அவசியம்.

முதலாவதாக இந்த நிலைமைகள் தமிழ்த் தேசியவாதத்தின் தலையாய போக்கு அதாவது, தமிழ்மக்கள் மீது மேலாதிக்கஞ் செய்யும் கருத்தமைவு குறுகிய இனவாதமே என்பதை மீண்டும் மீண்டும் இரத்தக் களறிகளுக்கூடாக உலகறியப் பறைசாற்றுகின்றன. தமிழ்த் தேசியவாதம் தனது அரசியலை தன் எதிரியான சிங்கள இனவாதத்திடம் இருந்துதான் கற்றுக்கொண்டது போலும். நம்மை ஒடுக்கும் சிங்களப் பேரினவாதத்தின் கருத்தமைவை மாதிரியாகக் கொண்டே மரபுரீதியான தமிழ்த் தலைமை தமிழ்த் தேசியவாதத்துக்கு உருவமும் உள்ளடக்கமும் கொடுத்தது. இதன் விளைவு குறுகிய தமிழ் இனவாதம். இதுவே தமிழினத்தின் தனித்துவத்தையும் தேசிய உணர்வையும் இன்னும் வரையறுக்கிறது. இத்தகைய ஒரு பின்னோக்கிய கருத்தமைவுக்கு ஆளாகும் இனம் விடுதலை என்ற பெயரில் தன்னைத் தானே அரசியல், கலாசார ரீதியில் சிறைவைத்துக் கொள்கிறது. இது பெருமைப்படக்கூடிய ஒரு விடயமல்ல.

பழைய தமிழ்த் தலைமை வட- கிழக்கு முஸ்லீம் மக்கள் பற்றி சரியான கணிப்பீட்டைக் கொண்டிருக்கவில்லை. அது அவர்களை சந்தர்ப்பவாத நோக்கிலேயே அணுகியது. அவர்களின் தனித்துவத்தையும், இலங்கையில் தமிழரையும் விடக் குறைந்த சிறுபான்மையினர் என்ற காரணத்தாலும், வரலாற்று ரீதியான அனுபவங்களாலும், அவர்கள் கொண்டுள்ள அங்க வாய்ப்புகளையும் உணர்ந்து கொள்ளும் பண்போ அரசியல் முதிர்ச்சியோ பழைய தலைமைக்கு இருந்ததாகத் தெரியவில்லை. அதுபோன்றே புதிய தலைமைகளும்.

தமிழ்த் தலைமை என்றுமே முஸ்லீம் மக்களின் உரிமைகளுக்காகப் போராடத் தயாராக இருக்கவில்லை. வட- கிழக்கில் வாழும் முஸ்லீம்களின் விசேஷ பிரச்சனைகளை, அவர்களது அபிலாஷைகளைப் பொருட்படுத்தாது குறுகிய இனவாத நோக்கில் அவர்களையும் தமிழர்களாகப் பார்க்கும் அணுகுமுறையால் முஸ்லீம் மக்களது நம்பிக்கையை வென்றெடுக்க முடியாது.

புதிய இயக்கங்கள் தோன்றிய காலத்தில் சில நம்பிக்கைகளும் தோன்றின. சில இயக்கங்கள் ஆரம்பத்தில் முஸ்லீம் மக்களையும் அணுகின. ஏன் பல முஸ்லீம் இளைஞர்கள்கூட இயக்கங்களில்

www.tamilarangam.net

சேர்ந்தனர். போராடினர். ஆனால் காலப்போக்கில் பழைய அணுகுமுறையான குறுகிய தமிழ் இனவாதமே தலைதூக்கியது. பலம்பெற்றது.

தமிழர்களுக்கு முன்பே சிங்களப் பேரினவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லீம்கள். 1915இல் இடம்பெற்ற முஸ்லீம் எதிர்ப்பு வன்செயல்கள் முஸ்லீம் மக்களுக்கு தமது சிறுபான்மை அந்தஸ்துபற்றிய சில அடிப்படைப் பாடங்களைப் புகட்டின. அப்போதைய பிரபல தமிழ்த் தலைவர்களான சேர்.பொன் இராமநாதன் போன்றோர் முஸ்லீம் மக்களின் அபிலாஷைகளை ஏக்கங்களைப் புரிந்து செயற்படவில்லை. ஆயினும் வட-கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்கள் தமக்கும் தமிழர்களுக்கும் இடையேயான பொதுநலன்களை மதித்தே வந்துள்ளனர். அவர்கள் தமிழ் அரசியற் கட்சிகள், இயக்கங்கள் மீது நம்பிக்கை இழந்து, சந்தேகங் கொள்ளும் நிலை ஏற்பட்டதற்கான முக்கிய பொறுப்பு தமிழ் அரசியல் அமைப்புகளையே சாரும். பேச்சளவில் பிரகடனங்களில் என்னதான் வேறுபாடு இருந்தாலும் நடைமுறையில் புதிய தலைமைகள் பழைய தலைமைகள் விட்ட வரலாற்று ரீதியான தவறுகளைத் தொடர்கின்றன. ஒரு முக்கிய வித்தியாசம் இன்று துப்பாக்கியே அரசியலைக் கட்டுப்படுத்துகிறது. மனிதருக்குச் சிலவேளை வாய்விட்டு அழும் சுதந்திரம் இருக்கலாம் ஆனால், வாய்திறந்து மாற்றுக் கருத்துகளைத் தெரிவிக்கும் சுதந்திரமில்லை.

ஆனால் இன்றைய தமிழ்- முஸ்லீம் பிரச்சனை ஒரு வரலாற்று ரீதியான சோதனையாக அமைந்துள்ளது. வட-கிழக்கில் தமிழரின் விடுதலை உணர்வின் அவர்களின் நாகரீக விழுமியங்களின்



உரிமைகளுக்காக அநீதியை எதிர்த்துப் போராடுபவர்கள் காலத்துக்குக் காலம் உருவாகிக் கொண்டே இருப்பார்கள். இவர்களுக்கு குண்டுகள் பரிசாக அளிக்கப்பட்டுக் கொண்டே வந்துள்ளன. இவர்களது கோரிக்கைகள் பல்வேறு பட்டனவாக இருக்கும். இவர்கள் வரிசையில் சூழலியல் பாதுகாப்புக்காக உயிரீந்த முதற் போராளியாகத் திகழ்பவர் 'சிக்கேகோ மென்ஸ்' ஆவார். இவரே இன்றைய அமெசோனா மழைக்காடுகளை அழிப்போருக்கும் அங்குவாழும் மக்களின் வாழ்நிலை, கலை, கலாச்சாரம் ஆகியவற்றை அழிப்போருக்கும் எதிராகப் போராடுவோருக்கு எடுத்துக்காட்டாகவும் வழிகாட்டியாகவும் திகழ்கிறார். இவரது மக்கள் மீதான அக்கறை, மழைக்காடு, உலகசூழலியல் மீதான அக்கறை என்பன துப்பாக்கி குண்டுகளை பரிசாக அழித்துள்ளது. இவரது வாழ்நிலை, போராட்டமுறை என்பன பற்றிய படமாக்கத்தை ஜே.என். படத்தயாரிப்பாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இவரின் திரைப்படம் மேலும் பல மழைக்காடுகள் பாதுகாப்பாளருக்கும் சூழலியல் பாதுகாப்பாளர்களுக்கும் தூண்டுகோலாக அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

- உலகன் -

www.tamilarangam.net

உரைகல், அவர்கள் மத்தியில் வாழும் சிறுபான்மையினரான முஸ்லீம்கள் மீது காட்டும் மதிப்பும் அவர்களின் அபிலாஷைகளின் தனித்துவத்தின் பூரண அங்கீகரிப்புமாகும். இந்தப் பரீட்சையில் தமிழ் இயக்கங்களும் தமிழினமும் தேறாதவரை நமது விடுதலை பூரணமடையாது. அது உண்மையான விடுதலையாக அமையாது. மிகவும் வருந்தத் தக்கது என்னவெனில் பெரிய தமிழ் இயக்கங்கள் எல்லாமே இந்த அடிப்படை அரசியல் மனிதத்துவப் பரீட்சையில் தோல்வியடைந்து விட்டன.

வட- கிழக்கு முஸ்லீம் மக்களின் நம்பிக்கையைப் பூரணமாகப் பெறாதவரை இந்த இரு மாகாணங்களது இணைப்பும் அங்கு ஒரு அரசு ஏற்படுவதும் சாத்தியமாகாது. தமது பாதுகாப்பும் சுயமரியாதையும் உத்தரவாதமுமற்ற ஒரு "தமிழ் ஈழத்தில்" வாழ ஏன் முஸ்லீம்கள் சம்மதிக்க வேண்டும். அவர்கள் துப்பாக்கி முனையில் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்ந்துதான் ஆகவேண்டுமா? அத்தகைய ஒரு தமிழ் ஈழத்துக்காகவா தமிழர்கள் போராடுகிறார்கள்? குறிப்பாக கிழக்கு மாகாணம் முஸ்லீம்களின் கலாசாரக் கேந்திரமாகும். அப்பகுதி அவர்களின் புதிய அரசியற் கேந்திரமாகவும் பரிணமிக்கிறது. அங்கிருந்துதான் புதிய முஸ்லீம் தலைமை உருவாகிறது. இந்தத் தலைமையுடன் ஜனநாயக ரீதியான உறவினை வளர்க்க தமிழ்த் தலைமை முன்வர வேண்டும்.

தமிழ்- முஸ்லீம் மக்களின் பாரம்பரிய சகோதரத்துவம் பாதிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் ஈழத் தமிழ்க் கலை, இலக்கியத்தின் மேம்பாட்டுக்கும் முஸ்லீம் எழுத்தாளர்கள் தொடர்ச்சியாக அளித்துவரும் பங்கினையாயினும் நினைவு கொள்வோமாக. கொழும்பில் நடுத்தர வர்க்கத் தமிழர்கள் பொது இடங்களில் தமிழைப் பேச வெட்கப்படும், தயங்கும் போது எங்கும் துணிந்து தமிழைப் பேசும் அந்த முஸ்லீம் தொழிலாளர்களது துணிவையும் தன்மானத்தையும் நினைவிற் கொள்வோமாக. சிங்கள இனவாதத்தை எதிர்க்கும் நாம் சிங்கள மக்களை எதிர்க்கவில்லை என்று சொல்லிப் பெருமைப்படுகிறோம். தமிழர் மத்தியில் சிறுபான்மையினராக வாழும் முஸ்லீம்களைத் தாக்கும் தமிழ் இனவாதத்தையும் நாம் எதிர்க்க வேண்டும்.

சகல இனவாதங்களையும் எதிர்ப்போம். ஈழத்து முஸ்லீம்கள்மீது தமிழ் இனவாதம் கட்டவிழ்த்து விடப்படுதலை கண்டிப்போம். அதை எக்காரணங் கொண்டும் நியாயப்படுத்த மறுப்போம். இதை தமிழர்கள் செய்யத் தவறினால் தமது விடுதலைப் போராட்டத்தின் தர்மத்தைப் பேணமுடியாது. தமிழர்கள் விடுதலை பெறவும் அதை அனுபவிக்கவும் அருகதை உள்ளவர்கள் என்ற நிலையை அடையமுடியாது.



"சித்திரகுப்தா! அமெரிக்க ஜனாதிபதி 'புஷ்'ஷிடம் சென்று எமக்கு மேலதிக ஆயுதவுதவி கேட்டுவாரும்!"

"என்ன யமமகாராஜா திடீரென்டு?"

"பயந்தானய்யா!... ஈழப்பழிவாங்கல்கள் இலங்கையைவிட்டு இந்தியா, ஐரோப்பா எண்டு பரவிவிட்டுது. அடுத்ததாக எமலோகத்துக்கும் வரலாம் என எமது உளவுத்துறையினர் கூறுகின்றனர்... அதுதான்..."

- ஈழத்தோன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


**REISEHUSET**
TRAVEL AGENCY

RAM PARTAP
Managing Director

Calmeyersgate 13
0183 Oslo 1
Norway

Tlf. (02) 36 27 50
Fax. (02) 36 45 04
Tlx. 79819 REISE N

எயர் லங்காவின் 1989ம் ஆண்டிற்கான சிறந்த முகவர் விருதினைப் பெற்ற

REISEHUSET
TRAVEL AGENCY

* தாய் நாட்டிற்கோ அல்லது தென்னிந்தியாவுக்கோ (மெட்றுஸ், திருச்சி, திருவனந்தபுரம்) பயணம் செய்யும் இலங்கையர்க்கு விசேட கழிவுபெற்ற பிரயாணச் சீட்டு வழங்குகிறோம்.

* ஒருவழிப் பயணத்துக்கும் (One way) விசேட கழிவுண்டு.

* உங்களின் சௌகரியமான பயணமே எமது நோக்கம்.

AIRLANKA
*It's a taste of Paradise*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


THE FULLY LICENCED IATA TRAVEL AGENCY IN OSLO HAVING THE NAME OF 'REISEHUSET' WHICH HAS LATEST EQUIPMENT TO MAKE YOUR TRAVEL EASIER, CHEAPER, COMFORTABLE AND TIME SAVING WITH SPECIALLY TRAINED AND EXPERIENCED STAFF.

# REISEHUSET

TRAVEL AGENCY

**GATE WAY TO**

- COLOMBO
- MALE
- MADRAS
- TRIVANTRAM
- TIRUCHI
- FAR EAST AND AUSTRALIA


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- அ.அலெக்ஸ் -

# உலகியல் ஒப்புநோக்கில் எமது சமூகத்தின் சமகால வளர்ச்சி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

2. தரகு முதலாளித்துவப் பேரினவாதப் போக்கு

பிரித்தானிய காலனித்துவம் தமது அடிவருடிக் கூட்டமான தரகு முதலாளித்துவத்திடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு சென்றபோதும் அவர்களால் ஓர் முதாளித்துவப் புரட்சியைத் தன்னும் முன்னெடுக்க முடியாதவாறு பிரித்தானியரின் பிரித்தாளும் சூழ்ச்சியின் போதனை காரணமாக வளர்த்தெடுக்கபட்ட இனவாதக் கண்ணோட்டம் பெரும்பான்மை சிங்கள அரசியல்வாதிகளிடம் பேரினவாதச் சிந்தனையோட்டத்ஈத மிகவும் வேகமாக வளர்த்தெடுத்தது. இதன் விளைவாக திட்டமிட்ட வகையில் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் தமிழ் பேசும் மக்களை ஒடுக்கி வந்தது அரச யந்திரம்.

எமது பாரம்பரியப் பிரதேசத்தில் செறிந்து கிடக்கும் இயற்கை வளங்களையும் மூலப் பொருட்களையும் பயன்படுத்தி தொழில் துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதில் பேரினவாத அரசுகள் எந்தக் காலகட்டத்திலும் முன்வந்ததில்லை. பெரிய தொகையான முதலீடுகளை தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் முடக்குவதா (?) என்ற போக்கும், அவ்வாறு செய்யப்படும் முயற்சிகளால் ஏற்படும் தொழில் வாய்ப்புகள் யாவும் தமிழ் மக்களுக்கே போய்ச் சேரும் என்ற பேரினவாதப் போக்கின் காரணமாகவும் தமிழ்ப் பிரதேசத்தில் எந்த வகையான தொழில் துறை அபிவிருத்தியும் செய்யப்படவில்லை. கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை போன்றவைகள் எந்தவித அபிவிருத்தியும் செய்யப்படாமல் அரசால் கைவிடப்பட்ட நிலையில் இருக்குமபோது காகிதத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருளான வைக்கோல் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் அதிகமாகக் கிடைத்தும் அதை அப்பிராந்தியத்திலுள்ள ஆலைக்குப் பயன்படுத்தி அபிவிருத்திகளை மேற்கொள்ளாது மொனராகலை மாவட்டத்தில் உள்ள எம்பிலிப்பிட்டிய என்னும் இடத்தில் ரொழிற்சாலையை அமைத்து அதற்குத் தேவையான வைக்கோலை மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் இருந்து எடுத்துச் செல்லும் உள்நோக்கம் உதாரணத்திற்குப் போதுமானதாகும். 70களில் உருவாக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் எமது பிரதேசத்தில் உருவாகிய சிறு கைதொழில் திட்டங்கள் முன்னேற்றமாக வளர்ந்த வேளையில் யூ.என்.பி. அரசின் கட்டுப்பாடற்ற இறக்குமதிப் போலிப் பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட சிறு முயற்சிகளும் சீரழிந்துவிட்டன.

இயற்கையிலேயே அமைந்துவிட்ட நீர்நிலைகளும் பரந்துபட்ட செழிப்பான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொய்யன் தேவாலயம்
30.09.90
மாலை 6 மணி

# ராஜினி திரணகமவின் ஓராண்டு நினைவுகூரலும் Broken Palmyra அறிமுகமும்

சுவடுகள் பதிப்பகம்

நிலப்பரப்புகளும் இங்கு வாழக்கூடிய மக்களை பன்னெடுங்காலமாகவே விவசாயத் துறை சார்ந்த பொருளாதாரத்துடனேயே பின்னிப் பிணைத்துள்ளன. 26000 ஹெக்டர் காணியில் பெரும்போக நெல் விளைவிக்கப்படுகிறது. இது இலங்கை நெல் விளைச்சல் காணி விஸ்தீரணத்தில் 34% ஆகும். சிறுபோகத்தில் 80,000 ஹெக்டேரில் நெல் விளைவிக்கப்படுகிறது. இது இலங்கையின் சிறுபோக விளைச்சலில் 22% ஆகும். இக்காணிகளில் ஓராண்டில் 50,000 தொன் அரிசி பெறக்கூடிய நெல் விளைவிக்கச் சாத்தியம் இருந்தும் பேரினவாத அரச யந்திரங்களின் வேண்டா வெறுப்பான போக்கினால் உரிய முறையில் தொழில்நுட்பத்தினையும் விஞ்ஞானத்தினையும் மூலதனச் செறிவையும் பிரயோகிக்காமையாலும் திட்டமிட்ட குடியேற்றத் திட்டத்திற்காக விவசாயக் காணிகள் பறிக்கப் பட்டமையாலும் இன்றுவரை உணவில் தன்னிறைவு காணமுடியாது போய்விட்டது. சில குறிப்பிட்ட விலைமதிப்பு வாய்ந்த விவசாயப் பொருட்கள் இருந்தும் பேரினவாத அரசுகள் பாராமுகமாக இருந்து வருகின்றன. மாறாக உப உணவுப் பொருட்களான உருளைக் கிழங்கு வெங்காயம் மிளகாய் போன்ற பொருட்களைச் சந்தைப்படுத்த முற்படும் வேளையில் வெளிநாடுகளில் இருந்து இப்பொருட்களை இறக்குமதி செய்து உள்ளூர் உற்பத்தி முறைகளைச் சீர்குலைக்கும் போக்கு பேரினவாத அரசால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எமது பிரதேசத்தில் பெரும்தொகையான வருவாயைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய மற்றுமொரு பாரிய பரந்துபட்ட தொழில்துறை கடல்தொழிலாகும். எமது பிரதேசத்தில் இலங்கையின் கடல்பரப்பில் 60%க்கு அதிக பகுதிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இலங்கையில் மீன்பிடிக்கு உகந்த கடல்பரப்பில் 50%ஐ எமது பிரதேசம் கொண்டுள்ளது. இவ்வகையான வாய்ப்புகளும் வசதிகளும் இருந்தும் தமிழ்ப் பிரதேசம் என்ற காரணத்துக்காக இத்தொழில் துறையை நவீன மயப்படுத்தி அபிவிருத்தி செய்வதில் அக்கறையின்மையாக இருக்கிறது. திட்டமிட்ட ரீதியான குடியேற்றத் திட்டங்களுக்குப் பாவிப்பதற்கு காலநிலைக்கேற்ப மீன்பிடிக்கும் இடங்களை மாற்றிக் கொள்ளும் சிங்களக் கடற் தொழிலாளர்களை எமது பிரதேசத்தில் மிகவும் அக்கறையுடன் குடியமர்த்தி வருகிறது. இவ்வகையான போக்குகளும் கடற்தொழில் துறையின் வளர்ச்சியை மிகவும் பாதித்துள்ளது.

மன்னார் கடற்கரைப் பிரதேசத்தில்

www.tamilarangam.net

எண்ணெய் வளத்திற்கான சாத்தியங்கள் இருப்பதற்காக கருதப்படுகின்ற போதும் அதற்கான முயற்சிகள் பேரினவாத அரசுகளால் மேற்கொள்ளப் படவில்லை. திட்டமிட்ட கல்வித் திட்டத்தினாலும் தமிழ் சமூகத்தின் கல்வி வளர்ச்சியாலும் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இப்பேரினவாத அரசு எமது சமூகத்தில் தொழிற்துறை, கல்வி, அரசியல் போன்றவற்றின் வளர்ச்சியால் பின்னடைவுக்கு தரகு முதலாளித்துவ பேரினவாத அரசுகளும் ஒருவகையில் காரணமாகும்.

3. <u>எம் சமூகத்தில் பெண் விடுதலை</u>

எமது சமூகத்தில் சரிபாதியினருக்கு மேலாக இருக்கும் பெண்கள் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக முகங்கொடுக்க வேண்டியுள்ளது. ஆண் மேலாதிக்கவாதம் என்கின்ற அடித்தளத்தில் கட்டியெழுப்பப் பட்டிருக்கிற தனியுடைமைச் சமுதாயத்திற்குச் சேவகம் செய்யவும் அதைக் கட்டிக் காக்கவும் பெண் ஒடுக்குமுறை மிகவும் தேவைப்படுகிறது. பெண் என்பவள் எமது சமுதாயச் சந்தையில் விலைகொடுத்து விற்கப்படும் வியாபாரப் பொருளாகவே கருதப்படுகிறாள். இக்கட்டமைப்பைக் காப்பதற்காக ஆண் என்பவன் தன்னை விபச்சாரம் செய்கிறான் என்பதைப் பெரும்பான்மையான ஆண்கள் சிந்திக்கத் தவறிவிடுகின்றனர். வீரத்திலும், அறிவிலும் பெண்கள் ஆண்களுக்கு கீழானவர்கள் என்ற கருத்தோட்டம் சமூகக் கட்டமைப்புகளில் இழையோடி இருப்பதால், எமது சமூக வளர்ச்சியில் பெண் இனத்தின் நேரடியான பங்களிப்புக்கு சமூக அங்கீகாரம் இல்லாமையால் அவர்களுடைய செயல்பாடுகள் குறுகிய வரையறைக்குட்பட்டே அமைந்து விடுகின்றது. இதன் காரணமாக பெண்களிலிருந்து அறிஞர்களையோ அல்லது சிந்தனையாளர்களையோ சமூகத்தின் வளர்ச்சிக்கு தோற்றுவிக்க முடியாத தடைக் கற்களாகி விடுகின்றது.

4. <u>கலவையாக்கப்பட்டுவிட்ட பிற்போக்குவாத காரணிகள்.</u>

மதம், கலாசாரம், பண்பாடு, மூடநம்பிக்கை, பிரதேசவாதம் என்கின்ற பிற்போக்குவாதக் காரணிகள் யாவும் எமது சமூக வளர்ச்சியை பின்னோக்கி நகர்த்தி விட்டன. ஒரு பெண் நீண்ட காலம் தாய்மை அடையவில்லை எனில் அதற்கான குறைபாடுகளையும் நிவிர்த்திகளையும் விஞ்ஞான

* சூழல் பாதுகாப்பான கார்

நோர்வே நாட்டுப் பொறியியலாளர் ஒட்ஹேவ்லாண்ட் சூழலுக்குக் கெடுதி விளைவிக்காத மெதேன் வாயுவில் இயங்கும் காரை வடிவமைத்துள்ளார். இது 68லீட்டருக்கு 100மீட்டர்வரை ஓடக்கூடியது. ஐரோப்பாவில் முதன்மை வகிக்கும் சூழலுக்கு நட்பான மோட்டார் வாகனமாக முன்னணியில் இது திகழ்கின்றது.

இது மெதேன் வாயுவாலும் பெற்றோலாலும் இயங்கக்கூடியதாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

- சமாதானி -

காலம்
Vayal
5, Kutchery lane
Mylapore
Madras 4
S.India

www.tamilarangam.net


பரிசோதனையினூடு தீர்வு காண முற்படாது பிள்ளையார் சிலையை ஒரு நாளுக்குப் பத்துத் தடவை சுற்றிவந்தால் குழந்தை கிடைத்துவிடும் என்கின்ற மனோபாவம் இவ்விஞ்ஞான யுகத்திலும் இருக்கிறதென்றால் எமது சமூகத்தின் மூடநம்பிக்கையின் மொத்த உருவத்தையும் மதத்தின் மீது இருக்கின்ற அதீத நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது என்றே எண்ணத் தோன்றுகிறது. மதம், கலாசாரம், மூடநம்பிக்கை, பிரதேச வாதம் போன்ற காரணிகள் சுய லாபங்களுக்காக சமூகத்தின் மனித நேயத்தை அழித்தும், சமூகங்களுக்கிடையில் குரோதங்களையும் அவநம்பிக்கைகளையும் தோற்றுவிப்பதில் பெரும் பங்காற்றி வருகிறது. குறிப்பாக

குடாநாட்டு மனோபாவமும் தனித்துவக் கண்ணோட்டமும் பிரதேசவாதங்களைக் கிளப்பிவிட்டிருந்தன. குறிப்பாக மட்டக்களப்பில் உருவாக்கப் பட்டிருந்த யாழ் அகற்றுச் சங்கம், கிழக்குக்கு வேலைக்குச் செல்லும் குடாநாட்டு மக்களுக்கு இச்சங்கம் போர்க் கொடி உயர்த்தியது. இதில் தானைத் தமிழன் காசி ஆனந்தனும் அங்கம் வகித்தார்.

இவர் பின்பு தமிழீழம் பற்றி முழக்கமிட்டது வேடிக்கையானது. இதேபோல் வன்னியிலும் உருவாக்கப் பட்டது. இவைகளின் பின்னணியில் இப் பிற்போக்குவாத காரணிகள் யாவும் அடங்கியிருந்தமையால் சமூகம் விழிப்புணர்ச்சி அடைவதற்குப் பதிலாக பின்னோக்கி நகர்ந்துள்ளது.

(அடுத்த இதழில் முடியும்)

இக்கட்டுரை இலக்கியச் சந்திப்பில் வாசிக்கப் பட்டது.




சுவடுகள் சந்தா விகிதம்

நோர்வே, சுவீடன், டென்மார்க் 300 NKR
ஐரோப்பிய நாடுகள் 400 NKR
ஏனைய நாடுகள் 500 NKR

வங்கிக் கணக்கிலக்கம் 160752 16032

தொடர்புகட்கு

SUVADUHAL
Herslebs Gate 43
0578, Oslo 5
NORWAY

சுவடுகள் விளம்பர விகிதம்

பின் அட்டை 400 NKR
உள் அட்டை 350 NKR
முழுப் பக்கம் 250 NKR

சுவடுகள் ஆசிரியருக்கு,

கடந்த பல சுவடுகள் வெளியீடுகளில் நீங்கள் உண்மைகளை வெளிக் கொணர்ந்து உள்ளீர்கள். பத்திரிகைகள் தடை செய்யப் படுவதும், பத்திரிகையாளர்கள் ஜனநாயக விரோதிகளால் கொல்லப்படுவதும், அச்சுறுத்தப் படுவதும் பற்றிய செய்திகளை அவ்வப்போது வாசகர்களுக்கு வெளியிட்டு வந்துள்ளீர்கள். இந்தவகையில் கடந்த யூன்மாத வெளியீட்டில் பிரபல சிங்களப் பத்திரிகையாளரும், முற்போக்கு சிந்தனையாளருமான றிச்சட் டி சொய்சாவின் காட்டுமிராண்டித் தனமான கொலை குறித்து வெளியான செய்தி மிகவும் வரவேற்கக்கூடிய ஒன்று. இதுபோன்ற ஜனநாயக மறுப்பு சம்பவங்களை துணிவுடன் வாசகர்கள் முன் கொண்டு வருவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

அத்துடன், கடந்த யூன்மாத சுவடுகளில் குறிஞ்சிக் குமரனின் மலையக மக்கள், யாழ்ப்பாணத் தலைமைகள் மற்றும் மலையக முதலாளித்துவத் தலைமைகளின் சந்தர்ப்பவாதப் போக்கால் சீரழிவது பற்றிய கட்டுரையும் அவர்களது இன்றைய அரசியற் சூழ்நிலையைப் படம்போட்டுக் காட்டுகிறது. இதேபோன்ற ஆக்கங்களை எதிர்பார்க்கும் அதேவேளை சுவடுகளின் நழுவற் போக்கையும் சுட்டிக்காட்டுவது பத்திரிகையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உகந்ததே.

ஒரு கருத்துரீதியான பத்திரிகை, வாசகர்கள் அவ்வப்போது எதிர்நோக்கும் பிரச்சனையில் தனது கருத்து என்ன என்பதனைத் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால் சுவடுகள் சில சம்பவங்களையிட்டு மௌனம் சாதித்துள்ளது. அதாவது தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், ஈபிஆர்எல்எஃவ் தலைவர் பத்மநாபா மற்றும் அதன் முக்கிய தலைவர்கள், இந்தியப் பிரஜைகள் படுகொலை போன்ற சம்பவங்களில் சுவடுகளின் கருத்து என்ன என்பது இன்றுவரை வாசகர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே சந்தர்ப்பவாதம், நழுவல்வாதம் போன்றவற்றைத் தவிர்த்து ஆரோக்கியமான பத்திரிகையாக சுவடுகள் வெளிவர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

- உதயன் -

(ஒஸ்லோ)

# நாற்சந்தி

கடந்த இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் அழகாக இன்றைய சூழலைத் தீட்டியிருந்தீர்கள். ஆனால் ஏனோதானோ உங்களால் யுத்தந் தொடங்கக் காரணமான காரணிகளை வெளிவிட முடியவில்லை. வெறுமனே மழுப்பலாக 'யுத்தந் தொடங்கப்பட்ட காரணம் பலரையும் கவலையுறச் செய்த விடயமாகும்' என மொட்டையாகவே வெளியிடப் பட்டிருந்தது கவலைதருவதாகும். ஒரு பத்திரிகையானது தவறுகளை அம்பலப் படுத்துவதுடன், சரியானதையும் நீதியானதையும் சுட்டிக்காட்டுவதையே பிரதானமாகக் கடைப்பிடிகக வேண்டும். அந்தவகையில் சிங்களப் பேரினவாத அரசின் தவறான நடவடிக்கைகளை மட்டுமல்லாது எம்முள்ளே உள்ள தவறான நடவடிக்கைகளையும் மக்கள் முன் வைக்க வேண்டும். அதுவே பத்திரிகையின் நேர்மையும் தர்மமுமாகும்.

www.tamilarangam.net

இந்தவகையில் தற்போது தொடங்கப்பட்ட போர் விடுதலைப் புலிகளால் என்பதை சுவடுகளால் ஏன் வெளிக்கொணர முடியவில்லை? பயமா? இல்லை சார்புத் தன்மையா? உண்மையில் சிங்களப் பேரினவாத அரசு தமிழர்கள் மீதான தாக்குதல் நடவடிக்கைகளுக்கு முஸ்தீபு இட்டு அதற்கென சந்தர்ப்பங்களையும் எதிர்பார்த்திருந்தது. உரிமை தருவதாகவும், தன்னை சமாதானப் பிரியன் என்றும் ஒற்றுமைவாதி என்றும் மக்கள் முன் அடையாளப்படுத்தும் தர்மவான் பிரேமதாச கடந்தகால தமிழர்கள் மீதான சிங்கள அரசின் கொடுமைகளால் சிவந்துபோன உலகின் கண்களுக்கு இதேபோல்தான் கூறிக்கூறி அவர்கள் கண்களுக்கு மருந்துவிட்டுக் கொண்டிருந்தான். பிரேமதாசாவின் இத்தகைய நடவடிக்கைகளை அரசியல்ரீதியாகப் புரிந்துகொண்டு அரசியல்ரீதியாக அம்பலப்படுத்தாது, அவர் சமாதானப் பிரியர்தான், தர்மத்தைக் காப்பவர்தான் என மெய்ப்பிப்பதில் விடுதலைப் புலிகளும் ஈரோஸ் அமைப்பும் தத்தம் அறிக்கைகள் வாயிலாகத் துணைபோயின. ஆனால் இவர்கள் பிரேமதாசாவின் சமாதான முயற்சியின் பின்னணியை உலகஅரங்கில் அம்பலப்படுத்தும் வேலைகளைச் செய்யவில்லை. இதனால் இன்று தமிழ்மக்களுக்கு நேர்ந்துள்ள துன்பகரமான சூழலைத் தடுத்து நிறுத்த உலகமக்களின் ஆதரவைத் திரட்டமுடியாத இக்கட்டான நிலை எழுந்துள்ளது. வெறுமனே புலிகள் தமது ஆயுதபலத்தை மட்டும் நம்பி இப்போரைத் தொடங்கியுள்ளனர். விடுதலைப் புலிகளது வேண்டுகோளுக்கு இணங்கி நீண்டகால நோக்கின் பார்ப்பில் ஆபத்தான மாகாணசபைக் கலைப்பு மசோதாவை 'சமாதானப் பிரியர், நம்பிக்கைக்கு உரியவர்' பிரேமதாசாவின் அரசு மாகாணசபைக் கலைப்பு மசோதாவை பாராளுமன்றத்துக்கு கொண்டுவருவதற்கு முதல்நாள் விடுதலைப் புலிகள் தமது முதல்நாள்ப் போரைத் தொடங்கியது ஏன் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுகிறது. உண்மையில் விடுதலைப் புலிகள் அரசியற் தீர்வை விரும்பவில்லையா? அல்லது அரசியற் தீர்வுகளில தமது செல்வாக்கை நிலைநிறுத்த முடியாது என்ற கணிப்பீடா? அல்லது, அரசியற் தீர்வுவரின் ஜனநாயகப் பாதையில் மாற்று அமைப்புகள், அரசியற் கட்சிகள், நபர்களை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இயங்க அனுமதிக்க வேண்டிவரும் என்ற பயமா? போன்ற கேள்விகள் இன்று தமிழர்கள் மனதில் எழுந்துள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகளால் அரசின் உரிமைதருவது தொடர்பான இழுத்தடிப்புகளை உலகஅரங்கின் கண்களுக்கு ஏன் அம்பலப்படுத்த முடியாது போய்விட்டது? இவர்களது தவறான ஆனால் இராஜதந்திர ரீதியானது என்று குறிப்பிடப்படும் நடவடிக்கைகளால் இன்று சிங்கள இராணுவம் தமிழர்களை குண்டுவீசிக் கொல்கிறது. இதற்கு எதிராக உலகின் கண்களும் கட்டிப்போடப் பட்டுவிட்டது. தமிழர்களது தலைமைகள் என்று கூறிக்கொள்பவர்களது தவறான இராஜதந்திரங்களால் அழிவது அப்பாவித் தமிழ்மக்களே. இனியாயினும் தமிழ்த் தலைமைகளது தவறான நடவடிக்கைகளையும் சுவடுகள் வாசகர்கள்முன் கொண்டுவர வேண்டும்.

அன்புடன்
செ.ஜெயா
(லிங்கனேஸ்)

# குடும்பக் கட்டுப்பாடு - வறுமை காரணம்?!

இலங்கை அகதிகள்...



தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள இலங்கை அகதிகளுக்குப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை அரசு அளிக்கும் உதவித் தொகை பிரித்துக் கொடுக்கப்படுகிறது. அடிப்படை வசதிகளை அரசு செய்து கொடுத்தாலும், இதரச் செலவினங்களையும் அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. வீடு,

சமயம் இலங்கை அரசு குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும்படி தமிழர்களை வற்புறுத்துமாம்! நெல்லை மாவட்டம் ராதாபுரம்

'நம்முடைய தமிழ்த் தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்தால் தமிழ் இனம் பெருகாது' என விடுதலைப் புலிகள் அஞ்சுகின்றனராம். அதே

பரமேஸ்வரி - (வவுனியா):

"எனக்கு ரெண்டு குழந்தைகள்... இலங்கையில் சிங்களர் மட்டும்தான் குடும்பக்கட்டுப்பாடு பண்ணலாம். இங்குள்ள நர்சுமார்கள் கேட்டவுடன் நான் சரி என்று சொல்லிவிட்டேன். அவர்கள் தந்த பணத்தில் டானிக், இங்கிலீஷ் காய்கறிகள் வாங்கி இப்போது செலவழித்து வருகிறேன்."

அகதிகள் முகாமில் சிகிச்சை அளித்துவரும் கள்ளிக்குளம் ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவர் சங்கரனைச் சந்தித்து இதுபற்றி கேட்ட போது...

"நாங்கள் அகதிகளுக்கு அடிப்படை மருத்துவ உதவிகள் செய்து வருகிறோம். எங்கள் முகாமில் பேபி சகுந்தலா என்ற பெண்ணுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தபோது எங்கள் ஊழியர்கள் இரவு முழுவதும் கண்விழித்துக் கவனித்தனர். குடும்பநல அறுவை சிகிச்சை மற்றும் குடும்பநலப் பணிகளைப் பற்றி அகதிகள் உட்பட பொதுமக்கள் அனைவரிடமும் பிரசாரம் செய்வது எங்கள் பணியாளர்களின் கடமை...



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசல், சொத்து ஆகியவற்றை இழந்து நிற்கும் இந்த அகதிகள் சிலரிடம் மட்டும் இலங்கைப் பணம் கொஞ்சம் உள்ளது. ஆனால், அதையும் இவர்களால் உடனே மாற்ற முடியவில்லை. சில அகதிகள் தங்களிடமுள்ள வெளிநாட்டுப் பொருட்களை முகாம் அமைந்துள்ள இடங்களில் உள்ள வெளியாட்களிடம் குறைந்த விலைக்கு விற்றுத் தங்களது மற்ற செலவுகளை ஓரளவுக்குச் சமாளிக்கிறார்கள். நெல்லை மாவட்டம் வள்ளியூரில் அமைந்திருக்கும் அகதிகள் முகாமில் உள்ள சில அகதிகள் தங்கள் பெட்டிகளில் உள்ள பித்தளைப் பூட்டுக்களை விலைக்கு விற்கிறார்கள்.

இதைப் பார்த்த ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்கள் சிலர், அகதிகளின் வறுமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அவர்களிடம் நைசாகப் பேசி குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும்படி சொல்கிறார்கள்.

குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டால் 300 ரூபாய் கிடைக்கும் என்பதால் அகதிகளும் சம்மதிக்கிறார்கள். உடனே இதற்கான ஏற்பாடுகளைச் செய்து, மாதத்துக்கு இவ்வளவு ஆட்களைக் குடும்பக் கட்டுப்பாடு செய்யக் கொண்டு வர வேண்டும் என்ற தங்களது இலக்கை இவர்கள் மூலம் ஆரம்ப சுகாதார ஊழியர்கள் சாதித்து வருகின்றனர். பொதுவாக இலங்கையில், தமிழர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதை விடுதலைப்புலிகள் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்களாம்.

தாலுகாவில் உள்ள சமூகரெங்கபுரம் அகதிகள் முகாமில் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்ட சில பெண்களை நாம் சந்தித்தபோது...

*மலர் (திரிகோணமலை):*

"இந்த மாதம் பத்தாம் தேதி காலை ஒன்பது மணிக்கு ஜீப்பில் ஏற்றி ஒரு ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போனாங்க. எங்களை மாதிரி அந்த டொக்டர் (டாக்டர்) கிட்ட நிறையப் பேர் வந்திருந்தாங்க. முந்நூறு ரூபாயும் ஒரு விவா பாட்டிலும், பகல் சாப்பாடும் கொடுத்தாங்க. எங்களுக்கு ஆப்ரேஷன் பண்ணி அஞ்சு மணிக்குத் திரும்பவும் இங்கேயே கொண்டுவந்து விட்டாங்க..."

*மகேஸ்வரி - (மன்னார்):*

"இங்கே இருக்கிற நர்சுகள் என்னைக் குடும்பக் கட்டுப்பாடு செஞ்சுக்கிட சொன்னாங்க... நான் சென்ற மாதம் இலங்கையில் குடும்பக் கட்டுப்பாடு செய்ய நினைச்ச போது, அப்போ என்னுடைய உடம்பைப் பரிசோதிச்சு, ஆபரேஷன் செய்ய ரத்தம் போதாதுனு சொல்லி, திருப்பி அனுப்பிட்டாங்க. இப்போது எனக்கு ரெண்டு குழந்தைகள் இருக்கு. அவர்கள் பிறக்கும் போதே ரத்தம் செலுத்தித்தான் பிறந்தாங்க. அடிக்கடி உடம்பு வருத்தம் வருது. ஆபரேஷன் செய்து தந்த முந்நூறு ரூபாயை வைத்துக் குழந்தைகளுக்குப் பால்பவுடர் மற்றும் அன்றாடத் தேவைகளுக்காக நான் இப்போது செலவழித்து வருகிறேன்."

அகதிகள் தானாக வரும்போது, அதற்குத் தக்க வழிகாட்டுவது எங்கள் கடமையல்லவா? இலங்கையில் ஏதாவது ஒரு காரணத்தால் மறுக்கப்பட்டிருக்கலாம். அவர்களுக்குத் தற்போது நல்ல ஓய்வு, இலவச உணவு, உறைவிடம், மருந்துகள் ஆகியவை கிடைத்து வருவதால் அவர்களுக்கு குடும்பநல கிசிச்சை செய்து கொள்ள ஆர்வம் ஏற்பட்டிருக்கலாம். எனவே வறுமை மட்டும்தான் அவர்களை அறுவை சிகிச்சை செய்யத் தூண்டியது என்பதை என்னால் ஒப்புக்கொள்ள இயலாது..." என்றார்.

நாம் முகாமில் பலரிடமும் பேசியபோது, அவர்களின் வறுமையே குடும்பக் கட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று தெரிய வருகிறது. உட்காரக்கூடப் போதுமான இடவசதி இல்லாத சூழ்நிலையில், அவசர அவசரமாக ஆபரேஷன் செய்து அகதிகள் முகாம்களில் சுகாதாரம் இன்றி படுக்க வைத்திருப்பதை நாம் நேரில் பார்த்தபோது நெஞ்சு கனத்தது. பல இன்னல்களைச் சந்தித்துவிட்டு தமிழகத்துக்கு வந்திருக்கும் அகதிகள் மிகுந்த சோர்வுடன், உடல் நலமின்றியும் இருக்கும் இந்த வேளையில் எவ்வித முன்பரிசோதனையும் இல்லாமல் குடும்பக் கட்டுப்பாடு செய்வது வேதனைக்குரிய விஷயமாகும். குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்ட பெண்களுக்கு வயது 20-லிருந்து 25 வரைதான் இருக்கும்!

**— மை. அறிவரசு கூஞ்ஞா**

நன்றி: ஜூனியர் விகடன்

www.tamilarangam.net




# ஒரு பக்கம்

கண்டியரசைக் கைப்பற்றும் நோக்கில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி ஸ்ரீவிக்ரம இராஜசிங்கனை அரசனாக்கிய பிலிமை தனது மகளையும் மன்னனுக்கு மணம்முடித்துக் கொடுத்தான். எனினும் அரசன் அவளை அந்தப்புரத்துப் பெண்ணாக மாத்திரம் வைத்திருந்து வேறோர் பெண்ணையே பட்டத்து இராணியாக்கினான். இதுமட்டுமன்றி சகல அரசியல் விடயங்களையும் மன்னன் தனது நாயக்க வம்சத்தினருடனேயே கலந்து ஆலோசனை செய்தான்.

கண்டியரசனோடு யுத்தம் செய்யக்கூடாது என்று ஆங்கிலேயருக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதும் 1803ஆம் ஆண்டு வைகாசிமாதம் தளபதி மக்டோவல் 3000 படைவீரர்களுடனும் திருகோணமலையில் இருந்து கேர்ணல் பாபட் தலைமையிலான இன்னுமோர் படைப்பிரவும் பிலிமையின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆலோசனைப்படி கண்டிமீது படையெடுத்து கண்டியைச் சென்றடைந்தனர். ஆங்கிலேயர்கள் கண்டியை அடைந்த போது நகரம் வெறிச்சோடிப் போய்க்கிடந்தது. ஆங்கிலேயரின் போர்த் தந்திர முறையான 'ஸ்கொச் ஏத் பொலிசி' (நெருப்பிட்டுப் பின்வாங்கும் முறை) கண்டியரசனுக்கும் தெரிந்ததையிட்டு ஆங்கிலேயர்கள் ஆச்சரியம் அடைந்தனர். ஆங்கிலேயரின் படையெடுப்பை அறிந்த மன்னன் விக்கிரம இராஜசிங்கன் ஹங்குறாங்கட்டை எனும் இடத்தில் மறைந்திருந்தான். ஆங்கிலேயப் படைகள் கண்டியை வந்தடைந்ததும் மறைந்திருந்த கண்டியப் படைகள் பலமான எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இச்சமயத்தில் ஆங்கிலேயர் யாழ்ப்பாணக் கோட்டையில் வைத்துப் பாதுகாத்து வந்த முத்துச்சாமியை ஒருதலைப் பட்சமாக கண்டிமன்னனாக அறிவித்தனர். இதனால் பிலிமைக்கும் ஆங்கிலேயருக்கும் முரண்பாடு ஏற்படலாயிற்று. பிலிமை மன்னனாக்குவதாயின் பினவரும் மூன்று நிபந்தனைகளை ஆங்கிலேயர்கள் விதித்தனர்.

1. கண்டியரசன் ஸ்ரீ விக்ரம இராஜசிங்கனை தம்மிடம் கையளித்தல் வேண்டும்.

2. முத்துச்சாமியை வன்னிப் பிராந்திய மன்னனாக்க வேண்டும்.

3. கண்டியின் ஏழுகோறளைப் பகுதியையும், மாத்தளை மக்டோவல் கோட்டையையும், கொழும்பு-திருகோணமலை பாதையமைக்க போதிய பணமும், முத்துச்சாமிக்கு வருடாந்தம் ஒருதொகைப் பணமும் அளிக்க வேண்டும்

எனவும் குறிப்பிட்டனர்.

எனினும் இந்நிபந்தனைகளை நிறைவேற்றக்கூடிய நிலையில் கண்டி நிலைமை இருக்கவில்லை. கண்டியப் படைகள் ஆங்கிலேயப் படைகளை வெற்றிகரமாக முறியடித்து வந்தனர். போதிய உணவு, மருத்துவ வசதிகள் இன்மையால் ஆங்கிலேயப் படையினர் பலர் இறந்தனர். கண்டியப் படைகளது தாக்குதல்களால் நிலைகுலைந்த ஆங்கிலேயப் படைகளது மூச்சுக்குறைய ஆரம்பித்தது. ஆங்கிலேயர் பக்கத்தில் கூலிக்காகப் போர்புரிந்த மலாயர் படைப்பிரிவு கண்டியப் படைகள் பக்கம் சாய்ந்தன. இதனால் நிலமையை எதிர்கொள்ள முடியாது தவித்த ஆங்கிலேயப் படைகள் பின்வாங்க முடியாது தவித்தனர். பிலிமை கூறியதற்கு முற்றிலும் புறம்பாக மன்னன் விக்ரம இராஜசிங்கனின் படையினது வீரத்தைக் கண்டு வியந்தனர். ஈற்றில் வேறொன்றும் செய்யவியலாது ஒருவீரனின் தலைப்பாகையை எடுத்து வெள்ளைக் கொடியாகக் காட்டி சரணடைந்தனர். சரணடைந்ததும் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டது.

இதன்படி ஆங்கிலேயப் படைத்தளபதி மேஜர் டேவியும் ஏனைய படைவீரர்களும் திருகோணமலை போகவும் அவர்கள் தம்முடன் வெறும் துவக்குகளை மட்டுமே எடுத்துச் செல்ல முடியும் என்றும் காயப்பட்டோரை வைத்தியசாலையில் வைத்துப் பராமரிக்கவும் ஆங்கிலேயரால் மன்னனாகப் பிரகடனப் படுத்தப்பட்ட முத்துசாமியை ஆங்கிலேயர் அழைத்துச் செல்லவும் மகாவலி கங்கையைக் கடக்க ஓடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்துதவவும் தீர்மானிக்கப் பட்டது.

ஆனால் இவ்வொப்பந்தம் கடைப்பிடிக்கப் படவில்லை. மகாவலி கங்கையை அடைந்த படையினர் அங்கு ஓடங்கள் இல்லாததைக் கண்டு திகைத்தனர். வைத்தியசாலையில் இருந்த அத்தனை படைவீரர்களும் கண்டியப் படைகளால் கொலைசெய்யப் பட்டனர். ஆற்றங்கரை வந்த வீரர்கள்

www.tamilarangam.net

அனைவரும் கண்டியப் படைகளால் கைதுசெய்யப்பட்டனர். மேஜர் டேவி முத்துசாமியை கண்டியப் பகைளிடம் கையளித்தான். கைதுசெய்யப்பட்டுச் செல்கையில் ஆங்கிலேயப் படைவீரர்களை மல்லர்கள் அடித்துக் கொன்றனர்.

அடிபட்டு விழுந்த பான்ஸீ என்ற வீரன் இறந்தவன்போல் நடித்து இரவானதும் காடுகளூடு சென்று ஆற்றைக் கடந்து மாத்தளை மக்டோவல் கோட்டையை அடைந்தான். இவ்வாறாக கண்டிப் படையெடுப்பில் ஆங்கிலேயப் படைகளில் ஒருவனே உயிருடன் திரும்பினான். மேஜர் டேவி சிறையிலிடப்பட்டு அங்கேயே இறந்தான். ஆங்கிலேயப் படைகள் நிர்மூலமாக்கப்பட்ட தினம் 26.05.1803 ஆகும். இப்படையெடுப்பால் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட படைச்செலவு, உயிரழிவு என்பன அளவிட முடியாததாகும் என ஆள்பதி "நோத்" அவர்கள் அழாத குறையாக எழுதிய குறிப்பேடுகள் இன்றும் பிரித்தானிய நூதனசாலையில் காணலாம். இப்படையெடுப்பால் ஏற்பட்ட தோல்வியை ஈடுசெய்ய முடியாது தவித்த ஆங்கிலேயர் 1815ஆம் ஆண்டுவரை கண்டிமீது மீண்டும் படையெடுக்கும் எண்ணத்தை மேற்கொள்ளவில்லை.

- விதுரன் -

---

விருந்தொன்றில் சந்தித்த இரு நண்பர்கள் பேசிக் கொண்டிருந்த போது-

முதலாமவன்: (மெதுவாக) பக்கத்து மேசையில இருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பெண்ணைப் பார்க்கச் சகிக்கேலை. அவளின் மூக்கு குருவி மூக்குமாதிரி இருக்கு.

இரண்டாமவன்: அவள் என் காதலி

முதலாமவன்: அவளின் கண்கள் மிகவும் கவர்ச்சியாகவும் அழகாகவும் உள்ளது.

- சஞ்சயன் -



வைத்தியர்: மனதைத் திடப்படுத்திக் கொள்ளவும். உமக்கு இரு செய்திகள் உண்டு. ஒன்று துக்கமானது, இன்னொன்று அதைவிடத் துக்கமானது.

நோயாளி: கவலைப்பட வேண்டாம் தயங்காமல் கூறுங்கள்!

வைத்தியர்: நீங்கள் இன்னும் 24மணி நேரந்தான் உயிர்வாழப் போகிறீர்கள்.

நோயாளி: அப்படியா? இதைவிடத் துக்கமான சேதியான மற்றது என்ன?

வைத்தியர்: உம்முடன் தொடர்பு கொள்ளக் கடந்த 23மணிநேரத்தையும் செலவிட்டு விட்டேன்.

நோயாளி: !!!

●

மிருகக் காட்சிச் சாலைக்கு தகப்பனும் மகனும் சென்றனர். அங்கிருந்த ஒரு கொரில்லாவைச் சுட்டிக்காட்டி மகன் கேள்வி கேட்டான்.

தந்தை: அது பயங்கரமான கொரில்லா, மனிதனை ஒரே அடியில் சாகடித்துவிடும். கடந்த வாரங்கூட கொரில்லாவின் தாக்குதலுக்கு ஒருவன் பலியானான்.

மகன்: உம்... (யோசித்தபடியே இருந்தான்)

தந்தை: என்ன வேறு ஏதாவது கேட்கப் போகிறாயா?

மகன்: ஆம், சிலவேளை இந்த கொரில்லா கூட்டை உடைத்துவந்து உங்களைக் கொன்றுவிட்டால் நான் எந்த பஸ் எடுத்து வீட்டுக்குப் போக வேண்டும்?

தந்தை: !!!

- சஞ்சயன் -

www.tamilarangam.net



# இலங்கை அரசு போட்ட திட்டம்

'பிரேமே' என்ற பெயரிடப்பட்ட வடக்கு, கிழக்கு மீதான தாக்குதல் திட்டம் பின்வருமாறு இருந்ததாக அரசுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து கடந்த சில மாதங்களுக்கு முன் செய்தி வெளியாகியது. எனினும் இதுபற்றிய முழுவிபரங்கள் பத்திரிகைகள் எவற்றுக்கும் கிட்டவில்லை.

அடிப்படையில் இத்திட்டம் நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது எனக் கூறப்படுகிறது.

முதல் பகுதி:

1. தற்போதுள்ள பொலனறுவ, அனுராதபுர, பதுளை இராணுவ முகாம்களைப் பலப்படுத்துதல். அதேவேளை அம்பாறை, திருமலை, வவுனியா முகாம்களில் அதிக படையினரைச் சேர்த்தல்.

2. மின்னேரியா விமானப் படைத் தளத்தைப் பலப்படுத்துதல்

3. திருமலை கடற்படைத் தளத்தைப் பலமாக்குதல்.

4. இந்தியப் படைகளை விலக்கவும், ஏனைய தமிழ்க் குழுக்களைச் செயலிழக்கச் செய்யவும் புலிகளுக்கு ஆதரவளித்தல்.

இரண்டாவது பகுதி:

1. புலிகளதும் தெற்குத் தீவிரவாதிகளதும் தாக்குதல் மட்டங்களைச் சமப்படுத்துதல்.

2. புலிகளைச் சுதந்திரமாக நடமாடாது தடுக்க கிழக்கின் முக்கிய இடங்களில் நிலைகொள்ளல்.

மூன்றாம் பகுதி:

1. பொலனறுவ, திருமலை, அம்பாறை, பதுளையில் இருந்து மின்னேரியா விமானப்படை உதவியுடன் படைகளை நகர்த்தி கிழக்கிலிருந்து புலிகளைத் துரத்தி திருமலையில் முழு இராணுவக் கட்டுப்பாட்டை நிறுவுதல்.

2. அனுராதபுரப் படையினர் மூலம் வவுனியா, மன்னார், கொக்கிளாய்ப் பகுதிகளைக் கைப்பற்றி பாதுகாப்புக் கோடொன்றை உருவாக்கல்.

நான்காம் பகுதி:

1. பாதுகாப்புக் கோட்டுக்கு மேலேயுள்ள வடக்குப் பகுதியை புலிகளது கட்டுப்பாட்டுள் இருக்க விடுவது.

2. மாகாணசபை நிர்வாகத்தை அம்பாறையைத் தலைநகராகக் கொண்டு கிழக்கில் நிறுவுதல்.

3. திருமலையை சுதந்திரமான துறைமுகமாகவும், பொழுதுபோக்கு இடமாகவும் மாற்றுதல்.

---

## மக்கள் கோடி

உலகின் மக்கள் தொகை எவ்வளவு என்று கேட்டால் சரியான விடைசொல்லத் திண்டாடுவீர்கள். நிமிடத்துக்கு நிமிடம், மணிக்குமணி இத்தொகை கட்டுக்கு அடங்காது அதிகரித்து வருவதே இதற்கான காரணமாகும். இதனால் பல்வேறு பிரச்சனைகளை உலகம் எதிர்நோக்குகிறது. 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் (கடந்த யூன்மாதம் மட்டில்) உலக சனத்தொகை 530கோடியாக இருந்ததாகவும், இது 2000ஆம் ஆண்டளவில் 630கோடியாகவும் 2025ஆம் ஆண்டளவில் 850கோடியாகவும் அதிகரிக்கலாம் என ஐ.நா. மதிப்பீடு தெரிவிக்கிறது. எங்கே போய் முடியும் இந்த சனத்தொகை அதிகரிப்பு?

– பிள்ளைமகன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* நோர்வேயில் தமிழ்மக்களின் மிகப்பெரும் பொழுதுபோக்கு எதுவென்று கேட்டால் யாரும் மிக இலகுவாக விடை கூறுவார்கள். வீடியோவில் வரும் தமிழ்ப் படங்கள்தான் நோர்வேயில், முக்கியமாக நகர்ப்புறத் தமிழர்களின் பொழுதுபோக்கு. இதற்கான கட்டணம் 10குரோணர்களாக இருந்து தற்போது 15குரோணர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலும் சில வருடங்களுக்குமுன் 10ரூபாவாக இருந்த கட்டணம் 12ரூபாவாக மாற்றப்பட்டது. அதற்கு வேறு காரணம்- தெரியாதவர்கள் ஏனைய தமிழர்களைக் கேட்கலாம்

இந்தப் பொழுதுபோக்கு மிகவும் மோசமானது என்பது எல்லோராலும் ஏற்கப்படக்கூடிய விஷயம். தமிழில் மிகமோசமான படங்களே அதிகம் வெளிவருகின்றது. இவற்றில் வாழ்க்கை பற்றியோ , கலைபற்றியோ மனிதன் பெற்றுக்கொள்ள ஒன்றுமில்லை. பதிலாக வாழ்க்கை பற்றிய மோசமான கருத்துக்களே அதிகமாகவுள்ளன. இவை ஒருபுறமிருக்க தொடர்ந்து தொலைக்காட்சியில் படங்களைப் பார்ப்போருக்கு கண்கள் பழுதடைய வாய்ப்புகள் அதிகம். அதிலும் இங்கு தமிழில் படங்களைப் பார்க்கும் பலருக்கு இந்தப் பாதிப்பு நிச்சயம் ஏற்படும். ஏனென்றால் இங்கு விநியோகிக்கப்படும்

அவருடன் நான் பேசியபோது 'தமிழர்கள்' பற்றிய அவரது அபிப்பிராயம் என்ன என்று கேட்டேன். கணிசமான நேரம் புன்முறுவலோடு இருந்த அவர், பிறகு சொன்னார் "தமிழர்கள் நன்கு வேலை செய்வார்கள் (அதற்கான காரணம் எனக்குத் தெரியும்). தமிழர்கள் ஒரு 'மூடுண்ட சமுதாயம்' போல. தமக்கு அருகில் இருக்கும் இன்னொரு தமிழர் தவறு செய்தாலும் அதுபற்றி நோர்வேஜியர்களுக்குச் சொல்ல மாட்டார்கள் வெளிப்படையாகப் பழகினாலும் எதிர்மறையான விசயங்களை வெளியே சொல்ல மாட்டார்கள். (காட்டிக் கொடுக்கும் பரம்பரை என்று எமக்குள்ளேயே ஒரு பேச்சு உண்டு). விருந்தோம்பலில் ஏனைய சமூகங்களை விட ஒருபடி அதிகம் என்றே கூறலாம் (மனசுக்குள் நடக்குந் திட்டுகளைப் பற்றி ஆருக்குத் தெரியும்?). சண்டை, சச்சரவுகள் என்று போகமாட்டார்கள் (உடற்பலத்தில் இங்குள்ள வெளிநாட்டுச் சமூகங்கள் யாவற்றிலும் நாங்கள் குறைந்தவர்கள் என்பதுதான் அதற்குக் காரணம் போலும்). பழக மிகவும் இனிமையானவர்கள் (நாங்கள் நினைப்பவை எல்லாவற்றையும் வெளியே சொல்லாமல் இருப்பது அவருக்குத் தெரியாது) தமிழர்கள் மிக வேகமாக செய்தி காவுவார்கள், ஒரு தமிழர் ஒரு செய்தியை அறிந்தால் ஐந்து நிமிடத்தில்

புலிகள் இலங்கை அரசுடன் என்கிறார்கள்
மற்றக் குழுக்கள்
இந்திய அரசுடன் என்று சொல்கிறார்கள்
இரண்டு அரசும்
'பாசிச' அரசுகள் என்று
வேறு கொஞ்சப் பேர்கள் சொல்கிறார்கள்.
நாங்கள் யாருடன் நிற்பது?

துப்பாக்கியால் பல் விளக்குவது எப்படி?
துப்பாக்கியால் துணி துவைப்பது எப்படி?
துப்பாக்கியால் சாப்பிடுவது எப்படி? என்று
ஏன் ஒருவரும் புத்தகம் எழுதவில்லை?

"நாங்கள் ஏன் கைக்குண்டு வீசினோம்?"
என்று 'அவர்கள்'
அறிக்கை விடலாம் என்றால்
என்னுடைய கண்முன்பாக
என்னுடைய வெளிநாட்டுக்
கோவணத்தை
கொடியிலிருந்து எடுத்துச் சென்ற
சமாதானப் படைவீரனைப் பற்றி
நான் ஏன் அறிக்கை விடமுடியாது.

எப்படி இருக்கிறது கவிதை? கவிதையின் ஒரு சிறு பகுதிதான் இது. கவிதையின் தலைப்பும் வித்தியாசமானது. – 'அறிவுஜீவியாக வளரத் துடிக்கும் ஒரு அப்பாவிப் பொதுமகனின் <u>கேள்விகள்</u>' (எழுத்து வடிவில் மூன்று அடிக்

www.tamilarangam.net


பல வீடியோப் பிரதிகள் 'ஒறிஜினல்கள்' அல்ல. இவற்றில் சிலநேரம் கறுப்பு-வெள்ளை, சிலநேரம் கலர், சிலநேரம் நடுக்கம் (நோர்வேக் குளிரில் தமிழ்ப்பட நடிகர்கள் நடுங்குகிறார்களோ?), தெளிவின்மை, ஒளிக்குறைவு எனப் பலகுறைபாடுகள். இவ்வாறான பிரதிகளை விநியோகிப்பது சட்ட விரோதமானது (பலர் வீடியோ விநியோகஞ் செய்வது சட்ட விரோதமாகத்தான் என என் நண்பர் கூறுகிறார்). இதை எப்படித் தடுப்பது என்று தெரியவில்லை. தமது பைகளை நிரப்பிக் கொள்பவர்கள் எங்களுடைய சந்ததியின் பார்வை பற்றியும் கவலைப்பட்டால் நல்லது.

* இங்கு வாழும் தமிழர்கள் நோர்வேஜியர்களைப் பற்றிச் சிலவகை அபிப்பிராயங்களை வைத்திருக்கிறார்கள் (அவர்கள் நன்கு குடிப்பார்கள், சாப்பிடுவார்கள் என்றமாதிரி அபிப்பிராயங்கள்தான் அதிகம்). ஆனால் பலர் நோர்வேஜியர்கள் எங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதுபற்றி அறிய முயற்சிப்பதில்லை. தமிழர்கள் பலருடன் நெருங்கிப் பழகியவரும், உயர்பதவியொன்று வகிப்பவருமான நோர்வேஜியர் ஒருவரை அண்மையில் சந்திக்க நேர்ந்தது. பலவிடயங்கள பற்றி ஒஸ்லோவில் உள்ள அனைவருக்கும் அந்த விசயம் தெரியவந்துவிடும் (தமிழ் மக்களின் விடுப்பே விடுப்பு, இதில் தொலைபேசி வசதி வேறு)" மொத்தத்தில் எங்களைப் பற்றி (பல காரணங்களுக்காக) மோசமான அபிப்பிராயங்கள் இருந்தாலும் நல்ல அபிப்பிராயங்களும் உள்ளன. நாங்கள் எந்தவகை அபிப்பிராயங்களைக் காப்பாற்றப் போகிறோம்.

* எனக்குக் கவிதை தெரியாது என்று சிலபேர் சொல்கிறார்கள். கவிதையை வாசிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் சில தகுதிகள் வேண்டும் என்று சொல்லும் இவர்களைப் பற்றி நான் அதிகம் கவலைப்படப் போவதில்லை. சில சமயம் எனக்குப் பிடிக்கின்றன சில கவிதை வரிகள் (இந்த வரியே கவிதை மாதிரி இருக்கிறதா, நன்றி) உங்களுக்கு வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்திராது என்று நான் நினைக்கும் சில கவிதை வரிகளைத் தருகிறேன். படித்துப் பாருங்கள், (பிடித்தால் நாலு பேருக்குச் சொல்லுங்கள், பிடிக்காவிட்டால் எனக்கும் உங்களுக்கும் இடையில் மட்டும் இருக்கட்டும்) கவிதை சேரனுடையது. 'காலம்' இதழில் வெளிவந்தது.

குறிப்புகளுடன்) - இப்படி நீளமான தலைப்பில் நான் கவிதை ஒன்றைக் கண்டது இதுவே முதல் தரம்.

* கள்ளிலும் போதை இருக்கிறது, போதை மருந்துகளிலும் போதை இருக்கிறது. விலை வித்தியாசம், கிடைக்கும் 'சுகமும்' வித்தியாசம் (என்கிறார்கள்). அடிப்படையில் இரண்டினதும் தன்மை வேறுபட்டதாகச் சொல்ல முடியாது. எங்கள் நாட்டில் (அதுதான் இலங்கையில்) கள் வடிப்பவர்களைக் கள் குடிப்பவர்கள் 'சாதி' குறைவாக மதிப்பதுதான் வழக்கம். ஆனால் கனடாவில் போதைப் பொருள் கடத்தும் தமிழர்கள் தங்களை 'உயர்ந்தவர்கள்' என்று நினைத்துக் கொண்டிருப்பதாக அறிந்தேன். நல்லவேளை, நோர்வேயில் இந்த 'உயர்ந்த' தமிழர்கள் இல்லை (என்று நினைக்கிறேன்)



www.tamilarangam.net

# எல்சல்வடோர்

_வின்டன் வாசன்



எல்சல்வடோர் நாட்டு இராணுவத்தினரின் எண்ணிக்கை ஐம்பதினாயிரம் ஆகும். இதில் பெரும்பான்மையானோர் 19வயதுக்கு உட்பட்டோர். வலதுசாரி அரசாங்கத்துக்கும் இடதுசாரிப் போராளிகளுக்கும் இடையே போர் வெகு உக்கிரமமாகத் தொடர்கிறது. மனித உரிமைகளை நிலைநாட்டவும், காணி பங்கீடு போன்ற பொருளாதார மாற்றங்களை வேண்டியும் 'பரபுண்டோ மார்டி' விடுதலை முன்னணியினர் கெரில்லாப் போராட்டம் நடாத்தி வருகின்றனர். இப்போரில் 70,000 இற்கும் அதிகமான மக்கள் இறந்துள்ளனர்.

இங்கு 18இற்கும் 30இற்கும் இடைப்பட்ட திருமணமாகாத ஆண்கள் இரண்டு வருடகாலம் கட்டாய இராணுவ சேவை ஆற்ற வேண்டும். கணனி மூலம் அழைப்பு விடும் முறை இந்நாட்டில் இல்லாமையால், இராணுவ சார்ஜெண்டுகள் தமக்குக் கொடுக்கப்பட்ட எண்ணிக்கையை திரட்டுவதற்கு தெருவில் காணும் இளைஞர்களை பலாத்காரமாக வாகனங்களில் ஏற்றிச் செல்கிறார்களாம். இந்நாட்டுச் சட்டப்படி 18வயதுக்கு உட்பட்டவர்களை இராணுவக் கடமைக்கு அழைத்தல் விரோதமான செயலாகும். இவ்வாறு பலவந்தமாக இழுத்துச் செல்லப்படும் இளைஞர்கள் சான்சல்வடோர் நகர்ப்புறக் குப்பங்களில் வாழும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தோராகவோ அன்றேல் கிராமப்புற வறிய விவசாயிகளது பிள்ளைகளாகவோதான் இருக்கிறார்கள்.

அண்மையில் இந்நாடு ஐ.நா.சபையின் பாலகர் உரிமைகள் தொடர்பான பிரகடனங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. இப்பிரகடனங்களுள் ஒன்று பதினைந்து வயதுக்கு உட்பட்ட பாலகர்கள் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்தப் படுதலைத் தடைசெய்கிறது. அப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தும் எல்சல்வடோர் 12வயது நிறையாத பாலகர்களையே பலவந்தமாக இராணுவத்தில் சேர்த்துப் பயிற்சி கொடுத்து AK47 அல்லது M16 போன்ற ஆயுதங்ளையும் வழங்குகிறது.

சல்வடோர் நாட்டு இராணுவம், போராளிக் குழுக்களே வயதுகுறைந்த பாலகர்களை பலவந்தமாகத் திரட்டுவதாகக் குற்றஞ் சாட்டியுள்ளது. இதுபற்றி விடுதலை முன்னணியின் இங்கிலாந்து பேச்சாளர் விக்ரர் அமாயா கருத்துத் தெரிவிக்கையில், தமது முன்னணியினர் தொண்டர்களை மட்டுமே சேர்த்துக் கொள்வதாகவும் மிகவும் அரிய சந்தர்ப்பங்களில் மட்டுமே வயதுகுறைந்தவர்கள் இராணுவத்துடன் மோதுவதாகவும் கூறினார். தனிப்பட்ட மனிதவுரிமை ஸ்தாபனங்களின் அவதானிப்புகளின்படி இதில் ஓரளவு உண்மையுள்ளது. இலட்சியம், கொள்கைகளில் தீவிர நாட்டம் இல்லாவிடின், எவ்வித பலாத்கார முறைகளாலும் போராட்டத்துக்கு ஆட்பலம் சேர்ப்பது வெற்றியைத் தேடித் தராது என்பது அவர்களுக்கு நன்கு தெரிந்த விடயம். பதினைந்து வயதுக்குட்பட்ட கெரில்லா வீரர்கள் தமது நெருங்கிய நண்பர்களோ உறவினர்களோ இராணுவத்தால் கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட பின்பே விடுதலை முன்னணியில் சேர்ந்துள்ளனர். கட்டாய சேவையில் ஈடுபடுத்தப் படுவோருக்கு இராணுவம் கிழமைக்கு 7பவுண்களை ஊதியமாக வழங்குகிறது. நிரந்தர சேவையில் மீண்டும் சேர்பவர்களுக்கு இரண்டுமடங்கு வழங்கப்படுகிறது. அந்நாட்டு ஏழைமக்களைப் பொறுத்தவரை இந்த நிரந்தர ஊதியம் போல வேறெங்கும் உழைக்க முடியாது. அப்படி இருப்பினும் இக்கட்டாய சேவையிலிருந்து பலர் நழுவுவதற்கு வேறு முக்கிய காரணங்கள் உள்ளன.

இராணுவத்தாலும், அதன் உதவியுடன் வலதுசாரிக் கொலைக் குழுக்களாலும் நடாத்தப்படும் அட்டூழியங்களும் மனிதவுரிமை மீறல்களும் உலக மன்னிப்புச் சபையால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அறியக்கூடியதாக உள்ளது. கைதுசெய்யப் பட்டோரை சித்திரவதைக்கு உட்படுத்துவது, அரசியற் கைதிகளை காணாது போகச் செய்வது, கொலை செய்வது போன்ற சட்டவிரோதச் செயல்களை இராணுவம் நேரடியாகவோ அன்றேல் கொலைக் கும்பல்களை உருவாக்கி அதன்முலமோ சீருடையணியாமல் ஓய்வுநேரத்தில் செயற்படுகிறது.

அண்மையில் சல்வடோர் இராணுவத்தில் இருந்து இரகசியமாக வெளியேறிய ஒரு இளைஞனுக்கு டெக்சஸ் மாநில நீதிபதி அரசியல் அடைக்கலம் வழங்கியுள்ளார். பெற்றோரைப் பாதுகாப்பதற்காக அவ்விளைஞனின் பெயர் விபரம் எதுவும் வெளிவிடப் படவில்லை. தான் பலரை சித்திரவதைக்கு உட்படுத்தியதையும் முறைகளையும் தெளிவாக தன் வாக்குமூலத்தில் எடுத்துக் கூறியுள்ளார். அதுதவிர ஏனைய இராணுவத்தினர் வதைப்பதனையும், வேதனையில் துடித்து இறப்பவர்களது உடல்களை எவ்வாறு தடையின்றி அப்புறப்படுத்துவது என்பதனையும் தனது சாட்சியத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். சித்திரவதை செய்வதால் தாம் மேலும் வீரம் பெற்றுள்ளதாக கூறி உற்சாகம் ஊட்டிய இராணுவப் புரட்சியாளர்களைப் பற்றியும் எடுத்துக் கூறினார்.

www.tamilarangam.net

அமெரிக்காவுக்குத் தப்பியோடிய இன்னுமோர் இளைஞன் 28வயது நிரம்பிய சீசர் வியல்மான் ஜோயா மார்ட்டீனஸ். இந்த இளைஞனுக்கு அரசியல் அடைக்கலம் வழங்கப்படவில்லை. ஜோயா மார்ட்டீனஸ் அமெரிக்க காங்கிரஸ் குழுவுக்கு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறிய விடயங்களாவன:

1. அதிசிரேஸ்ர எல்சல்வடோர் இராணுவ அதிகாரிகளால் இயக்கப்பட்ட கொலைக் குழுவில் தான் பணிபுரிந்தமை.

2. அமெரிக்க இராணுவ ஆலோசகர்களுக்கும், தற்போதைய சல்வடோர் ஜனாதிபதி கிறிஸ்டியானிக்கும் தெரிந்தே இக்கொலைக் குழுக்கள் இயக்கப்படுகின்றன என்பது.

3. கடந்த வருடம் கார்த்திகை மாதம் அமெரிக்க ஜேசுட் போதனையாளர் அறுவரும் அவர்களது பணியாட்கள் இருவரும் எல்சல்வடோரில் கொலைக் குழுக்களால் கொலை செய்யப்பட்டனர். இக்கொலைகள் அமெரிக்க இராணுவத்தால் பயிற்றுவிக்கப்பட்ட தன்னுடைய பிரிவைச்சேர்ந்த இராணுவத்தால் செய்யப்பட்டமை.

கடந்த பத்து வருடங்களில் எல்சல்வடோர் 10கோடி அமெரிக்க டொலர்களை அமெரிக்காவிடம் இருந்து இராணுவ உதவியாகப் பெற்றுள்ளது. கொலைக் குழுக்களில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட சல்வடோர் இராணுவ அதிகாரிகள், அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கும் அத்தனை சட்டவிரோத, மனிதவுரிமை மீறல்களையும் அறிந்திருக்கும் அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் ஆகியோரது பெயர் விபரங்களை தருவதாகக் கூறியும், ஜோயோவை உத்தியோக பூர்வமாக அமெரிக்க அரசாங்கத்தின் எந்தவொரு அங்கமும் தனியாக விசாரணை செய்து உண்மையை அறிய விரும்பவில்லை.

ஜோயோவிடம் இருந்து அறியக்கூடிய விபரங்கள், எல்சல்வடோர் நாட்டின் முக்கிய அரசியல்வாதிகளை உயர்மட்ட இராணுவ அதிகாரிகளை கொலைக் குழுக்களுடன் நேரடியாகச் சம்பந்தப் படுத்துவது மட்டுமன்றி இக்கொலைக் குழுக்களை நடாத்த அமெரிக்கா வழங்கும் மறைமுக ஆதரவையும் அம்பலப்படுத்திவிடும்.

தற்போது நாடு கடத்துவதற்காக அமெரிக்கா ஜோயோவை தடுப்புக் காவலில் வைத்துள்ளது. எல்சல்வடோர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் ஜோயோவால் அம்பலப் படுத்தப்பட்ட கொலைக் குழுக்கள் ஜோயோவைக் கொல்லும் அபாயம் நிலவுகிறது.

இதற்கிடையில் எல்சல்வடோரில் இருக்கும் பல பொது ஸ்தாபனங்கள் கட்டாய சேவைக்கு இராணுவம் ஆட்சேர்ப்பதை எதிர்த்து வருகின்றன. ஒரு ஸ்தாபனம் பெற்றோருக்கு சட்ட ஆலோசனைகளை வழங்கும் திட்டம் ஒன்றை வகுத்து உதவிவருகிறது. உத்தியோக பூர்வமற்ற இரகசிய செய்திகள் மூலம் சிலநேரங்களில் நகரத்தின் சில பகுதிகளை தவிர்க்குமாறு இளைஞர்களை உஷார்ப்படுத்துவது போன்ற உதவிகளையும் செய்து வருகிறது. ஒருமாதத்தில் குறிப்பிட்ட சில நாட்களில் குப்பத்து வீதிகள் வெறிச்சோடி சனசந்தடி இல்லாமல் இருக்கும். பிரதான வீதிகளுக்கு எதிரே வரும் சில வாகனங்கள் தமது முன்விளக்குகளை அணைத்து ஒருவித சமிக்ஞைகளை வெளிப்படுத்தி எதிரே வரும் வாகனங்களை எச்சரிக்கை செய்யும். இந்த எச்சரிக்கை கிடைத்த மறுநிமிடம் எல்லா இளைஞர்களும், எதிரே ஆள்பிடிக்க இராணுவத்தினர் காத்திருப்பதை அறிவர். உடனடியாக வாகனங்களைவிட்டு இறங்கித் தப்பித்துக் கொள்வர்.

எல்சல்வடோர் நாட்டுச் சட்டப்படி

www.tamilarangam.net

18வயதுக்கு மேற்பட்ட எவரும் இரண்டுவருடங்கள் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபட வேண்டும். ஆனால் அந்நாட்டு நடுத்தரவர்க்க குடும்பங்களோ அல்லது கோப்பி செய்கை வியாபாரங்களில் முக்கிய பங்கு வகிக்கும் குடும்பங்களோ தமது பிள்ளைகளை இராணுவப் பயிற்சிக்கு அனுப்பாது செல்வாக்கையும் குடும்பத் தொடர்புகளையும் பாவித்துத் தப்பிவிடுகின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன் வெளிநாட்டு கண்டனங்கள், எதிர்ப்புகள் காரணமாக முன்னைநாள் ஜனாதிபதி நெப்போலியன் டுஆர்டே தனது இராணுவத்தை அனுப்பி இரவு விடுதிகளை முற்றுகையிட்டு 200 பணக்கார இளைஞர்களை கட்டாயப்படுத்தி இராணுவத்தில் சேர்த்தனர். ஆனால் அதிகாலையில் பெற்றோரின் தலையீட்டால் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். FMLN (Farabundo Mavli Liberation Front) கெரில்லாக்களை நகர்ப்புற, நாட்டுப்புற ஏழை மக்களே ஆதரிக்கின்றனர். அம்மக்களின் மத்தியில் இருந்துதான் இயக்கத்துக்கான உறுப்பினர்களையும் சேர்கிறார்கள். இராணுவம் இந்த ஏழைகளைக் கைதுசெய்து பயிற்சி கொடுப்பதன் மூலம் இயக்கம் உறுப்பினர்களை சேர்ப்பதனை மட்டப்படுத்தலாம் என நினைக்கிறது.

எல்சல்வடோர் இராணுவப் பேச்சாளர் மேஜர் மௌரிசியோ சாவஸ் கேசரஸ் கருத்துத் தெரிவிக்கையில், 'இராணுவம் ஆட்சேர்க்கும் வழிமுறை உன்னதமானதல்ல. இங்குள்ள ஏழை, எளிய மக்கள் மத்தியில் இருந்தே அதிகப்படியான உறுப்பினர்களை நாம் இராணுவத்தில் சேர்க்கிறோம். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். மத்தியதரக் குடும்பத்தில் வாழும் இளைஞர்கள் அநேகமாக மேற்படிப்பை மேற்கொண்டு மருத்துவராகவோ, பொறியியலாளராகவோ அல்லது வேறு ஒரு மேன்மையான தரத்தையோ அடைய முடியும். இதனால் நாடு நன்மை பெறும்' என்றார்.

சந்தர்ப்பங் கிடைத்திருக்குமானால், கட்டாயமாக இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட இளைஞர்களும் பாலகர்களும் இராணுவத்தில் கடமையாற்றுவதை விட மருத்துவர்களாகவோ பொறியிலாளர்களாகவோ படித்து முன்னேறியிருப்பார்கள்.



அண்மையில் நண்பர் ஒருவருக்கு கொழும்பில் இருந்து அவரின் சின்னம்மா எழுதிய கடிதத்தில் 'தமிழர்கள் நினைத்தவுடன் உலகின் எந்தப் பாகத்துக்கும் போய்வருகிறார்கள்,. ஆனால் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் போவதுதான் கஷ்டமாக உள்ளது' என்று சுவைபட எழுதியிருந்ததார். கீழே அடிக்குறிப்பில் 'அப்படிப் போவதானாலும் பஸ்சுக்கு 1000ரூபா கொடுத்து காடுகளூடு 15 மைல் வரை வேறு நடக்க வேண்டுமாம். அப்படித் தாண்டிப் போனாலும் இறுதியல் யமன் 'ஆமி' கையில் தப்பிப் பிழைப்பது கஷ்டம்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

– விதுரன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மஞ்சத்தின் மங்கலமான நினைவுகள் அவனை விட்டு அகலவே இல்லை. றேடியோவில்

'உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல

உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல'

எனும் கண்ணதாசனின் பாடல் போய்க் கொண்டிருந்தது. பாடல் முடிய விரும்பிக் கேட்டவர்கள் பெயர்ப் பட்டியலில் 'சுசீலா' என்ற பெயரைக் கேட்டதும் நெஞ்சுக்குள் இனித்தது ரகுநாதனுக்கு.

இனித் தாங்க முடியாது. எப்பிடியும் இண்டைக்கு அதைச் செய்ய வேணும். ஒழுங்கை முடக்கிலை வைச்சு மடக்க வேணும். ஒருத்தரும் பார்க்கக் கூடாது. முருகா... பிள்ளையாரே... அம்மாளே ஒருத்தரும் வரக்கூடாது அந்த நேரத்திலை. சிலநேரத்திலை இந்த அருளண்ணை அல்லாட்டிச் சோமன் எதிரே வருங்கள். அருளண்ணை கண்டாத் துலைஞ்சுது, ஊருக்கே தெரிஞ்ச மாதிரி. சோமன் கண்டாப் பறவாயில்லை. குடிச்சுப் போட்டு பாடுற பாட்டோடை பாட்டாய்

"என்னவோ நடக்குது


நாடகமாய் நடக்குது" எண்டு ரெண்டு வரியைச் சேத்துவிடுவான்.

எப்பிடியும் இண்டைக்கு அந்த வேலையைச் செய்து முடிக்க வேணும். இப்ப மணி மூண்டாகுது. இன்னும் அரை மணித்தியாலம் கிடக்கு.

ரகுநாதன் எழுந்து சேட்டை மாட்டினான். கண்ணாடியில் மீண்டும் ஒருமுறை அழகு பார்த்தான். எவ்வளவுதான் பிடிச்சு அழுத்தினாலும் பிடரியிலை ரெண்டு மயிர் கெம்பிக்கொண்டு நிக்கத்தான் செய்யுது. இரண்டு பறவைகள் மரக் கொப்பொன்றில் இருப்பது போன்ற படமும்... ஒரு இருதயமும் அம்பும் போட்ட படமும்.... நடுவில் 'I Love You.. பதிலுக்குக் காத்திருக்கிறேன்.' என்றும் எழுதி அழகாக மடிக்கப்பட்ட கடிதத்தை எடுத்துப் பொக்கற்றினுள் பத்திரப்படுத்திக் கொண்டான்.

மணி மூன்றரையாகப் போகுது. சைக்கிள் நகர்ந்தது. தெருவில் அதிகம் சனங்கள் இல்லாதது சற்று நிம்மதியாக இருந்தது. ரியூஷன் வழக்கமாக மூன்று மணிக்கு முடியும். சுசீலாவும் சறோஜாவும் ஒண்டா ஆடி ஆடி மதவடிக்கு வர மூண்டரை ஆகும். மதவடியால் சறோஜா திரும்பி விடுவாள். சுசீலா மட்டும் தனியே வந்து ஒழுங்கை முடக்கால் திரும்பிச்

அத்தியாயம் 9




# மஞ்சம்

www.tamilarangam.net

சிறிது தூரம் நடக்க அவளது வீடு.

தூரத்தில் சறோவும் சுசியும் வருவது தெரிந்தது. இவன் ஒன்றும் அறியாத அப்பாவி போல் அவர்களைத் தாண்டிச் சென்றான். மனங்கேட்கவில்லை. திரும்பிப் பார்த்தான். அதே நேரத்தில் சுசீலாவும் திரும்பிப் பார்த்தாள். அதிர்ச்சியும் ஆனந்தமும்... முருகா... பிள்ளையாரே... 50% வெண்டது மாதிரி இருந்தது அவனுக்கு. மதவடியாலை சறோஜா திரும்பிவிட்டாள். தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவன் சைக்கிளைத் திருப்பினான். நெஞ்சு படபடவெண்டு அடித்துக் கொண்டிருந்தது. அடிக்கொரு தரம் பின்னால திரும்பி யாராவது பார்க்கிறார்களோவெனப் பார்த்தான். லைன் கிளியர். நல்ல காலம் அருளண்ணை வரேல்லை. ஒழுங்கை முடக்கிலை சுசீலா திரும்பவும்... இவன் மிக அருகில் சென்று பிறேக் பிடிச்சு 'சுசிலா' என்று கூப்பிடவும் சரியாக இருந்தது.

திடீரெனத் திரும்பி... ரகுவின் கண்களை நேரே சந்தித்ததால் வந்த குழப்பம், பீதி, .... நடுக்கம் எல்லாம் ஒன்றாய் முகத்தில் தெரிய வார்த்தை வெளியே வராமல் சொண்டுகளும் கண்களும்

"என்ன" என்றன.

"இந்தாங்கோ" படபடத்தான் ரகு.

"என்ன இது ஐயோ பயமாயிருக்கு" நடுங்கினாள்.

கடிதத்தைக் கொடுத்தவனின் கைகளும் வாங்கினவளின் கைகளும் பதறிய பதட்டத்தில் கடிதம் கீழே விழுந்தது. குனிந்து எடுத்துக் கொண்டு திரும்பியும் பாராமல் நடக்கத் தொடங்கினாள் சுசீலா.

"நாளைக்கு இதே இடத்தில பதிலைச் சொல்லுங்கோ" ஒருவாறு பெரிதாகச் சொன்னான் ரகு. சடாரென சைக்கிளைத் திருப்பிக் கொண்டு ஏதும் அறியாதவன் போல் தெருவில் போகத் தொடங்கினான்.

நீலப் பாவாடையும் நீல செக்போட்ட பிளவுசும்... கடிதத்தை எடுக்கக் குனிந்தபொழுது முன்னால் விழுந்த கூந்தலை அவள் பின்னுக்குத் தள்ளிய வாகவமும்... சொண்டுகளின் துடிப்பும்...

உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல, கண்ணதாசா நீ பெரியவன்தான். சைக்கிள், வீட்டுக் கேற்றையுந் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது.

* * *

24மணி நேரம்– 24யுகங்களாகப் பட்டது.



www.tamilarangam.net

படுக்கையில் புரண்டு புரண்டு நிமிர்ந்ததும்... சாமத்தில் எழும்பித்

தண்ணி குடிக்கப்போய்... குசினி அலுமாரிக் காலில் தட்டுப்பட்டுக் காலைத் தாண்டியதும்...

"என்ன இண்டைக்கு ஒருமாதிரி துள்ளிக்கொண்டு திரியிறீர்" என இந்திரா கேட்டதும்..., பள்ளிக்கூடத்தில் வேறுயாரையோ கேள்வி கேக்க தன்னை என நினைச்சுப் பிழையாய்ப் பதில் சொல்லி அசடு வழிஞ்சதும்... எல்லாம் இந்த மூண்டரை மணிக்குத்தான். கடைசியாக மூண்டரை மணியும் வந்தது. நேற்றுப் போலவே எல்லாம் திட்டமிட்டபடி நடந்தது. அருளண்ணையோ சோமனோ தெருவில இல்லை. எல்லாம் நல்ல வசதி. நேற்றைய கலர் கலர் நினைவில் சைக்கிளில் தெருவில் பாரிய எதிர்பார்ப்புடன் ரகு வந்துகொண்டிருந்தான். என்ன ஆச்சரியம்? என்ன உலகம்? என்ன தலைவிதி? என்ன நரகம்? மதவடியால சரோஜா மட்டும் நடந்து கொண்டிருந்தாள். எங்கே என் சுசீலா? என்ன நடந்தது? கடிதம் பெற்றோர் கைகளில் மாட்டிக் கொண்டதோ? அல்லது ஏதும் சுகமில்லையோ? அல்லது அந்த மூன்றுநாள் காய்ச்சல் சற்றுக் கடுமையாக்கியதோ? எங்கே அவள்? எங்கே என் தேவதை? என்ன செய்யலாம்? நேரே அவள் வீட்டுக்குப் போய் ராஜகுமாரன் மாதிரி அவளை அலாக்காகத் தூக்கிக்கொண்டு வந்துவிடலாமா?

தத்தளித்துப்... பதறி... தலையைக் குழப்பிக் கொண்டு... 5ஆவது தடவையாக ஒழுங்கை முடக்கிலும் மதவடியிலுமாகச் சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தான் ரகு.

(தொடரும்)

# மறைக்கப்பட்ட மற்றொரு உண்மை

இலங்கை தென்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜேவிபி) இலங்கைப் படையினருக்கும் இடையே நிகழ்ந்த மோதல்களில் 1988- 90 வரையுள்ள காலப்பகுதிகளில் சுமார் 16000 பேரளவில் இறந்தனர் என்று சொல்லப்பட்ட போதும் தற்போது பல திடுக்கிடும் உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்கியுள்ளன. இக் குறிப்பிட்ட காலப்பகுதியில் இறந்தவர்கள் தொகை 50000 இற்கும் மேல் என்று செய்திகள் வெளிவந்துள்ள அதேவேளை இத்தொகை 80000 இற்கும் அதிகம் என இன்னுமோர் தகவல் தெரிவிக்கின்றது. எது உண்மையெனத் தெரியாவிடினும் உத்தியோக பூர்வமாக வெளிவந்த இறநவர் தொகை 16000ஐயும் விட இத்தொகை பலமடங்கு அதிகம் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட எந்த சர்வதேச அமைப்பும் குறித்த காலப்பகுதியில் இயங்க முடியாத நிலை ஏற்பட்டமையும், அவ்வாறு இயங்கிய பல பொது அமைப்புகளைச் சார்ந்தோர் அரசின் இராணுவ மற்றும் விசேட பொலிசாராலும் மக்கள் விடுதலை முன்னணியினராலும் படுகொலை செய்யப்பட்டமையால் போதிய தகவல்களைத் திரட்ட பலராலும் முடியாத நிலை ஏற்பட்டது. தவிர சிங்கள மக்களுக்காகக் குரல்கொடுக்க எந்தவொரு அமைப்பும் உலகநாடுகளில் இல்லாமையாலும் பாதிப்புபற்றிய முழுவிபரம் முழுமையாக வெளிவர முடியவில்லை. 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எதிர்க் கிளர்ச்சியில் 25000பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

- விதுரன் -

www.tamilarangam.net

# பட்ட காலில் படும்

பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும் எனும் பழமொழிக்கு ஒப்ப மலையக மக்களது துன்பம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இலங்கைவாழ்த் தமிழர்களுள் மிக மோசமான துன்பங்களுக்கு உள்ளானோர் மலையகத் தமிழர்கள்தான். இலங்கையில் தமிழர்கள் பிரச்சனை எழுந்தபோது எல்லாம் அது ஏதோ ஒருவகையில் மலையகத் தமிழர்களைப் பாதித்தே வந்துள்ளது. இத்தகைய சூழல்களில் இவர்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

அண்மையில் விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இனவாத அரசுக்கும் இடையே போர் மூண்டதால் வடக்கு- கிழக்கில் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்டன. சிங்கள இனவாத அரசு தனது கோரப் பற்களை இங்கு பதித்துவருகிறது. இது இவ்வாறிருக்க மலையகத்திலுள்ள தமிழ்மக்கள் வடக்கு-கிழக்கிலுள்ள இன்றைய சூழ்நிலைக்கு எந்தவித காரணகர்த்தாக்களோ அன்றேல் தொடர்பாளர்களோ இல்லை. ஆனால் மலையகத்தில் மக்கள் இராணுவத்தாலும் பொலீசாராலும் கொலை செய்யப்படுவதும் பெண்கள் தீயிலிடப்படுவதும் தாக்கப்படுவதும் தொடர்ந்த வண்ணமுள்ளன. பலர் உளவுப் படையாலும் இராணுவத்தாலும் கைதாகி சிறையில் இடப்பட்டுள்ளனர்.

வடக்கு- கிழக்கு நிலைமைகளைச் சாட்டி சிங்களப் பேரினவாதம் மலையக மக்களைப் பழிவாங்குகிறது. இதற்கான பின்னணிக் காரணிகளும் உண்டு. மலையகத்தில் தொடர்ந்தும் அரசியல் எழுச்சி எழாது பயமுறுத்தல் மூலம் அதை அடக்கிவிடலாம் என அரசு நினைக்கிறது போலும். இனவெறியர்களதும் காடையர்களதும் தயவில் வளர்ந்த சிங்களப் பேரினவாத அரசு, இவர்களின் உணர்வுகளுக்கு அவ்வப்போது தீனிபோடுவதற்கு தனது கதவை திறந்துவிட்டுள்ளது. இதன்மூலம் சிலகாலத்துக்கு முன் எழுந்த காணிப் பகிர்வுப் பிரச்சனையை இலகுவாக கையாளுவதற்கு வழிசமைக்கிறது இலங்கையரசு. அதாவது சிலமாதங்களுக்கு முன் அரசு பெருந்தோட்ட காணிகளை சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளித்தது. இதனால் மலையகத்தில் பலத்த எதிர்ப்புகள் எழுந்தன. இதை இடைநிறுத்துவதாக அரசு வெளிவேஷமிட்டது. ஆனால் அதன் முற்றுமுழுதான சிங்களமயப் படுத்தல் திட்டத்தின்படி முக்கிய பகுதிகளில் மலையகத் தமிழர்களைத் தாக்குதலுக்கு

## கட்டுப்பாடுகள்

அடிமையாய் வாழ்வது
அற்பத்தனமானது; கேவலமானது.
இயற்கையின் அழைப்புகளையும்
உங்கள்–
சட்டங்கள் ஆள்கின்றன!

அந்தக் கதவுகள்–
திறந்திருக்கும் வேளையில்
எங்கள் வயிறுகள்
மலங்கழிக்கத் தயாராய் இருப்பதில்லை!

வயிறுகள்–
தயாராய் இருக்கும் போதோ
அந்தக் கதவுகள்
மூடியே கிடக்கின்றன!

●

ஹோ– சீ– மின்

www.tamilarangam.net

உள்ளாக்குவதன் மூலம் அவர்களை அப்பகுதிகளில் இருந்து விரட்டியடிப்பதற்கு முனைந்து வருகிறது. இதனால் ஏற்படும் வெற்றிடங்களை எதிர்ப்புகள் இன்றி சிங்கள மயப்படுத்த இரத்த வெள்ளத்தில் விளையாடுகிறது பேரினவாத அரசு. இதன்படி வடக்கு- கிழக்கு பிரச்சனை ஆரம்பமானதைத் தொடர்ந்து, தனது திட்டத்தை அமுல்படுத்த முன், இலங்கையரசு மலையகத்தில் தன் திட்டந் தொடர்பாக ஏற்படும் எதிர்ப்புகளை இனங்கண்டு அதைக் கிள்ளியெறிவதில் முனைந்தது. இதன் பிரகாரம் பலரைக் கைதுசெய்தது. இதில் முக்கிய அரசியற் தலைவர் சந்திரசேகரனையும் கைதுசெய்தது. ஆனால் இதனால் பலத்த எதிர்ப்புகள் மலையகத்தில் எழுந்தன. இதனால் அரசு தவிர்க்க முடியாதவாறு சந்திரசேகரனையும் இன்னும் சிலரையும் விடுதலை செய்து மலையக மக்களது உணர்வினை சாந்தப்படுத்த முனைந்தது. இதனால் அது தனது 'ஜனநாயக' விளம்பரத்தை தேடிக்கொண்டதோடு 'கைது', 'விடுதலை' விளையாட்டின் மூலம்

---

# அமைதியும் வெளிநாடும்

அமைதி வந்துவிட்டதாக நினைத்து வெளிநாடுகளில் வசிப்பவர்களும் வெளிநாட்டு பிரஜாவுரிமை கிடைத்தவர்களும் சிலர் தாம் பிறந்து வளர்ந்த தாய்நாட்டையும் இனசனத்தையும் காண்பதற்காக இலங்கை சென்றனர். ஆனால் திடீரென வெடித்த யுத்தத்தால் நிலமை மோசமடைந்தது. இதனால் இவர்கள் திக்கித் திணறினர். பின் ஒருவாறு செஞ்சிலுவைச் சங்கத்தைத் தொடர்பு கொண்டனர். இவர்களைக் கொழும்புக்கு கொண்டு செல்வதற்காக செஞ்சிலுவைச் சங்கம் அரசிடம் ஒரு கப்பலைத் தந்துதவுமாறு கேட்டது. இலங்கையரசு தார்மீக அரசல்லவா? அது ஒரு பழைய பொதியேற்றும் கப்பலை ஒருநாள் வாடகை 5000 டொலர்கள் என்று பேரம்பேசிக் கொடுத்தது. (சொந்த மக்களுக்காக மாற்றானிடம் கொள்ளையடிக்கிறது மக்கள் அரசு) இந்தக் கப்பல் மூலமாகத்தான் யாழ்க் குடாநாட்டுக்கு உணவு, தபால் போன்றவற்றை செஞ்சிலுவைச் சங்கம் எடுத்து வருகிறது. அங்கிருந்து வெளிநாடுகளில் பிரஜாவுரிமை கிடைத்த 150பேரையும் 'மீட்டும்' வந்துள்ளது. அத்தோடு யாழ்க் குடாநாட்டிலிருந்து வெளியேறுவோர் 'விசேட அனுமதிப் பத்திரம்' பெறவேண்டுமாம்.

இவ்வாறு பல துன்பங்களுக்கு இடையே இராணுவக் கெடுபிடிகளுக்குள் சிக்கி கொழும்புக்கு வந்தால் அங்கும் துன்பந்தானாம். அரச உளவுப்படை, பொலீஸ் ஆகியவற்றின் கெடுபிடிகளால் தப்பியவர்கள் கொழும்பில் மடமிட்டிருக்கும் 'அவர்களி'னால் நன்கு கவனிக்கப் படுகின்றனராம் (முட்டிக்கு முட்டி தட்டித்தான்). அதுவும் நோர்வேயில் இருந்து வருபவர்கள் என்றால் விஷேடமான முறையில் கவனிக்கப் படுகின்றனராம். 'பழிக்குப் பழிதீர்க்கும் படலம்' எங்குபோய் முடியப் போகிறதோ தெரியவில்லை. "அரசுபோல் அப்பாவி மக்கள் எல்லோரையும் ஒரு குழுவின் ஆதரவாளர்கள் என ஏன் இப்படித் தபுக்கணக்குப் போட்டே எம்மை அழிக்கிறார்கள்" என்று இவர்களால் மிகுந்த துன்பத்துக்கு உள்ளான ஒருவர் இங்கு வந்து அபிப்பிராயம் கூறினார். "இந்தக் கூற்றை வைத்தே இன்னும் சிலர் பலனடையத் திரிவார்கள்" என சுற்றுமுற்றும் பார்த்தவாறே இன்னொருவர் கூறினார்.

– செய்தி கேட்டோன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களை உண்மையான பிரச்சனைகளில் இருந்து திசைதிருப்ப முனைகிறது. அத்தோடு வடக்கு- கிழக்கு நிலைமைகள் காரணமாக உணர்வுபூர்வமாக மலையக மக்கள் வடக்கு- கிழக்கு மக்களுடன் ஒன்றுபட்டு விடாமல் இருப்பதற்கும் அரசு பலத்த முயற்சி எடுத்துவருகிறது. இன்றைய இனஒடுக்கு முறைக்குத் தலைமை தாங்குபவர்களில் முக்கியமானவராகக் கருதப்படுபவர் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா எனும் இனவாதியாவார். இவர் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் அதேவேளை பெருந்தோட்டத்துறை அமைச்சராகவும் உள்ளார். இன்றைய மலையகந் தொடர்பாக எத்தகைய பங்கு இவருக்கு உண்டு என்பது இதனால் வெளிப்படையாகத் தெரிகிறது.

"மக்களே! எமது உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டன. ஜனநாயகம் இல்லை, எனவே ஜனநாயகத்துக்காகப் போராடுகிறோம், பேச்சு சுதந்திரத்துக்காக போராடுகிறோம். நீங்கள் எமது அமைப்பை விமர்சித்து சரியான வழியில் வழிநடத்த வேண்டும்!"

கூட்டத்தில் இருந்து...

"ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கலாமா?"

"யாரடா அவன்?... அவனைப் போஸ்ட்டில் கட்டுங்கள்!!!"

- ஈழத்தோன் -

இதைவிட வேடிக்கை மலையக மக்களது தோள்களில் ஏறிச் சவாரிவிடும் இ.தொ.க. தலைமை இன்றைய இனவாத அரசில் பங்குவகிப்பதாகும். இவர்களில் தொண்டமானும் செல்லச்சாமியும் அமைச்சர் பதவிகளை அனுபவிப்போர். இன்றைய மலையக நெருக்கடி தொடர்பாக இவர்கள் எத்தகைய காத்திரமான நடவடிக்கைகள் எடுத்தார்கள் என துளாவித் தேடினாலும் கண்டுபிடிப்பது கஷ்டம். பழைய சந்தர்ப்பவாத தமிழ்த் தலைமைகளில் நின்றும் தம்மை மேம்பட்டவர்களாகக் காட்டி ஆயுதமேந்தி புறப்பட்ட வடகிழக்கு தமிழர் அமைப்புகள் சில, மலையகத்தின்பால் அக்கறை கொண்டனவாக தம்மைக் காட்டிக் கொண்டன. அத்தோடு தம்மை முற்போக்காளராகவும் காட்ட முனைந்தன. இதற்காக அவ்வப்போது சில அறிக்கைகளையும் வெளியிட்டு வந்தன. இவற்றில் சில அமைப்புகள் இன்று பாராளுமன்றத்தில் அங்கமும் வகிக்கின்றன. ஆனால் மலையக மக்களுக்கான எந்தவித காத்திரமான நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் இத்தகைய அமைப்புகள் அண்மையில் எழுந்த மலையக மக்களை நாடுகடத்துவது தொடர்பான அரசின் நடவடிக்கையை எதிர்த்து எந்தளவில் செயற்பட்டனர்? அல்லது பாராளுமன்றத்தில் மலையக மக்களின் அவலநிலையை அம்பலப் படுத்தினரா? இத்தகைய தலைமைகளும் போலியா? இன்றைய இக்கட்டான சூழலில் இத்தகைய கேள்விகள் எழுவது இயல்பு, நியாயமானது. இதற்கு விடைகாண்பதன் மூலம் எதிர்கால நடவடிக்கைகளை செப்பனிடலாம்.

- குறிஞ்சித்தன் -

www.tamilarangam.net

# ஈழத்துத் திருவிளையாடல்

- துங்காய் -



"ஆயிரம் டொலராச்சே! ஆயிரம் டொலராச்சே! எப்படி எடுப்பேன்? எப்படி எடுப்பேன்? ஒரு ஐடியாவும் வருகுதில்லையே! ஒரு AK 47 இருந்தாலும் ஒரு 'பாங்க்' அடிக்கலாம். ஆண்டவா! கூப்பிடக்கூடாது, அவன் வரமாட்டான். இயக்கங்களைப் போல அவனையும் நம்பக்கூடாது!"

"தர்மி... "

"ம் யாரது?"

"யாம்!.. "

"யார் நீர்?"

"பொது மகன்... "

"யோவ், நம்பமாட்டேன். இப்பிடிச் சொல்லித்தான் எல்லாரும் தலையைச் சுத்துறாங்கள்"

"மக்கள் கஷ்டம், மக்கள் கருத்து ஆகியன கூட்டி சுந்தரத் தமிழில் கவிபாடும் புலவன் யான். உமக்கு ஆயிரம் டொலர் தானே வேண்டும். அதை உமக்குக் கிடைக்க வழிசெய்கிறேன்"

"என்ன நீர் வழிசெய்கிறீரா! எப்படி?"

"யாம் கவி புனைகிறோம், நீர் அதை எடுத்துச் சென்று ஐ.நா. சபையில் கொடுத்து ஆயிரம் டொலர்களைப் பெற்றுக் கொள்ளும்"

"ம் உம்முடைய பாட்டை எடுத்துச் சென்று என்பாட்டு என்று சொல்லவா? ஒய்! இந்தக் காலத்தில் சொந்தமாகச் செய்யிறதையே யாரும் உரிமை கோருவதில்லை. இப்ப நீர் என்னவெண்டா உம்முடைய பாட்டுக்கு என்னை உரிமை கோரச் சொல்லுறீர். அதுசரி உமக்கு என்ன தகுதியிருக்கு?"

"நைந்த உடையையும் கையில் விலங்கையும் பார்த்தால் புரியவில்லை? வேண்டுமானால் என்னைப் பரீட்சித்துப் பாருமேன் உமக்குத் தகுதியிருந்தால்!"

"என்ன எங்கிட்டயே மோதுறாயா?"

"கேள்விகளை நீ கேட்கிறாயா, இல்லை நான் கேட்கவா?"

"என்னது, கேள்விகளைப் பொதுமகன் கேட்பதா? எந்த ஊரில் இந்த வழக்கம்

www.tamilarangam.net

இருக்கு? எனக்குக் கேட்கத்தான் தெரியும்..."

"தயார்... "

"இணைந்தே இருப்பது?"

"வடக்கும் கிழக்கும்"

"இணையாதிருப்பது?"

"மக்களும் இயக்கங்களும்"

"பிரிக்க முடியாதது?"

"இயக்கங்களும் அராஜகமும்"

"பிரிந்தே இருப்பது?"

"தலைமைகளும் ஜனநாயகப் பண்பும்"

"ஷெல்லுக்கு?"

"இலங்கை, இந்திய இராணுவங்கள்"

"சொல்லுக்கு?"

"ஜே.ஆர், பிரேமதாசா"

"AK 47 க்கு?"

"பெடியள்"

"ஜனநாயகத்துக்கு?"

"கிலோ என்ன விலை?"

"என்கிட்டேயே பேசுறியா? கேள்வி கேட்டா திரும்பக் கேள்வி கேக்கக் கூடாது... அடுத்தது துரோகத்துக்கு?"

"தமிழ்த் தலைமைகள்"

"புரட்சியாளன்?"

"மக்கள்"

"ஐயா! நீர் புலவர்... பாட்டைத் தாருங்கள்"

"வென்று வா!"

தர்மி திரும்பி வருகிறார்.

"ஐயோ! யாரோ லைட் போஸ்டில கட்டிவைச்சு உதைக்கிற மாதிரி இருக்கே. இதுதான் அப்பவே சொன்னேன் சொந்தமா பாட்டெழுத வேணுமெண்டு. எனக்கு நல்லா வேணும். அப்பா! அவனைக் கூப்பிடக் கூடாது"

"தர்மி!"

"வந்திட்டீரா?"

"பரிசு கிடைத்ததா?"

"எல்லாங் கிடைச்சுது, உதை ஒண்டுதான் விளாத மிச்சம்"

"நடந்ததைக் கூறும்!"

"உம்முடைய பாட்டில குறையாம்"

"என் பாட்டிலா" சொற்குற்றமா? பொருட் குற்றமா?"

"சொற்குற்றமென்றால் பரவாயில்லை. ஆயிரம் டொலருக்குப் பதிலாக ஆயிரம் குரோணர்கள் தரச் சொன்னேன்... AK பிடிப்பினும் றொக்கற் லோஞ்சர் பிடிப்பினும் குறறம் குற்றமே என்று அடிச்சுச் சொல்லுறான்"

"யாரவன்?"

"உம் பாட்டன் ஒருத்தன் இருக்கிறான்... யாரோ 'ஜனநாயகவாதி'யாம்!"

"என்ன குற்றங் கண்டான்?"

"அச்சமின்றி துச்சமின்றி புரட்சி செய்வது தலைவர்கள் என்று நீர் பாட்டு எழுதியுள்ளீர், அது பிழையாம் மக்களே என்கிறான் அவ் ஜனநாயகவாதி..."

"வாழ்க!"

"யார் நானா?"

"இல்லை அந்த ஜனநாயகவாதி... உலகில் இன்னமும் தர்மமும் நீதியும் ஜனநாயகமும் நிலைக்க குரல்கொடுக்க மக்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்து போகத்தான் இத் திருவிளையாடல் புரிந்தோம்... வருகிறேன், வாழ்க ஜனநாயகம்!"

"என்ன இவர் 'சேம்சைட் கோல்' போட்டுட்டுப் போறார்?"●

மூன்று சிறுமிகள் பேசிக்கொண்டனர்

முதலாவது சிறுமி: நாங்கள் 'அம்மா அப்பா விளையாட்டு' விளையாடுவோமா?

இரண்டாவது சிறுமி: சரி, நான் அம்மா நீ அப்பா.

மூன்றாவது சிறுமி: அப்ப நான்?

முதலாவது சிறுமி: நீதான் எமது விவாகரத்து வழக்கைக் கையாளும் வழக்கறிஞர்.

- சஞ்சயன் -






www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்